

# சக்தி

## மாத வெளியீடு

*

பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| முஸ்லீம்களைக் கேட்கிறோம் | தலையங்கம் | 1 |
| காலச் சுழல் | குறிப்புகள் | 4 |
| கிழக்கே கொந்தளிப்பு | ஆர். எச். நாதன் | 5 |
| அப்பாவின் மீசை | லா. ச. ராமாமிருதம் | 10 |
| படங்கள் | | 17 - 20 |
| அச்செழுத்து மகிமை | தி. ஜ. ர. | 21 |
| பாலஸ்தீன் குமுறல் | எம். இஸ்மத் பாஷா | 25 |
| மலை வாழ்க்கை | ஜாவாக் கதை | 29 |
| படங்கள் | | 37 - 44 |
| சத்தியம் தேடியவன் | சுதர்சன் | 45 |
| வைத்தியர் திண்டாட்டம் | கே. ராமராவ் | 53 |
| செய்கையிலே பக்குவம் | கே. எம். முன்ஷி | 58 |
| படங்கள் | | 61 - 64 |
| பிளந்த சுவர் | மஞ்சேரி எஸ். ஈச்வரன் | 65 |
| விசித்திர வரம் | வரலாறு | 75 |
| பரதேசப் படிப்பு | தாஸ்-வாட்முல் | 77 |


*

அணா 8


பார்த்திப ஹூ ஐப்பசி மீ
மலர்: 12 இதழ்: 7

# மங்கை

•

மாதம் ஒரு புத்தகம்
பெண்களுக்காக வெளிவருவது

குடும்பப் பாதுகாப்பு, குழந்தை வளர்ப்பு, தையல் வேலை, சமையல், கவிதை, கட்டுரை, கதை முதலிய பல விஷயங்களுடன் வருஷத்தில் பனிரண்டு புத்தகங்கள்

பதிப்பாசிரியர் : குகப்ரியை

ஒரு புத்தகத்தின் விலை ரூபாய் ஒன்று

தபால் செலவு தனி

ஒரு வருஷத்தில் வெளிவரும் 12 புத்தகங்களுக்கும் ரூ. 12 முன் பணம் அனுப்புபவர்களுக்கு, தபால் செலவின்றி அனுப்பப்படும்

ஏஜண்டுகள் தேவை


வெளியிடுவோர் :

**சக்தி காரியாலயம்**

ராயப்பேட்டை : : சென்னை


நாகரீகமுள்ள
ஆடைகளுக்கு
S.R.B. குப்புசாமி அய்யர் & ஸன்
FORMERLY
S.R. பாலுசாமி அய்யர்
& ஸன்ஸ்
83, நைனியப்ப நாயக்கன் தெரு
(போன் 3506) P.T. மதராஸ்,
230, கீழமாரெட் வீதி,
(போன் 36) மதுரை.

18 NOV 1945

## ஆஸ்துமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்



தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோஹித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல, "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம்) முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல், இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின் (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம், வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்பு பெட்டி உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்து கடைகளிலும் கிடைக்கும். 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனாபஜார்.
2. அமிருத் ரத்னாகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.



**புரோகித்ஸ் ஸ்வாஸஹரி**



## அரிய நூல்கள்

●

### ராஜாஜி மலர்

| | |
|---|---|
| கதைகள் | 4-8 |
| கட்டுரைகள் | 4-8 |
| அறநூல்கள் | 5-0 |

### காந்திஜி நூல்கள்

| | |
|---|---|
| பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள் | 2-8 |
| நமது மொழிப் பிரசினை | 2-8 |

கவிமணி
### தேசிகவிநாயகம் பிள்ளை
நூல்கள்

| | |
|---|---|
| மலரும் மாலையும் | 6-0 |
| ஆசிய ஜோதி | 2-0 |
| நாஞ்சில் நாடு | 1-0 |

தபால் செலவு தனி

●

## புதுமைப் பதிப்பகம்
லிமிடெட்
காரைக்குடி

## தீபாவளி வெளியீடு



# மீரா



a **CHANDRAPRABHA PRODUCTION**

*Directed by* **ELLIS. R. DUNGAN.**

*Studio*..... **NEWTONE**

**NARAYANAN Co** *Release*

P.S.M.Co.

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

| | | |
|---|---|---|
| 5,00,000 நூற்கும் கதிர்கள் | ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல். | நம்பர் 80 வரை நூல்கள் |

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறார்கள்.

## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

பார்த்திப
மலர் 12

# சக்தி

ஐப்பசி
இதழ் 7

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

## முஸ்லீம்களைக் கேட்கிறோம்

பொதுத் தேர்தல் சமீபிக்கிறது. காங்கிரஸின் தேர்தல் அறிக்கை வெளிவந்துவிட்டது. காங்கிரஸ் அஞ்ஞாத வாசம் புரிந்து விட்டு வந்திருக்கிறது. தேசிய விடுதலைச் சக்திகளால் உருவானது காங்கிரஸ். அந்தச் சக்திகளின் தனிப் பெரும் பிரதிநிதி காங்கிரஸ். சுதந்தரத்தையே தாரக மந்திரமாகக் கொண்டது காங்கிரஸ். முஸ்லிம் லீக்கை யல்லாமல், வேறு பெருத்த கட்சியொன்றும் காங்கிரஸுக்கு எதிராய்க் கிடையாது. காங்கிரஸ் வெற்றிபெறப் போவது நிச்சயம்.

காங்கிஸின் தேர்தல் அறிக்கை வெளிவந்து விட்டது. காங்கிரஸ் பிரிட்டனின் எதிரி; அது வேறு யாருக்கும் எதிரியல்ல. ஆனால், முஸ்லீம் லீக்கின் தேர்தல் அறிக்கை இன்னமும் வெளிவரவில்லை. அது காங்கிரஸுக்கு அல்லவா எதிரி? காங்கிரஸ் அறிக்கையைப் பார்த்தல்லவா ஏட்டிக்குப் போட்டி அறிக்கை தயாரிக்க வேண்டும்? லீக் காத்திருந்தது. இனித் தன் அறிக்கையைத் தயாரித்துவிடும்.

அகில இந்திய சமஷ்டி அரசியல் அமைப்பு வேண்டும் என்றும், அதிலே மாகாணங்களுக்குப் பரிபூர்ண சுதந்தரம் இருக்க வேண்டும் என்றும், காங்கிரஸ், தன் கொள்கையைத் தெளிவாய்ச் சொல்லி விட்டது. ஆனால், லீக் தலைவர் ஜின்னா தமது பாகிஸ்தான் பல்லவியை விடவில்லை. (1) சிந்து, (2) பலுசிஸ்தானம், (3) பஞ்சாப், (4) வடமேற்கு எல்லைப் புறம், (5) வங்காளம, (6) அஸ்ஸாம் இவைகளைக் கொண்ட முஸ்லீம் பாகிஸ்தான் ராஜ்யமே வேண்டும் என்கிறார் ஸ்ரீ. ஜின்னா. அவர் விரும்புகிறபடி, ஒரு பாகிஸ்தான் ராஜ்யம் அமையுமா என்பது பெரிய சந்தேகம். அவர் விரும்புகிறபடி, அவ்வளவு பெரிய பாகிஸ்தான் ராஜ்யம் அமையப் போவதோ ஒரு நாளுமில்லை. முஸ்லீம்கள் பெரும்பான்மையாயுள்ள இடங்களை மட்டும் சேர்த்த பாகிஸ்தான், ஒருவேளை அமையலாம். அது மிகச் சிறியதாகத் தான் இருக்கும். அந்தச் சிறு ராஜ்யத்தை - பொருளாதாரத்திலே தவிக்கக்கூடிய ராஜ்யத்தை - முஸ்லீம்கள் விரும்புவார்களானல், அது அவர்களின் துர்ப்பாக்கியம். அதைப் பற்றி நாம் கவலைப்பட்டுப் பயன் இல்லை. ஆனால், இந்தச் சமயத்தில், நம் மாகாணத்திலே லீக்கை ஆதரிக்கும் முஸ்லீம்களைச் சில கேள்விகள்

கேட்கிறோம். எல்லாரும் இந் நாட்டு மக்கள் என்ற நோக்கிலே, தேசிய வாழ்வில் முஸ்லீம்கள் வேறே நாம் வேறே என்ற எண்ணம் துளியுமில்லாத நிலையிலே, கேட்கிறோம்:

(1) வடக்கே பெரும்பான்மையாய்த் தாங்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள முஸ்லீம்கள், தனி ராஜ்யம் பெறுவதாகவே, வைத்துக் கொள்வோம். நீங்கள் எதற்காக, அதை ஆதரிக்கிறீர்கள்? அதிலே உங்களுக்கு என்ன லாபம்?

(2) இங்கே பெரும்பான்மையான ஹிந்துக்களுக்கு நடுவிலே, நீங்கள் குடியும் குடித்தனமுமாய் வாழ முடியவில்லையா? உங்கள் தொழில்கள் நடைபெறவில்லையா? உங்கள் நலன்கள் பாதகமடையா திருந்துவர வில்லையா? உண்மையிலே இல்லை யென்று கருதுகிறீர்கள்? வருங்காலத்தைப் பற்றி, நிஜமாகவே உங்களுக்குப் பயம்தானா?

(3) பயம்தான் என்றால், வடக்கே பாகிஸ்தான் அமையும் போது, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இங்கே பாதுகாப்புகள் பெறுவோம் என்று சொல்லாதீர்கள் ஹிந்துக்களிடம் உங்களுக்கு நம்பிக்கை உண்டென்றால், இப்போதே அந்தப் பாதுகாப்புகளை அகில இந்தியாவுக்குமாகவே பெற்றுக் கொள்ளலாம். நம்பிக்கை யில்லாதபோது, பாதுகாப்புகள் ஒரு பயனு மில்லை. ஆகையால், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் மூட்டை முடிச்சுகளை யெல்லாம் கட்டிக்கொண்டு, பிரயாணம் புறப்பட்டு, வடக்கே பாகிஸ்தான் ராஜ்யத்துக்குக் குடியா போகப் போகிறீர்கள்? அது சாத்தியமா? சௌகரியம்தானா?

### 'வெளியேற மாட்டார்கள்'

ஸ்ரீ அப்துர் ரஹிமான் (மாஜி கேரளக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்) ஒரு விஷயத்தைப் பிரஸ்தாபித்தார்: "பாகிஸ்தான் ஏற்பட்டு விட்டால், சிந்துவில் உள்ள சிறுபான்மை வகுப்பார்கள், ஹிந்துஸ்தான் பிரதேசங்களுக்குப் போய்க் குடியேறி விடலாமாம். சமீபத்தில் இப்படிக் குறிப்பாய்ச் சொன்னார் ஸ்ரீ ஜின்னா,

"ஆனால், சென்னை மாகாணத்தில் சிறுபான்மையோராய் உள்ள முஸ்லீம்கள், தங்கள் மாகாணத்தைவிட்டுப் பரதேசம் புறப்பட்டு, பாகிஸ்தான் ராஜ்யத்தில் குடியேறத் தயாரில்லை. ஆகையால், பாகிஸ்தான் கேட்கும் முஸ்லீம் லீக்கை, சென்னை முஸலீம்கள் ஆதரிப்பார்களானால், அதற்கு அர்த்த மில்லை. ஹிந்துக்களால் தங்களுடைய நலன்களுக்கு அபாயம் உண்டாகிவிடும் என்ற கூச்சலுக்கு அவர்கள் செவிகொடுக்கக் கூடாது. அவர்கள் ஐக்கியமாயிருந்துகொண்டு, இந்திய விடுதலைக்கே பாடுபட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்."

—மாடர்ன் ரிவ்யூ,

(1) குடிபோவது சாத்தியமல்ல, சௌகரியம் அல்ல என்றால், வேறே என்ன செய்யப் போகிறீர்கள்? "ஓ! வடக்கே எங்கள் சகோதர முஸ்லீம்களின் பாகிஸ்தான் ராஜ்யம ஏற்பட்டால், அங்கே இந்துக்கள் சிறுபான்மையா யிருப்பார்கள். இங்கே இந்துக்கள் எங்களை இம்சித்தால், அங்கே முஸ்லீம்கள் இந்துக்களை இம்சித்து, பழிக்குப்பழி வாங்கி விடுவார்கள்" என்று உங்களிலே சிலர் சொல்லுகிறார்கள். இதற்கு ஏதாவது அர்த்தம் உண்டா? தென்னை மரத்திலே தேள்

கொட்ட, பனைமரத்துக்கு ரெறி யேறுவது எங்கேயாவது நடக்கிற காரியமா? நீங்கள் இம்சைப் படும்போது, பாகிஸ்தான் இந்துக்களும் இம்சைப் படுவதிலே உங்களுக்குத் திருப்தி ஏற்பட்டு விடுமா? உங்கள் புண்ணெல்லாம் ஆறிவிடுமா?

(5) ஆறு தென்றல், வேறே எதற்காக நீங்கள் பாகிஸ்தானை ஆதரிக்க வேண்டும்? "நாங்கள் துன்புற்றால், பாகிஸ்தான் முஸ்லீம்கள் சும்மா பார்த்துக் கொண்டிருப்பார்களா? மாட்டார்கள். இங்கே வந்து யுத்தம் தொடுப்பார்கள்" என்று நம்புகிறீர்கள்? உங்களுக்கு அந்நியமான ஒரு முஸ்லீம் ராஜ்யம் உங்களுக்காகப் பரிந்து கொண்டு வருமானல், புதிய பாகிஸ்தானு வேண்டுப்? ஆப்கன், இரான், அரபு, ஸிரியா, துருக்கி முதலிய ராஜ்யங்கள் உலகிலே, இந்தியாவுக்குச் சமீபமாகவும் தான், இருக்கின்றனவே; அவையெல் வந்து உதவலாமே! உதவுமா? இன்று உதவுகின்றனவா?

வடக்கே உள்ள சில முஸ்லீம்கள் பாகிஸ்தான் கேட்பது எப்படியோ, என்ன நம்பிக்கையாலோ, என்ன ஆசையாலோ, என்ன நோக்கத்தாலோ நாம் அறியோம். ஆனல், நீங்கள் அதை ஆதரிப்பது மட்டில் நமக்குச் சிறிதும் புரியவில்லை. பொதுவாக, தமிழ் நாட்டுமக்கள் அனைவரையும் போலவே, தமிழ் நாட்டு முஸ்லீம்களும் காங்கிரஸைத் தான் ஆதரிக்க வேண்டும். அதிலே தான் அவர்களுக்கும் விமோசனம்; மற்றவர்களுக்கும் விமோசனம்; அகில இந்தியாவுக்குமே விமோசனம். தமிழ்நாட்டு லீக் முஸ்லீம்கள் ஆற அமரச் சிந்திப்பார்களானல், இந்த முடிவுக்கே வரவேண்டும்.

*

---



'சக்தி' அதிபரும் 'ஸண்டே டைம்ஸ்' டைரக்டர்களில் ஒருவருமான ஸ்ரீ வை கோவிந்தன் தாயார் ஸ்ரீ விசாலாட்சி ஆச்சி 60 - வயதில் 15-10-45ல் இரவு புதுக்கோட்டை ஸமஸ்தானம், ராயவரத்தில் காலமானர். அன்னாரின் நான்கு புதல்வர்கள் ராம. ரங்கனதன், வை. கோவிந்தன், ராம. சீனிவாசன், ராம. தியாகராஜன் ('பாப்பா அதிபர்'), மற்றுமுள்ள உறவினர்களுக்கு நமது அனுதாபம்.

---

*

# காலச்சுழல்

**போஸ் சேனை விசாரணை :** பர்மா, மலாயா முதலிய இடங்களிலிருந்து பிரிட்டிஷ் சர்க்கார் ஓடி வந்த காலம். அங்கே பின் தங்கிப் பலதரமான இந்தியர்கள் சிக்கிவிட்டார்கள். நிர்ப்பந்தத்தாலோ, பிற காரணங்களாலோ, அவர்களில் சுமார் 50 ஆயிரம் பேர், சுபாஷின் தலைமையில் ஒரு சேனையாய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் இந்தியாவைப் படையெடுத்து, சர்க்காரைக் கவிழ்க்க முயன்றார்களாம். இதுதான் இந்திய தேசிய சேனை என்பது. இவர்களில் சிலர் ஏற்கனவே பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளால் குற்றம் சாட்டிக் கொல்லப்பட்டார்கள். சாமான்ய சிப்பாய்கள் பலர் விடுதலை செய்யப்படுகிறார்கள். சுமார் 1,500 பேரை இப்போது நவம்பர் 5உ டில்லியில் ராணுவ விசாரணை செய்யப் போகிறார்கள். இந்தத் தேசிய சேனை விஷயம் பல சிக்கல்கள் கொண்டது. இது தோன்றிய சந்தர்ப்பங்கள், இது கொண்ட நோக்கங்கள், இதன் ராஜீய வர்ணம், இந்தியாவின் இன்றைய அரசியல் நிலைமை ஆகியவைகளையெல்லாம் நோக்கும்போது, கேவலம் வறட்டுச் சட்டத்தைக் கொண்டு மாத்திரம் நடவடிக்கை யெடுப்பது உசிதமாகாது. எனவே, இவர்களின் ராணுவ விசாரணையைக் கைவிட வேண்டும், அல்லது ஜனப் பொறுப்புள்ள புதிய இந்திய சர்க்கார் அமையும் வரையில் ஒத்திப்போட வேண்டும். காங்கிரஸ் ஆதரவில் இவர்கள் தரப்பில் வழக்கை நடத்த அமைந்த பாதுகாப்புக் கமிட்டியாரின் கோரிக்கை இது. இந்திய சர்க்கார் இதை நிராகரித்தது மிக மிகத் தவறு; ராஜதந்திர சூன்யமுமாகும்.

**பாம்பும் தவளையும்:** ஒரு பாம்பு ஒரு தவளையைப் பிடித்துக் கொண்டது. இச்சமயம் இரண்டு கருடன்கள் வந்தன. பாம்பின் பிடிபோயிற்று. பாம்பை ஒரு கருடன் கொத்திக் கொண்டது. தவளையை மறு கருடன் கொத்திக் கொண்டது. ஒரு ராஜாளி வந்து இரண்டு கருடன்களையும் அடித்து வீழ்த்தியது. பாம்பும் தவளையும் விடுபட்டன. "ஏ! தவளையே! எங்கே போகிறாய்? நீ என் சொத்தல்லவா?" என்று சீறிக் கொண்டே, தவளையைப் பாம்பு பிடித்துக் கொண்டது. இந்தோ - சைனா, ஜாவா இரண்டின் கதையும் இப்படிப் பட்டதுதான். இந்தோ - சைனாவின் எஜமான் பிரான்ஸ்; ஜாவாவின் எஜமான் ஹாலந்து. எஜமான்கள் இரண்டும் ஜெர்மனியின் வாயில் விழுந்தன. அடிமைகள் இரண்டும் ஜப்பான் வாயில் விழுந்தன. ஜெர்மனியும் ஜப்பானும் அடிபட்ட உடனே, ஹாலந்தும் பிரான்ஸும் தங்களுடைய பழைய அடிமைகள் மீது பாய்கின்றன! இதற்கு இந்திய சிப்பாய்களும் துணைக்கு அனுப்பப் பட்டார்களாம். உலக சமாதானத்துக்கு, இதைவிட அபசகுனம் வேறே உண்டா?

**ட்ரூமன் கற்பனைகள் :** பைபிளின் பழைய ஏற்பாட்டிலே, கடவுளின் பத்துக் கற்பனைகள்தான் உண்டு. ஜனாதிபதி ட்ரூமன் பனிரண்டு கற்பனைகள் பண்ணிவிட்டார். அவை மேலெழுந்த வாரியாய்ப் படிக்க, மிக இனிமையாகவே இருக்கின்றன. ஆனால், ட்ரூமன் அதே மூச்சிலே, தங்கள் சேனைப் பலத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்கிறார். தங்கள் நாட்டுக்கு வெளியிலே தங்களுக்குப் பல ராணுவ கேந்திரஸ்தானங்கள் வேண்டுமென்கிறார். இது விபரீதம் அல்லவா? வாளின் பெருமை அதன் கூரிலே இல்லை; அதன் வீச்சிலேதான். நாடுகளுக்கிடையிலே அடிமையும் ஆண்டானும் நிலைத்திருக்க இன்னமும் முயற்சி நடந்து கொண்டேயிருக்கும் உலகத்திலே, ட்ரூமனின் கற்பனைகள் எப்படிப் பிரயோகமாகும்?

*

# கிழக்கே கொந்தளிப்பு

ஆர். எச். நாதன்

இந்தோனேஷியா, டச்சு ஈஸ்டு இந்தீஸ், நெதர்லாந்து ஈஸ்டு இந்தீஸ், ஆர்க்கிபெலகோ, மலேபொலினேஷியா-இந்தப் பெயர்கள் சென்ற சில தினங்களாகப் பத்திரிகைகளை அலங்கரிக்கின்றன. ஜாவா, சுமத்ரா, போர்னியோ, ஸெலிபஸ், நியூகினி முதலிய இரண்டாயிரம் தீவுக் கூட்டங்களைத் தான், ஆசிரியர்கள் மேற் கூறிய பெயர்களால் குறிப்பிடுகிறார்கள். ஆனால், பண்டைக் காலத் தமிழ் இலக்கியங்களில் இந்த நாடுகள் வேறு பெயர்களிட்டு அழைக்கப் படுகின்றன. புரட்சிப் புலவர் பாரதியார், ஜாவாவைச் 'சாவகம்' என்று அழகாகக் குறிப்பிடுகிறார். இந்தப் பிரதேசங்களின் மொத்த விஸ்தீர்ணம் பத்து லட்சம் சதுர மைல். இவைகளின் ஜனத் தொகை சுமார் ஏழரைக் கோடி.

இவைகளில் போர்னியோவில் ஒரு பகுதியும் (ஸரவாக் என்று அழைக்கப்படும் பாகம்) நியூகினியில் ஒரு பகுதியும் பிரிட்டனுக்குச் சொந்தம்!

இந்த நாடுகளுக்கும் தமிழகத்துக்கும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொடர்பிருந்தது என்பதற்குச் சரித்திரம் சான்று கூறுகிறது. அந்தக் காலத்திய அடையாளங்கள் இன்றும் கூட இந்த நாடுகளில் காணப் படுகின்றன. தமிழ் நாட்டுக் கலை, நாகரிகம் ஆகியவைகளின் சின்னங்கள் இன்றும் இவைகளில் இடம் பெற்றிருக்கின்றன.

இந்தோனேஷியர்களில் அநேகமாக எல்லோரும் முஸ்லிம்கள். மிளகு, ரப்பர், கரும்பு, நெல், தேயிலை, காப்பி, ஈயம், எண்ணெய் வித்துக்கள் முதலியவை இந்த நாடுகளிலே ஏராளமாய் விளைகின்றன. இன்பம் கொஞ்சும் இந்த அழகிய நாடுகளை, டச்சு ஏகாதிபத்தியம் பல வருஷங்களுக்கு முன்னே, கபளீகரம் செய்தது; ஜனங்களின் ரத்தத்தை உறிஞ்சுவதையே நோக்கமாகக் கொண்ட ஏகாதிபத்தியம், ஜாவா மக்களைக் கசக்கிப் பிழிந்தது. ஜனங்களின் எழுச்சியை நசுக்குவதற்காகப் பிரஜா உரிமையை மிதித்துத் தேய்த்தது. 'இம் மென்றால் சிறை வாசம்; ஏனென்றால் வன வாசம்' - இதுதான் ஏகாதிபத்தியம், அந்த நாட்டு மக்களுக்கு அளித்த உரிமைகள்!

செல்வம் கொழிக்கும் ஜாவா, ஏகாதிபத்திய ஆட்சியின் விளைவாக, வறுமையிலே குமிழியிட்டது. கல்வி அறிவிலே உலகில் கடைசிப் படியிலே அது நின்றது - நிற்கிறது.

மகிமை பொருந்திய அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சியும்,

இன்று உலகமுழுவதன் கவனத்தையும இழுத்திருப்பது, ஜாவா சுதந்தரப் போர். அ.:.தற்கடுத்தபடியாகச் சொல்லலாம். இந்தோ - சைனக் கிளர்ச்சியை. இந்த இரண்டு போராட்டங்களின தன்மையும போக்கும் முடிவும், கீழ் நாடுகளின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியவை யாகும் இந்த இரண்டு போராட்டங்களும் இந்தக் கட்டுரையில் விளக்கப்படுகின்றன.

சைனுவிலே நடந்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கிளர்ச்சியும், 'கும்ப கர்ணப் படலம்' வாசித்துக் கொண்டிருந்த ஜாவாக்காரர்களைத் தட்டி எழுப்பின. தங்கள் உணர்ச்சியையும் எழுச்சியையும் நசுக்கும் அடிமைச் சங்கிலியைத் தூள் தூளாக்க முடிவு செய்தார்கள் ஜாவாக்காரர்கள். எழுந்தது அங்கே புரட்சி நாதம். 1926-ஆம் வருஷம் ஜாவாக்காரர்கள், கம்யூனிஸ்டுகளின் தலைமையில் சுதந்தரத்துக்காகக் கிளர்ந்தெழுந்தார்கள். இந்தச் சண்ட மாருதம், டச்சு ஏகாதிபத்தியத்தை உலுக்கிக் குலுக்கிற்று. என்றாலும், போதுமான அளவு முன்னேற்பாடுகள் அன்று செய்யப்படவில்லை; சர்வ வியாபகமான தேசிய ஐக்கிய முன்னணி சமைக்கப்பட வில்லை! பாமர மக்களிடையே அரசியல் போதம் போதுமான அளவு ஏற்படவில்லை. எனவே, 1926-ஆம் வருஷ இயக்கம் நசுக்கப்பட்டது. அந்த இயக்கத்தை, ஏகாதிபத்தியம் ரத்த வெள்ளத்திலே அமிழ்த்திற்று.

என்றாலும், 1926-ஆம் வருஷ இயக்கம் ஜனங்களுக்குப் பல பாடங்களைக் கற்பித்தது. அது ஏகாதிபத்தியத்தின் கண்களையும் திறந்தது. காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதை, ஏகாதிபத்தியம் தெரிந்து கொண்டது. 'அழுத பிள்ளைக்கு வாழைப் பழம்' என்பார்களே, அந்தத் தந்திரத்தை டச்சு ஏகாதிபத்தியம் கையாண்டது. சுதந்தரம் வேண்டி நின்ற மக்களின் கண்களில் மண்ணைப் போடுவதற்காக, சில உயிரற்ற சலுகைகளை அது ஜனங்களுக்குக் கொடுத்தது. பெயரளவில், செயலற்ற ஒரு ஜனங்களின் சபை (Volksraad) ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சபையின் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் நியமன அங்கத்தினர்கள்; அதாவது சர்க்காரால் நியமிக்கப் படுகிறவர்கள். ஒரு சிலர் மட்டில் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரே வோட்டர்கள். நூற்றில் ஒருவருக்குத் தான் வோட்டுரிமை வழங்கினர்கள் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. ஜாவா உண்மையிலே ஏகாதிபத்தியம் என்னும் நுகத்தடியின் கீழே அகப்பட்டுத் திணறிற்று.

1941-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் ஏழாம் தேதி! கீழ் நாட்டிலே அன்று அடிமைத் தனத்தின் புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று. வரிசைக் கிரமமாகப் பல நாடுகள் ஜப்பானியப் பாசித்துக்கு இரையாயின. பாசிஸத்தின் கரம் ஜாவாவையும் தீண்டிற்று அதிகமான போராட்டமின்றி விரைவில் விழுந்த தேசங்களில் ஜாவாவும் ஒன்று. ஏன்?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் போலவே, டச்சு ஏகாதிபத்தியமும் ஜனங்களை நம்ப வில்லை. ஜனங்களை டச்சு சர்க்கார் ஆயுத பாணிகளாக்க வில்லை என்பது மாத்திரமல்ல! பாசில எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஜனங்களைத் திரட்ட முயன்றவர்கள் மீது நடவடிக்கையும் எடுத்தது. ஜனங்கள் ஆயுதபாணிகளானல், பாசிஸத்தை எதிர்க்கும் அதே ஜனங்கள் தங்களையும் எதிர்த்தால் என்ன செய்வது என்ற பயம், ஏகாதிபத்தியப் பிற்போக்காளர்களுக்கு உண்டாயிற்று. எனவே, ஜப்பான் வந்து படையெடுத்த போது, அங்கே மொத்தம் ஐம்ப

தாயிரம் சிப்பாய்கள் மாத்திரமே இருந்தார்கள். இவர்களிலும் சுமார் 25,000 சிப்பாய்கள்தான் ஜாவாக்காரர்கள்.

ஜாவா விழுந்தது. ஆனால், ஜாவாக்காரர்களின் சுதந்தர உணர்ச்சி சாகவில்லை. டச்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய அந்த மக்கள், அடிமைச் சாஸன மளிக்கும் எந்தச் சக்தியையும் எதிர்த்துப் போராட முடிவு செய்தார்கள். என்றாலும், ஜப்பானியப் பாசிஸத்தின் உண்மை உருவத்தை அவர்கள் காணச் சில மாதங்களாயிற்று. ஜப்பானியப் பாசிஸத்தின் கோர ரூபத்தை நன்கு கண்ட தேச பக்தர்கள் விழிப்படைந்தார்கள். ஆரம்பத்தில் ஜப்பானியர்களிடத்தில் நம்பிக்கை வைத்து வழிதவறிய தேச பக்தர்கள் கூட, காலப் போக்கில், அனுபவத்தில், உண்மையை உணர்ந்து பாசிஸ எதிர்ப்பாளர்களாக மாறினர்கள். 'சுதந்தரத்துக்காகப் பாசிஸத்தை எதிர்ப்போம்' என்னும் கோஷம் வானைப் பிளந்தது. சர்வ கட்சிகளையும் கொண்ட சுதந்தர தேசீய ஐக்கிய முன்னணி ஒன்று உருவெடுத்தது! அது வானம் முட்ட வளர்ந்தது.

1945-ஆம் வருஷம், ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி பாசிஸத்தை வீழ்த்திய தேச பக்தர்கள், அன்று தற்காலிகச் சுதந்தர சர்க்காரை அமைத்தார்கள்; 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று திக்குகளெட்டும் அதிரக் கோஷித்தார்கள்.

எந்த ஸொக்கார்னோவையும் ஹாட்டாவையும் கைது செய்ய ஜப்பானியப் பாசிஸ்டுகள் உத்திர விட்டார்களோ, அதே ஸொக்கார்னோ தான், தற்காலிக சர்க்காரின் தலைவர். ஜனங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஹாட்டா அதன் உப தலைவர். ஜனநாயகக் குடியரசுக் கட்சி, தேசத்துக்குத் தலைமை பூண்டது.

இன்று ஜாவாவில் பெரும்பகுதியும் ஜனநாயகக் குடியரசுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருக்கிறது. சுதந்தர இயக்கம் ஜாவா எங்கும் காட்டுத் தீ போல் பரவியிருக்கிறது. இந்தத் தீயை அணைக்க, 'பகீரதப் பிரயத்தனம்' செய்கிறது டச்சு ஏகாதிபத்தியம். இதற்குத் துணை புரிகிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்!

ஸொக்கார்னோவின் தலைமையில் ஏற்பட்டிருக்கும் சர்க்கார், ஜாவாவில் குடியரசை ஏற்படுத்துவதும் நேச நாடுகளுடன் ஒத்துழைப்பதும் தான் தனது லட்சியமென்று, பகிரங்கமாக அறிவித்திருக்கிறது. ஜாவாக்காரர்கள் இந்தச் சர்க்காருக்குப் பக்க பலமாக நிற்கிறார்கள். உலகிலுள்ள தொழிலாளர்களும் முற்போக்காளர்களும், ஜாவாக்காரர்களின் சுதந்தரப் போராட்டத்தை ஆதரிக்கிறார்கள். இந்த நிலையில் அந்த இயக்கத்தைச் சிறுமைப் படுத்த முயலுவதால், பிரச்னை தீர்ந்து விடாது.

நேற்று வரையில் ஆசியாவைச் சூறையாடிய ஜப்பானியர்களின் உதவியை, இன்று மேற்கத்தி ஏகாதிபத்தியங்கள் நாடுகின்றன. சுதந்தர இயக்கத்தை நசுக்க, தேசபக்தர்களுக்கு எதிராக ஜப்பானிய யுத்தக் கைதிகளையே சில இடங்களில் ஏவிவிட்டிருக்கிறார்கள். இது பாத்திர மல்ல. கிரேக்க மக்களின் சுய நிர்ணய உரிமையில் தலையிட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், ஜாவா சுதந்தர இயக்கத்தை

நசுக்க இந்திய சிப்பாய்களை அனுப்பி, டச்சு ஏகாதிபத்தியத்துக்குத் துணை புரிகிறது. இனம் இனத்துடன் சேருகிறது! ஆனால் இந்தியர்களும் உலக மக்களும் இந்த அநீதியை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

ஜாவாக்காரர்கள் சுதந்தரத்துக்காகப் போராடுகிறார்கள். அவர்களுடைய போராட்டம் தர்மமானது. அவர்கள், உலக மக்களின் பக்க பலத்தைப் பெற்று வெற்றி பெறுவார்களென்பது திண்ணம். வாழ்க சுதந்தர இயக்கம்!

இதுவரையில் சொன்னது ஜாவாவைப் பற்றி. இனி இந்தோ-சீனாவைப் பார்க்கலாம். 'சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற சுலோகங்களை 156 வருஷங்களுக்கு முன்னே கோஷித்த பிரான்சின் பெயரால், இன்று அன்னமியர் வேட்டையாடப்படுகிறார்கள். சுதந்தரம் கோரும் மக்களைத் துப்பாக்கியால் அடக்க இங்கேயும் முயற்சி!

கொச்சின் - சைனா, அன்னம், கம்போடியா, டொங்கின், லாவோஸ் ஆகிய பகுதிகள் தான் இந்தோ - சைனா என்று அழைக்கப்படுகின்றன. இந்தப் பகுதிகளிலே 'பொம்மை ராஜாக்கள்' இருக்கிறார்கள். அனுஷ்டானத்தில் கவர்னர் ஜெனரல் இட்டது தான் இங்கே சட்டம்!

பதினைாவது நூற்றாண்டு வரையில், இந்தப் பகுதிகள் ஸ்ரீ விஜயா போன்ற இந்திய அரசர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. பின்னால், மங்கோலிய மன்னன் குப்லாகானும், சீன அரசர்களும் இந்த நாட்டின்மீது படையெடுத்தார்கள். இந்தோ-சைனா அன்னியரின் ஆக்கிரமிப்பால் அவதிப்பட்டது! தேசம் சீர் குலைந்தது.

மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் கிருபாகடாட்சம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆசிய நாடுகளுக்குப் பரிபூரணமாகக் கிடைத்தது. 1885-ஆம் வருஷம் இந்தோ - சைனாவை பிரான்ஸ் விழுங்கிற்று.

2,63,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள நாடு இது. இதன் ஜனத்தொகை இரண்டரைக் கோடி. நிலக்கரி, நெல், ரப்பர் முதலியவை நிறைந்த நாடு இது. ஏகாதிபத்திய பரம்பரை இங்கேயும் நிலை நிறுத்தப்பட்டது!

இந்தோ - சைனாவின் சரித்திரம், சுதந்தரப் போராட்டத்தின் சரித்திரமாகும். நெடுங்காலமாக அந்நாட்டு மக்கள் சுதந்தரத்துக்காகத் தீரத்துடன் போராடி வருகிறார்கள். உலக சுதந்தரத்தை அலங்கரிக்கிறது இந்தோ - சைனா.

1900-ஆம் ஆண்டு அங்கே மனித பூகம்பம் ஆரம்பமாயிற்று. அடிமைப் பட்டுக் கிடந்த அன்னமியர், சுதந்தரக் கொடியை அன்று உயர்த்தினார்கள். பாமரர்களும் படித்தவர்களும் சேர்ந்து 1912-ஆம் வருஷம் வரையில், பனிரண்டு வருஷங்கள் தொடர்ந்து போராடினார்கள். வலிமை மிக்க ஏகாதிபத்தியம், இந்த இயக்கத்தை இறுதியில் நசுக்கிற்று. அங்கே அடக்குமுறை தலைவிரித்தாடிற்று. புரட்சித் தலைவர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

அதன் பிறகு, சிறிது அமைதி. ஆனால், அது புயலுக்கு முன் ஏற்

# மனிதர்களே!..

## சரும ஆரோக்கியத்திற்கு

# ரெக்ஸோனாவை

## உபயோகியுங்கள்




ஸ்திரீகளுக்குத்தான் முக வசீகரத்திற்கேற்றது ரெக்ஸோனா சோப்பென்று அவசரப்பட்டு எண்ணிவிடாதீர்கள். சரும-ஆரோக்கியத்தை உயர்வாகக்கருதும் ஒவ்வொருவருக்கும் அது ஒரு முக்கிய டாய்லட் சோப்பாகும். மனிதர்கள் சிறப்பாய் அனுபவிக்கிற நேர்த்தியான, மனதிற்குகந்த, உற்சாகத்தை அளிக்கும் சோப் அதுதான். இந்த நேர்த்தியான, பசுமை வாய்ந்த, விரைவில் நுரையை உண்டாக்கும் சோப்பின் ஒரு சிறந்த நன்மை என்னவென்றால், சுகத்தை யளித்து, சரும வியாதிகளைப் போக்கும் கிருமி நாசினியாகிய *கேடில் என்னும் மருந்து அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ரெக்ஸோனாவின் ஏராளமாய் விரைவிலேற்படும் நுரை வெகு சீக்கிரத்தில் ஆரோக்கியத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தை உங்கள் சருமத்தின் ஒவ்வொரு அடிப்பாகத்திலும் கொண்டு போய்ச் சேர்க்கிறது. அங்கேதான் சரும உபத்திரவங்களும், சரும மாசு மறுக்களும் அதிகமாய் அடிக்கடி உண்டாகின்றன. இவ்விதமாக உங்கள் சருமம் முழுவதும் சுகமடைந்து. சுத்திசெய்யப்பட்டுத் தூய்மையையும் அடைகிறது. ஆகையினால் ரெக்ஸோனா சோப்பை உபயோகிக்க இன்றே ஆரம்பியுங்கள்—நெடுகிலும் உபயோகியுங்கள்.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் ஒப்பற்ற கிருமி நாசினியாகிய ஒரு கலப்பு மருந்து.

சரும சுகத்திற்கு அதிக சக்திவாய்ந்து, குணமளித்துப் போஷிக்கும் தைலம் சேர்ந்தது. சுகத்தைத் தந்து காப்பாற்றும் தன்மையுள்ள கேடில் யாவராலும் மதிக்கப்பட்டு விஞ்ஞானிகளால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

**ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.** வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப் பருக்கள், அரிப்புகள், சனைப்புகள், கடிகள், மச்ச மறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.




RP. 28-50-40 TM

REXONA PROPRIETARY LIMITED

எதிர்பாராத தீவிபத்துகளினால்
எத்தனையோ நஷ்டங்கள்!

அவற்றிற்கெல்லாம்
ஈடு கொடுப்பதே
எங்கள் அரிய சேவை!

விவரங்களுக்கு எழுதுங்கள் :-
பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)
தலைமை ஆபீஸ் : மதுரை

கிளை ஆபீஸ்கள் :

பம்பாய் : லாயிட்ஸ் பாங்க் பில்டிங் ஹாரன்பி ரோடு
அகமதாபாத் : 1761, காந்தி ரோடு
கல்கத்தா : 26, டல்ஹௌஸி ஸ்குயர்
ராவல்பிண்டி : லாயிட்ஸ் பாங்க் காம்பவுண்ட் எட்வர்ட்ஸ் ரோடு

தீவிபத்து சம்பந்தமான சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்
மொத்த ஆஸ்திகள் ரூ. 53,00,000-க்கு மேல்

பிரதம ஏஜண்டுகள் :
ஏ. & எப். ஹார்வி லிமிடெட், மதுரை etc.



படும் அமைதி; நிரந்தர அமைதி அல்ல. அன்னமியர் தங்கள் சுதந்தர இயக்கத்தையோ, சுதந்தரத்துக்காக உயிர் நீத்த தியாகிகளையோ மறக்கவில்லே.

அடங்கிக் கிடந்த இந்தோ-சைனவிலே, மீண்டும் கொந்தளிப்பு உண்டாயிற்று. இந்தச் சந்தர்ப்பத்தில், சுதந்தர இயக்கத்துக்குக் கம்யூனிஸ்டு கட்சி தலைமை பூண்டது. 1944-ஆம் வருஷம் மீண்டும் புரட்சி முரசு கொட்டப்பட்டது.

1940-ஆம் வருஷம் ஜூன் மாதம் பதினேந்தாம் தேதி பிரான்ஸ் விழுந்தது. பிற்போக்காளர்களைக் கொண்ட விஷி சர்க்கார் அதிகாரத்துக்கு வந்தது. அந்த ஹிட்லரின் ஆட்கள் இந்தோ-சைனவை ஜப்பானுக்குப் பாத காணிக்கையாய்ச் செலுத்தினர்கள். ஆனல், இந்தச் சம்பவத்தை, இந்தோ-சைன மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க வில்லே. போராட்ட நெருப்பிலே ஸ்புடம் போட்டு எடுக்கப்பட்ட இந்தோ-சீனர்கள், பாசிஸத்தை எதிர்த்துப் போராடினர்கள். ஆனல், சர்வதேச அரங்கத்திலே அன்று வெற்றி நடை நடந்த பாசிஸ்டுகள், அந்த இயக்கத்தை நசுக்கினர்கள். என்றாலும், ஜனங்களின் உணர்ச்சி சாகவில்லே.

1941-ஆம் வருஷம் இந்தோ-சைனவின் சுதந்தர லீக் பிறந்தது. இது சர்வ கட்சித் தேசிய ஐக்கிய முன்னணி. ஜப்பானியப் பாசிஸத்தை வேரறுப்பதும், ஜனநாயகக் குடியரசை ஸ்தாபிதம் செய்வதுமே, இதன் உடனடியான நோக்கம். இந்த ஜனங்களின் கட்சிதான், இன்று அங்கே தற்காலிக ஜனநாயக சர்க்காரை ஏற்படுத்தியிருக்கிறது.

இது தெகோலின் கண்ணே உறுத்துகிறது. பிரான்சுக்கு உதவ பிரிட்டன் விரைகிறது. ஜாவாவில் நடிக்கப்படும் அதே நாடகம், இங்கேயும் ஏகாதிபத்திய வாதிகளாலே நடத்தப்படுகிறது.

ஜனங்களின் சுதந்தர இயக்கத்தை நசுக்க, பிரஞ்சு ஏகாதிபத்தியமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் இன்று ஜப்பானியப் பாசிஸ்டுகளின் உதவியைக்கூட நாடுகின்றன! அதுவும் ஜனங்களுக்கு விரோதமாக! இந்தியத் துருப்புகளும் அங்கே உபயோகிக்கப்படுகிறார்கள். அடிமை இந்தியா-சுதந்தரத்துக்காகப் போராடும் இந்தியா-இதை வன்மையாகக் கண்டிக்கிறது.

ஜாவாவிலே இந்திய சிப்பாய்கள் உபயோகிக்கப்படுகிறார்கள்; இந்தோ-சைனவிலே இந்திய சிப்பாய்கள் உபயோகிக்கப்படுகிறார்கள்; மலேயாவிலே இந்திய சிப்பாய்கள் உபயோகிக்கப்படுகிறார்கள். இத்தனையும், சுதந்தர இயக்கங்களுக்கு விரோதமாகத்தான். இந்தியா அடிமை நாடு என்பதையே, இது நமக்கு மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்துகிறது; தேசிய ஐக்கிய முன்னணி ஏற்படாததன் விளைவுகளை, இது பிட்டுப் பிட்டுக் காட்டுகிறது. நமது நன்மைக்காக, தென் கிழக்கு நாட்டு மக்களின் நன்மைக்காக, ஒன்றுபடுவோம்; ஒன்றுபட்டு, ஒரே குரலாய் இந்திய சிப்பாய்களை உடனே தென் கிழக்கு நாடுகளிலிருந்து திரும்ப அழைக்கும்படி, சர்க்காரை நிர்ப்பந்தப் படுத்துவோம். இது நமது கடமை; இதை நாம் செய்வோம்.

# அப்பாவின் மீசை

லா. ச. ராமாமிருதம்

**திடீரென்று அப்பா ஒரு நாள் மிசை வைத்துக்கொண்டு வந்துவிடுகிறார். வீட்டிலே ரகளை. இது, ஒரு குழந்தையின் மனதிலே, என்னென்ன உணர்ச்சிகளையும் கற்பனைகளையும் எழுப்புகிறது! ஆனால், முடிவிலே அத்தனையும் என்ன ஆகிறது! வேடிக்கைதான். உண்மையில் அந்தக் குழந்தையிடம் நாம் பரிதாபம் கொள்ளத்தான் வேண்டும்.**

மணியடித்துப் பள்ளிக் கூடம் விட்டான போதிலும், அறுத்துவிட்ட கன்றுக்குட்டி மாதிரி வீட்டுக்கு ஓட, அன்று அவனுக்கு மனமில்லை. புத்தகப் பையைத் தோளில் தொங்க விட்டுக் கொண்டு, கொஞ்சம் யோசனை யாகவேதான் நடந்தான்.

காலையில் வீட்டைவிட்டு வரும்போது, அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை. எப்படி ஆரம்பித்ததென்றே சரியாய்த் தெரியவில்லை.

அவனாகத் தனியே உட்கார்ந்து கொண்டு, காகிதத்தில் கத்திக் கப்பல் செய்துகொண் டிருந்தான்- இல்லை, செய்ய முயன்று கொண்டிருந்தான்.

மத்துப் போட்டுக் கடையும் போது மோர் சுழல்வதுபோல், கொஞ்ச நேரமாகவே அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையில் ஏதோ பொருமிக்கொண்டிருந்தது. இன்னதுதான் என்று சரியாய்த் தெரியாமல் வார்த்தை தடித்துக்கொண்டே போயிற்று. அப்பாவின் குரல் சற்று உரத்திருந்தது; அம்மாவின் குரலோ, அறுத்தது தெரியாமல் ரத்தம் துளிக்கும் கத்தியின் கூர்மை போல், நயத்திருந்தது.

திடீரென்று நாற்காலியை முரட்டுத் தனமாய்ப் பின்புறம தள்ளிக்கொண்டு எழுந்து, தோள் கடையில் குறுகிய கழுத்துடன், அம்மாவை நோக்கி அப்பா வீச்சுநடை போட்டுக் கொண்டு வந்த போதுதான், கனவு கண்டு விழித்தவன்போல், அவனுக்குச் சுற்றுப்புற விவகாரங்களின் நினைவு வந்தது.

அம்மா ஏதோ துணியின் மேல் தலையைக் கவிழ்ந்து கொண்டு தைத்த வண்ணம், பாணங்களை விட்டுக் கொண்டிருந்தாள்: அப்பா தன்னை நோக்கி வருவதைப் பார்க்கையிலேதான், அவளுடைய கண்கள் பெரிதும் பெரிசாயின; பயத்தினால் விழிவெள்ளைகள் கிறுகிறுவென்று சுழன்றன. "எல்லையை மீறி ஏதோ வார்த்தையைக் கொட்டிவிட்டோம்" என்று, அவளுக்கே அப்போது தான் புலனாயிற்று. அப்பாவின் கோபத்தைப் பார்த்ததும், அவள் உடலெல்லாம் வெலவெலத்துத் துணிமாதிரி யாகிவிட்டது. முன் மயிர் நெற்றியில் சரிய, கடற்கரையோரத்தில் வளர்ந்த சவுக்குப் புதர்போல் அடர்ந்த புருவத்தினடியில் இயற்கையிலேயே மஞ்சள் பூத்த மேட்டுவிழிகள் பளபளக்க, மூக்குநுனியும் அதனடியில் புது மீசையும் துடிதுடிக்க, அப்பா பல்லைக் கடித்துக் கொண்டு, நேரே பட்டாளத்து

லாரி மாதிரி அம்மாவை நோக்கி வந்தார்.

"இல்லே, வேண்டாம்! வேண்டாம்! ஐயோ!..." என்று கத்தக் கூட நேர மில்லே; குரல் தொண்டையில் உறைந்து போயிற்று.

அப்பா நேரே வந்து அம்மாவின் முதுகில் ஓங்கி ஓர் அறை அறைந்தார்.

'கிறீச்!' என்று ஓர் அலறல் போட்டு, அம்மா சுவர் ஓரமாய்க் குப்புற விழுந்தாள்.

"அம்மா...அம்மா!" என்று கூக்குரலிட்டுக் கொண்டு, இவன் போய் அவள்மேல் விழுந்தான். அப்பா ஒரு முறை இவர்கள் இருவரையும வெறித்துப் பார்த்துவிட்டு, வழியில் கிடந்த தையல் சட்டத்தையும், ஒன்றிரண்டு பாத்திரங்களேயும் உதைத்துக் தள்ளிவிட்டு, வாசற் கதவைப் படாரென்று சாத்திக்கொண்டு, வெளியே போய்விட்டார்.

அம்மா மெல்ல எழுந்திருந்தாள். அம்மாவைப் பார்க்கச் சஹிக்கவில்லே. தலே மயிரும் துணியும் அலங்கோலமாய்ப் போயிருந்தன. வலது கையில் ஒரு வளேயல் உடைந்து, இசைகேடாய் மணிக்கட்டில் கீறி, ரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. அம்மா வாயைத் திறந்து அழுவே யில்லே. 'பொய்'க்கன்றுக் குட்டியை மடியில் முட்ட விட்டுத் தெருவில் பால் கறக்கும பால்காரனின் பசுவைப் போல், அம்மாவின் கண்களில் கண்ணீர் தாரை தரையாய் வடிந்துகொண்டிருந்தது. அவள் இரண்டொரு தடவை முன்ருனையால் கண்களேத் துடைத்துக் கொண்டாள். ஆனல், கண்ணீர் நிற்க வில்லே. அது துளித்துக் கொண்டே யிருந்தது; கணகணவென்று நெருப்பு மாதிரி கொதித்தது அந்தக் கண்ணீர். அம்மா அப்புறம் அதைத் துடைப்பதையும் நிறுத்தி விட்டாள்; தன்னிச்சையாய் அது வழிந்து கொண்டே யிருந்தது. அதோடு அவள் எழுந்திருந்து, வளேயல் துணுக்கை யெல்லாம் சிராய்ப் பொறுக்கி வாசலில் எறிந்து விட்டு, இவனுக்குத் தலேயை வாரி, பொட்டிட்டு, சொக்காயும் நிஜாரும் போட்டுவிட்டு, புத்தகப் பையைத் தோளில் மாட்டிவிட்டு, இவனேப் பள்ளிக் கூடம் போகத் தயார் செய்துவிட்டு, அவள் மாத்திரம் சமையல் உள்ளுக்குள் போய் முன்ருனையை விரித்துக் குப்புறப் படுத்து விட்டாள்.

சமையல் உள் வாசல்படிக்கு அந்தப் பக்கம் ஒரு காலும் இந்தப் பக்கம் ஒரு காலுமாய், இவன் தயங்கித் தயங்கி நின்ருன். அவளேத் தேற்ற ஆயிரம் யோசனேகள், இவனது உள்ளத்தில் எழுந்தன. ஆனல், வெட்கமும் வார்த்தைகளும் வந்து தொண்டையை அடைத்தன. அம்மாவை இப்படி விட்டுப் போக, அவனுக்கு மனம் வரவில்லே.

"போடா! பள்ளிக்கூடத்துக்கு நேர மாயிடுத்து..."

லஜ்ஜையினல் முகம் சிவக்க, குனிந்த தலேயுடன், அவன் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பினன்.

இப்போது வீட்டுக்குத் திரும்ப வேண்டும்.

அவன் வீட்டில் சண்டை நடக்கிறதே என்ற கவலே கொஞ்சங்கூட இல்லாமல், தெருவில் ஜனநடமாட்டம் வழக்கம்போல் நிறைந்துதான் இருந்தது. தெரு

விலே, பெரியவர்களும் ஆண்களும் வாலிபப் பெண்களும், பேசிக்கொண்டும் சிரித்து இடித்துக்கொண்டும் சென்ருர்கள். மோட்டாரும் வண்டிகளும் பறந்தன. ஒரு ஜட்கா வண்டிக்காரன், தன் வண்டி ஓடிக்கொண்டேயிருக்கையில், சாட்டைக் கழியைச் சக்கரத்தின் பட்டைகளுக்கிடையில் கொடுத்து, 'கடகட' என்று சத்தம் உண்டுபண்ணி, குதிரையை ஜோராய் விரட்டினன். அவனுங்கூடத் தமாஷாய்த்தான் இருந்தான்.

பெரிய கூடைபோல் ஒரு முண்டாசு கட்டி, கிறுதா மீசையை ஷோக்காய் முறுக்கி விட்டிருந்தான் அந்த ஜட்கா வண்டிக்காரன்.

ஜட்கா வண்டிக்காரனின் மீசையைப் பார்த்ததும், இவனுக்கு அப்பாவின் மீசை நினைவு வந்தது; உடனே சண்டையின் ஞாபகமும் கூடவே வந்தது; முகம் மறுபடியும் தொங்க ஆரம்பித்து விட்டது. ஏனென்ருல், வீட்டில் சண்டை வந்ததே அப்பாவின் மீசையால்தான். நடந்ததெல்லாம் இப்போதுதான் இவனுக்குச் சரியாய் ஞாபகம் வந்தது. இவன் காகிதக் கப்பல் செய்வதில் முனைந்திருந்த போதிலும், அப்பாவுக்கும் அம்மாவுக்கு இடையில் நடந்த தர்க்கத்தை, இவனது உள்நினைவின் ஒரு பாகம், இவன் மனதிலே பதிவு செய்துகொண்டிருந்திருக்கிறது.

ஆம், இப்போதுதான் எல்லாம் ஞாபகம் வருகிறது.

அப்பா சலூனுக்குப் போய் மயிர் வெட்டிக்கொண்டு, புதிதாய் மீசை வைத்துக் கொண்டு வந்தார். மெல்லியதாய், பென்சிலால் கோடு கிழித்தாற் போல், ஒரு துளிர் மீசை. அப்பா கண்ணுடிக் கெதிரில் உட்கார்ந்து கொண்டு, அதைத் தொட்டுத் தொட்டு, நுனியை முள்ளாய் முறுக்கி விட்டுக் கொண்டிருந்தார். அப்பா படும் சிரமத்தைப் பார்க்க, இவனுக்கே வேடிக்கையா யிருந்தது. இவன் பெரியவனுய்ப் போனல், இவனுக்குக் கூட மீசை வைத்துக் கொள்ளத்தான் இஷ்டம். இப்போதேகூட வைத்துக்கொள்ள இஷ்டம்தான்; ஆனல், ரோமம் முளைக்கமாட்டேனென்கிறதே!

என்ருலும், அம்மாவுக்கு அது வேடிக்கையா யில்லை ஏனோ தெரியவில்லை. என்னவோ மொணமொண என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

"பால்காரச் சின்னன் மாதிரி-விறகுவெட்டி வேலன் மாதிரி-பிராம்மணுளாய் லட்சணமாய் இருக்கப் படாதோ-போயும் போயும் புத்தி இப்படியா போகணும்! முகத்திலே கொடூரம் வழியறது-" என்று அம்மா என்னென்னவோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

அப்பா சிரித்துக் கொண்டு, இதையெல்லாம் விளையாட்டாய் எடுத்துக் கொண்டு, மீசையை முறுக்கி விட்டுக் கொண்டேயிருந்தார். ஆனல், அம்மா படிப்படியாய்த் தைரியமாய் மீறிக் கொண்டே வந்து, அப்புறம் "கள்ளப் பார்ட்டு மாதிரியிருக்கு; இந்த ராட்சஸ முழிக்கும் மீசைக்கும் சகிக்கவில்லை - பட்டாணித் துலுக்கன் மாதிரி யிருக்கு-" என்று புதுப்புது 'மாதிரி'களையெல்லாம் அடுக்க ஆரம்பித்ததும், அப்பாவுக்குச் சிரிப்பு எல்

லாம் பறந்துபோய், கண்களில் சிவப்பு நரம்புகள் தோன்ற ஆரம் பித்துவிட்டன. அப்புறம் என்ன? அவ்வளவுதான்-அம்மாவின் முது கிலே 'பளீர்' என்று அறை தான்!

"அரே தம்பி-இவ்வளவு பெரிய பிளாட்பாரம் கட்டிவிட் டிருக் காங்களே-அது போதல்லையா உனக்கு? என்? மோட்டாரில் விழுந்து சாவணும்னு இஷ்டமா? மாட்டிக் கொண்டால், ஆள் 'அட்ரெஸ்' இல்லாமல் போயிடு வையே! பொறுக்கறத்துக்கு எலும்பு கூட அகப்படாதே-ஏண்டா தம்பி, உன் உடம்பிலே எலும்பு இருக்குதா? பம்பிளீஸ் நார்த்தம் பழம் மாதிரி யிருக்கையே!—"

இவ்வாறு, கோபிப்பது போல் அபிநயித்துக் கொண்டு, இவனை ஒரு போலீஸ்காரன் அலக்காய்த் தூக்கி, பிளாட்பாரத்தில் ஏற்றி விட்டு, கன்னத்தைச் சலுகை யாய் நிமிண்டி அனுப்பினன்.

ஆமாம், இனிமேல் 'அட்ரெஸ்' ஒன்றை ஒரு சீட்டில் எழுதி, ஜேபிக்குள் போட்டுக் கொள்ள வேண்டும். அது துண்டுக் காகி தமா யிருந்தால், கீழே விழுந்தா லும் விழுந்து விடும். ஒரு குண்டூ சியைக் கொண்டு மெடல் மாதிரி அதைச் சொருகிக் கொள்ள வேண்டும். வாத்தியாரைக் கேட் டால், கொடுப்பார். கொடுப் பாரா? "ஏன்? என்னத்துக்கு?" என்றுதான் கேட்பார்.

"நான் செத்துப் போனல், என்னை வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டாமா? அதற்குத்தான்" என்று சொல்ல வேண்டும்.

சாவைப் பற்றிய எண்ணம் அவனது சிந்தனைத் தொடரில் புகுந்ததும், யோசனைகள் இன்ன மும் ரொம்பச் சுவாரஸ்ய மாகி விட்டன. சாவதானமாய்ச் சிந் தனையில் மூழ்கிய வண்ணம், குனிந்த தலையும் தளர்ந்த நடையு மாய் நடக்கலானன். நடையின் தழதழப்பில், கொழு கொழுப் பான அவனுடைய கன்னத்துச் சதை அதிர்ந்தது.

என்னவோ செத்துப்போவது, என்று கேள்விப்பட்டிருந்தானே யொழிய, செத்துப் போனவர் களைப் பார்த்த ஞாபகமில்லை. செத்துப்போனல் பேச்சு மூச்சு இருக்காது. செத்துப் போன வர்கள் திரும்பவும் எழுந்திருக்க மாட்டார்கள் என்று கேள்வி.

ஆனல், இப்போது சட் டென்று, பல நாளைக்கு முன் ஒன்று நடந்ததே, அது ஞாபகம் வந்தது.

இது மாதிரிதான், பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வந்து கொண் டிருந்தான். வரும் வழி யில், கோயில் குளம்-சுற்றி இரும்புக் கிராதி போட்டிருந் தது; அதுகூட இதோ வந்து விட்டது - அதன் ஒரு துறைப் பின் படிக்கட்டில் ஏகப்பட்ட பேர் ஒன்ருய்க் கூடி நின்று கொண்டு, நீரைச் சுட்டிச் சுட் டிக் காண்பித்துக் கொண்டு, வார்த்தை புரியாமல் இறைச்சல் போட்டுக் கொண் டிருந்தார்கள்.

என்ன கப்பலா? திமிங்கிலமா?

அந்தக் கூட்டத்திலே இவனும் இடித்துப் புகுந்து கொண்டு, ஒருவனுடைய முழங்கை யடியில் அரைக்கண நேரம் தெரிந்த சந்து வழியாய், திணறிக் கொண்டு,

ஒற்றைக் கண்ணைச் சாய்த்த வண்ணம், உள்ளே என்ன நடக்கிறது என்று பார்க்க முயன்ருன்.

பாசிப்பச்சை யேறிய தண்ணீரில் ஒரு வெள்ளை வேஷ்டிக் கொப்புளம் (உள்ளே காற்றுப் புகுந்து கொண்டதால் உண்டான கொப்புளம்) மிதந்து கொண்டிருந்தது. பூ! இவ்வளவு தானு? இதுக்கா இத்தனை அமக்களம்! இதைவிடப் பெரிய கொப்புளம் இவனல் கூடப் பண்ண முடியுமே!- இன்னும் கொஞ்சம் கழுத்திலே சுளுக்கேற, தலையை நீட்டிப் பார்த்தான். வேஷ்டிக் கொப்புளத்தை ஒட்டிறைற்போல் ஒரு கைமுஷ்டியும் தென் பட்டது. நெருக்கிக் கொண்டு பார்த்தான். கனத்த மயிர் தெரிந்தது.

இன்னமும் சரியாய்ப் பார்ப்பதற்குள், இடுப்பு மரத்து விட்டது.

"அட பாவமே! சின்னப் பையன் மாதிரி யிருக்குதே!..."

"படி சறுக்கி யிருக்குமப்பா!..."

"படிதான் சறுக்கித்தோ... வீட்டிலே கோவம் பண்ணிக் கிட்டு வந்து விழுந்துட்டானே?..."

"இந்தக் காலத்துப் பசங்களை என்னன்னு சொல்றது! பிறக்கிறபோதே, சாவுக்குக் கூடப் பயப்பட மாட்டேன்ருங்க... நெஞ்சு அவ்வளவு துணிஞ்சு போச்சு..."

"ஐயையோ...!!!"

அந்த வீறல் அங்கே இருந்த அத்தனை பேர் உள்ளத்தையும் உடலையும் ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. ஏன் உலுக்காது? பெற்ற பிள்ளையை இரண்டு நாள் இரவும் பகலுமாய்த் தேடித் தேடி அலைந்து ஏற்கெனவே உள்ளம் நைந்திருக்கும் தாய், இப்போது திடீரென்று அவனைப் பிரேதமாய்க் காணுகையில், படீரென்று உடையும் அவளுடைய இதயத்தின் விரிசலினின்று வெளிப்படும் வீறலல்லவா அது? தாயுள்ளத்தின் பிரளய மல்லவா அது!

அந்த வீறலைக் கேட்டுப் பயந்து அங்கேயிருந்து வீட்டுக்கு ஓடி வந்த ஓட்டத்தில் இவனுக்கு ஏற்பட்ட படபடப்பு அடங்கவே, அரை மணி நேரமாயிற்று. சாவைப் பற்றி அவனுக்கு அவ்வளவுதான் தெரியும்.

திடீரென்று ஒரு பயங்கரமான எண்ணம் அவன் மனதில் பிறந்தது. பிடரி சில்லிட்டது. நடையையும் மறந்து, சற்று நேரம் அப்படியே நின்ருன்.

அம்மா அப்படிக் கவிழ்ந்து படுத்துக்கொண் டிருந்தாளே, அப்படியே செத்துப்போ யிருந்தால்...?

ஜனங்கள் எப்படி எப்படியோ செத்துப் போகிருர்களே! அம்மா அப்படிக் கவிழ்ந்து படுத்தே செத்துப்போ யிருந்தால்...!

மறுபடியும் நடக்க ஆரம்பித்தான். இப்போது கொஞ்சம் வேகமாகவே நடந்தான்; கொஞ்சம் பீதியோடுதான்.

இவன் உள்ளே போவான். பின்னலேயே இவனுடைய அப்பா, ஆபீஸிலிருந்து வந்து

நுழைவார். இவன் காப்பி குடிப்பதற்காக, நேரே சமையல் கட்டிலே புகுவான். தான் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்புகையில், அம்மா எப்படிப் படுத்துக் கொண்டிருந்தாளோ அப்படியே இப்போதும் கிடப்பாள்; இரு கைகளுக்கும் இடையில் கவிழ்ந்த முகத்துடன்தான் கிடப்பாள்.

"அம்மா! அம்மா!!"

இவன் 'அம்மா - அம்மா' என்று கூப்பிட்டுக் கொண்டே, அம்மாவை மெல்லப் புரட்டி நிமிர்த்துவான்.

புரட்டி என்ன பிரயோசனம்? வெறுமையே உடல்தான் துவளும்; அன்று ஒரு நாள் ஓட்டலிலிருந்து அப்பா வாங்கிக் கொண்டு வந்தாரே அல்வாத் துண்டு, அந்தமாதிரி தளதள என்று துவளும்.

அம்மாவின் உடம்பு ரொம்பவும் மிருது; இது அவனுக்குத் தெரியும். அன்றைக்கு ஒரு தடவை இவனுக்கு வாயில் நுழையாத பெயருடன் உயர்ந்த ரகமான ஒரு காய்ச்சல் அடித்ததே, அப்போது இவனை மார்மேலும் தோள் மேலும் மடி மேலும் போட்டுக் கொண்டு, சீராட்டினவர் யார்? அம்மாதானே? இனிமேல் சீராட்ட ஒருவரும் கிடையாது.

அப்பா உள்ளே வருவார்.

"என்னடா?..."

அவன் கண்களிலிருந்து சிந்தும் அலட்சியம் வெறுப்பு இந்த இரண்டும் சேர்ந்த தீயிலே, அப்பா ஏன் இன்னமும் எரிந்து போக வில்லை? இனிமேல் இவனுக்கு அம்மா இல்லை; அம்மாவைக் கொன்றதால், அப்பாவும் இல்லை.

இவன் நிர்க்கதியான குழந்தையாகி விடுவான். அப்படியே எழுந்து முகத்தைத் திருப்பிக் கொண்டு, வீட்டுக்கு வெளியே போய் விடுவான்.

எங்கே? அதுதான் தெரியவில்லை. எங்கே? எங்கேயாவது போகிறது. தாயும் தகப்பனுமில்லாத குழந்தைக்குச் சாதம் போட, எத்தனை பேர் காத்திருக்க மாட்டார்கள்?

ஆனல், அவன் உலகத்தை வெறுத்து விடுவான். 'அப்படியென்ருல் என்ன?' என்று மனதுக்குள்ளே ஒரு குட்டிக்குரங்கு கேட்டது. அத என்னவோ! ஆனல், அவன் உலகத்தை வெறுத்து விடுவான். அம்மா சொன்னளே துருவன் கதை, அது மாதிரி - பிரகலாதன் கதை கூட, அம்மா சொல்லியிருக்கிருள்: 'இரணியாய நமஹ'... துருவனுகி விடலாமா? பிரகலாதனுகலாமா? துருவனுவதுதான் மேல். துருவனுனல் நட்சத்திரமாகி விடலாம்; மேலே போய் 'மினுக்கு மினுக்' கென்று மினுக்கலாம்.

ஆனல், அவன் வீட்டுக்குள் நுழைந்ததும், எல்லாம் பெரிய ஏமாற்றமாயிருந்தது. அம்மா சமையலறையில் செத்துக்கிடக்கவில்லை; கூடத்தில் பீரோக் கண்ணுடியெதிரில் நாற்காலிபோட்டு உட்கார்ந்துகொண்டு, தலைவாரிக் கொண்டிருந்தாள். அம்மாதான் ஏகமாய் 'மினுக்'கிக் கொண்டிருந்தாள்.

சோப்புப் போட்டுக் கழுவி வெளேரென்றிருந்த முகத்தில்

லேசாய்ப் பவுடர் பூசி, நெற்றியில் பச்சைக் கலர் குங்குமப் பொட்டு வைத்திருந்தாள்.

இதுவரையில் அவன் பார்த்திராத அவ்வளவு எண்ணெய்ப் பளபளப்பு வடியும் வெண்பட்டும் ஜாக்கெட்டும் அவள் அணிந்திருந்தாள். மார்பிலே புடவைமீது ஒரு 'புரூச்' - புத்தப் புதிசு; கல்விழைத்தது; ஒளிவீசும் தங்க 'புரூச்' - அணிந்திருந்தாள். அப்பா புதிசாய் வாங்கிக் கொண்டு வந்து தந்திருப்பார். பக்கத்து அறையிலிருந்து அப்பா கூடத்துக்கு வந்தார். அப்பாகூட 'ஜோராய் டிரஸ்' பண்ணிக் கொண்டிருந்தார்.

"நேரமாயிடுத்து-இவனுக்குச் சாதத்தைப் போட்டுத் தூங்கப் பண்ணு."

"கூடக் கூட்டிக் கொண்டு போவோமே!" என்று, சிரித்துக்கொண்டே அம்மா சொன்னாள். அவளிடம் கோபத்தையே காணோம்.

"ஆமாம், கூட ஒரு நாய்க்குட்டியிருந்தால் அதையும் கூட்டிண்டுவா...இது அங்கே போனல், தூங்கி வழியும் - திரும்பி வருகிற போது, எவ்வளவு நாழியாகிறதோ என்னவோ!...பஸ் அகப்படுகிறதோ இல்லையோ! - நடந்து வருகிறோமோ என்னமோ! சுருக்கத் தூங்கப் பண்ணு."

அம்மா இவனுக்குச் சாதம் போட்டாள்.

"சமத்தாப் படுத்துண்டு தூங்குடா, கண்ணு. முனியம்மாளைத் துணைக்கு வந்து படுத்துக்கச் சொல்றேன்...நாங்க எல்லாம் பத்து மணிக்கு வந்துடுவோம்..."

இவன் வாயைத் திறந்து, ஒரு வார்த்தை பேசவில்லை. கட்டிலில் போய்க் குப்புறப் படுத்துக்கொண்டான். அவனுக்குப் பயங்கரமான ஆத்திரமும் அருவையும் உண்டாயின. அந்த உள்ள எழுச்சியில் வயிற்றைக் குமட்டி வாந்திகூட எடுத்துவிடுவானே என்று தோன்றியது. பல்லைக் கடித்துக்கொண்டு, கண்ணை இறுக மூடிக்கொண்டான். இப்போது தனக்கு அப்பாமேல் அதிகக் கரிப்பா, அல்லது அம்மாவின்மேல்தான் அதிகக் கரிப்பா என்று அவனுக்கே புரியவில்லை.

அம்மாவும் அப்பாவும் புறப்பட்டு விட்டார்கள் "போய் வரோம். சமத்தாயிரு" என்று மறுபடியும் ஒரு தடவை விடை பெற்றாள் அம்மா. இவன் கவிழ்ந்து படுத்தபடியே, "உம்" என்று முனகி, கடைக்கண்ணல் பார்த்தான். அம்மா முன்னே, அப்பா பின்னே நடந்தார்கள். அப்பா மீண்டும் ஒரு முறை இவனைத் திரும்பிப் பார்த்தார். அடேடே! இத்தனை நேரமும் இவன் கவனிக்கவேயில்லை. அப்பாவின் முகத்திலே புதிதாய் முளைத்திருந்ததே அந்தத் துளிர் மீசை, அது...அதை இப்போது காணோம்!

✲

### கண்ணுடியின் கோளாறு

அமெரிக்காவைச் சேர்ந்த மிச்சிகன் மாகாணத்தில் ஒரு மனிதன், தனக்குக் கலியாணம் நடந்த நாலாவது மாதத்திலேயே, விவாகரத்து மனுப்போட்டான். காரணம் கேட்டதற்கு, "நான் கலியாணம் செய்து கொண்டபோது, என் மூக்குக் கண்ணுடி சரியாயில்லை அது பூதம் காட்டிவிட்டது" என்றுன்.



காயம்பட்ட ஜப்பானிய ராணுவக் கைதிகளுக்கு, ஜப்பானிய நர்ஸ் சிகிச்சை செய்கிருள். பிரிட்டிஷ் நர்ஸ் மேற்பார்வை பார்க்கிருள்.



ஜப்பானியத் தற்கொலை விமானம், பிரிட்டிஷ் விமானம் தாங்கிக் கப்பலில் வந்து விழுந்து மோதி, ஒரு பலனுமில்லாமல் நாசமாகிவிடுகிறது.



சிங்கப்பூர் சரணாகதி.
சரணாகதி ஒப்பந்தத்
தில் ஜப்பானிய தள
பதி இடகாக்கி, கை
யெழுத்திடுகிறார்.

பினங்கு சரணாகதி. சரண் அடைந்த ஜப்பானியரின் அணி வகுப்பை, லெப்டினன்ட் ஜே. பிளீஸ் பார்வையிடுகிறார். ஜப்பானிய கமாண்டர் நாககாக்கி, துணை வருகிறார்.





பிரிட்டிஷ் படைகளைச் சிங்கப்பூர் மக்கள் ''வருக, வருக! எங்கள் ரட்சகர்களே'' என்று இப்படித் தான் ஆசையாய் வர வேற்ருர்களாம்.

# சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!




சருமப் பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிருர் வசந்தா. அதனுல், லக்ஸ் சோப்பை உபயோகிக்கிறேனென்றும், சருமப் பாதுகாப்பை அது ஆச்சரியகரமாக குறைக்கிறதென்றும், தன் சருமத்தை யாதொரு அப்பழுக்குமின்றிக் காப்பாற்றுகிறதென்றும் அவர் கூறுகிருர். அழகு படுத்தும் இந்த கீர்த்திபெற்ற சோப்பின் நுரை சருமத்தை உண்மையாகவே மிருதுவாகவும், மழமழப்பாகவும் செய்து காப்பாற்றுகிறது.

## லக்ஸ் டாய்லட் சோப்

LTS. 133-50-40 TM LEVER BROTHERS (INDIA) LIMITED







நைஜாம் சமஸ்தானம், ஆந்திர தேசம் தமிழ் நாடுகளுக்கு ஏஜண்டுகள்:
சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்
செகண்ட்ராபாத் — பெஜவாடா — மதுரை

# அச்செழுத்து மகிமை

தி. ஜ. ர.

அச்சின் பெருமையையும் சக்தியையும் வர்ணிப்ப தென்றால், சுலபமான காரிய மல்ல. அது நவநாகரிகத்தின் மூலவேராக விளங்குகிறது. அதன் பலாபலன்களை, இந்தக் கட்டுரை சுட்டிக் காட்டுகிறது: தெளிவாய் அல்ல, கூட்மாய்.

அஸ்தமித்தால், வந்தது விபத்து.

இரண்டு குழந்தைகளும் இரண்டு பக்கம் வந்து உபத்திரவம் செய்யும். "அப்பா, கதை சொல்லு" என்ற பல்லவிதான். இந்தக் குழந்தைகள் ஒன்றும் இந்தக் காரியத்தைப் புதிதாகச் செய்து விடவில்லை. நானும் இப்படித்தான் எங்கள் அப்பாவை ஒரு காலத்தில் உபத்திரவம செய்தேன். அவரும் தாத்தாவை இதே மாதிரியே உபத்திரவம் செய்திருப்பார். இப்படியேதான் நான்முகன் வரையில்கூட இந்தக் கதை கேட்கும் பரம்பரை தொடர்ந்திருக்கும். பெரியவர்கள் கேட்பதும் படிப்பதுமான கதை, கதை யல்ல. அதை இலக்கியம் என்றும் காலட்சேபம் என்றும் மனித வாழ்க்கையைச் சித்தரிக்கும் சித்திரமென்றும் மகோன்னதக் கற்பனை யென்றும் வேறு என்னவாவது கௌரவப் பெயர் சூடிய மண்ணுங் கட்டி யென்றும் சொல்லிக் கொள்ளுங்கள். குழந்தைகளிடம் அந்த இழவெல்லாம் பலிக்காது. அவைகளுக்குக் கதைதான் வேண்டும் - உண்மையான, சுத்தமான, மாசு மறுவற்ற கதை. தினந்தோறும் இப்படிப்பட்ட கதை சொல்லுவதென்றால், யாரால் ஆகும்? சோம்பலும் அசதியும் வேறே ஒருபுறம் வந்துவிடும்.

"எனக்குக் கதை தெரியாது" என்பேன்.

"பாப்பா பத்திரிகை போடுகிறாய். கதை தெரியாதோ? சொல், அப்பா."

"தெரிந்த கதையை யெல்லாம் சொல்லிவிட்டேன். இனி என்னிடம் கதை கிடையாது."

"ஓஹோ! அட, இனிமேல் அப்பா பாப்பா பத்திரிகை போடமாட்டார். அவருக்குத் தான் கதை தெரியாதே" என்கிறது அந்த வாண்டு!

இதற்கு மேல் கௌரவத்தைப் பறிகொடுக்க முடியாமல், கதை சொல்லத் தொடங்குகிறேன். குழந்தைகள் வெகு சுவாரஸ்யமாகக் கதையைக் கேட்கின்றன- அதாவது, கதை, கதையாக இருந்தால். இப்படியே மாதம் பூராவும், அடுத்த மாதம் நான் வெளியிடப் போகிற கதைகள் அனைத்தையுமே குழந்தைகள் கேட்டு முடித்து விடுகின்றன.

மாதம் பிறக்கிறது. 'பாப்பா' பத்திரிகை வெளிவருகிறது. அதில் உள்ள கதைகள் எல்லாம் ஏற்கெனவே நான் சொன்னவை தானே? இருந்தாலும், குழந்தைகள் அதை விடுவதில்லை. பரம சுவாரஸ்யத்தோடு, அதில் உள்ள கதைகளை யெல்லாம் விழுந்து விழுந்து படிக்கின்றன. காதால் கேட்டது ஒரு ருசி; அச்சிலே படிப்பது, ஒரு தனி இன்பம் அல்லவா? மாலையில் ரேடியோவிலே தெளிவாய், திட்டமாய்க் கேட்ட சேதியே என்றாலும், காலைப் பத்திரிகையில் அதைப் படிக்கும்

போதுதான், நமக்கு ஊர்ஜிதம் ஏற்படுகிறது. காதை விடக் கண்ணைத்தான் நாம் அதிகமாய் நம்புகிறோம். கல்விச் செல்வத்தை விடக் கேள்விச் செல்வம் மேலாயிருக்கலாம். அதையும் விடக் காட்சிச் செல்வம் மேலாகும். இதைத் தான் மனித இயற்கை சுட்டுகிறது.

சரி; குழந்தைகள், அந்தக் கதைகளைப் படித்து முடித்துவிடுகின்றன. பிறகு, என்னிடம் சண்டை தொடங்கிவிடுகின்றன.

"ஏன், அப்பா, பொய் சொன்னே?" என்கிறான் சிறுவன்.

"என்ன பொய் சொன்னேன்?"

"கிட்டு பணக்காரன், ராமு ஏழை என்றாயே. ராமு பணக்காரன், கிட்டு அல்லவா ஏழை! இப்படித்தானே பத்திரிகையில் எழுதியிருக்கிறது?"

இதைக் கேட்டு, எனக்குச் சிரிப்பு வந்துவிடுகிறது. ஏனென்றால், அந்தக் கதையைப் பத்திரிகையில் பதிப்பித்தவன் மட்டுமல்ல, அதை எழுதியவனே நான் தான். வாயால் சொன்னபடியில்லாமல், கிட்டுவையும் ராமனையும் எழுத்திலே என்னவோ மாற்றிப் போட்டு விட்டேன். இது பொறுக்கவில்லை சிறுவனுக்கு!

"நான் பொய் சொல்லவில்லை. பத்திரிகையில்தான் பொய்யாய் எழுதியிருக்கிறது."

"அச்சிலே எப்படிப் பொய் இருக்கும்? நீ தான் பொய் சொன்னே" என்று, தான் பிடித்ததையே மீண்டும் ஊர்ஜிதம் செய்கிறான் சிறுவன்.

இதற்கு என்னால், பதில் சொல்ல முடியவில்லை. ஆமாம், உண்மைதானே? அச்சிலே எப்படிப் பொய் வரும்? செடியிலே பூப் பூக்கும்; மரத்திலே பழம் பழுக்கும்; வானிலே மீன் உதிக்கும்; அச்சிலே...? அச்சிலே நிஜம் தான் பிறக்கும்! அது வேதம்! குழந்தைகள் மட்டும் அல்ல, நாம் இருக்கிறோமே பெரியவர்கள் - நாம் கூட இப்படித்தான் அநேக சமயம் மயங்குகிறோம்.

அச்சிலே எப்படிப் பொய் வரும்? மனிதனுக்குத் தான் பொய், புனைசுருட்டு, புளுகு மாயம் எல்லாம் தெரியும். அச்சுக்கு எப்படித் தெரியும்? அது சத்திய சந்தன். உண்மையை உள்ளது உள்ளபடி, அடித்து விடுகிறது. கம்பன் வாயில் பிறப்பது தமிழ்; அச்சில் பிறப்பது சத்தியம்.

சத்தியம் என்பதுதான் என்ன? ஒரு நம்பிக்கை; வர்ணம் கலந்த ஓர் ஊகம்; ரசம் பூசிய நிலைக் கண்ணாடியிலே காணப்படும் ஒரு பிரதிபிம்பம். இவ்வளவுதானே. சத்தியம் வானத்திலே இல்லை; பூமியிலே இல்லை. உங்களிடம் இருக்கிறது; என்னிடம் இருக்கிறது. சத்தியம் என்பது அனுபவத்தின் சுவடு. அந்தச் சுவடு விழுவதும் சத்தியம்; அழிவதும் சத்தியம்தான். ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான, கோடிக் கணக்கான மக்களின் மனதிலே, ஏக காலத்தில், ஒரே சொல்லை, ஒரே வாக்கியத்தை, ஒரே கருத்துத் தொடர்களை இயங்கச் செய்யும் ஒரு சாதனம் அல்லவா அச்சு. அது எப்படிப் பொய்யைத் தாங்கும்?

அச்சிலே எப்படிப் பொய் வரும்? பொய் என்பது என்ன?

மெய்யை மறைக்க வரும் திரை; ஒளியை மறைக்க வரும் இருள்; வாழ்வை மறைக்க வரும் மாயை. கிளி பொய் சொல்லுமா? கிளி சொன்னதைத்தான் சொல்லும். பொய் சொல்லாது. அந்த அளவுக்கு அது சத்தியமே யாகும். கிளியும் பொய் சொல்லாது; அச்சும் பொய் சொல்லாது. ஆகையால்தான், குழந்தைகள் மட்டுமல்ல; பெரியவர்களாகிய, நாமும்கூட அச்சிலே பெரும் நம்பிக்கை கொண்டு விடுகிறோம். அச்சிலே நாம் படித்த பல பொருள்கள், நம்மை அறியாமலேயும், நம் உள்ளங்களை ஆட்சி புரிந்து கொண்டுதான் இருக்கின்றன.

அமெரிக்காவிலே ஒரு பெரிய தினசரிப் பத்திரிகையின் ஆசிரியர் இருந்தாராம். ஒரு நாள் அவருக்கும் ஒரு கிழவிக்கும் சின்னப் பந்தயம் ஒன்று நடந்ததாம்.

"இன்று ராத்திரி மழை வரும் போல் இருக்கிறது" என்றார் பத்திராசிரியர்.

"கண்டிப்பாய் வராது" என்றாள் அனுபவம் மிகுந்த கிழவி.

"வரத்தான் போகிறது."

"வராது."

"வரும்."

"என்ன பந்தயம்?" என்று சவால் கூறினாள் கிழவி.

இதற்குமேல் ஏதும் சொல்ல, பத்திராசிரியருக்கு வாய் எழவில்லை. "சரி, பார்க்கலாம்" என்று முணு முணுத்துவிட்டு, பத்திரிகாலயத்துக்குக் கிளம்பி விட்டார். தமது பத்திரிகையின் காலநிலை அறிக்கையில், "இன்று ராத்திரி பெரிய மழை வரும். புயல் கூட அடித்தாலும் அடிக்கும்" என்று ஒரு குறிப்பைச் சேர்த்து விட்டார். மாலையில் வீட்டுக்குத் திரும்பினார். கிழவியை மறுபடியும் சந்திக்க நேர்ந்தது.

கிழவி தானாகவே, "நீங்கள் சொன்னது சரி; நான் சொன்னது பிசகு. இன்று ராத்திரி கட்டாயம் மழை வரும்" என்று இவரிடம் சொன்னாள்.

"மழையா, இப்போது என்ன அடையாளத்தைக் கண்டுவிட்டீர்கள்?" என்று கேட்டார் பத்திராசிரியர்.

"பத்திரிகையிலே போட்டிருக்கிறதே! இன்னும் என்ன சந்தேகம்?" என்று பதில் சொன்னாள் கிழவி. அவள் படித்த பத்திரிகை, இவருடையதுதான்! இதனால் தான், நேரே சொல்ல முடியாத விஷயங்களை யெல்லாம், அநேகம் பத்திராசிரியர்கள் தலையங்கத்திலே எழுதி விடுகிறார்கள்.

உலகத்து அதிசயங்களிலே ஒன்று அச்செழுத்து. அது மனிதர் உள்ளத்தை ஆட்டி வைப்பது போல, வேறெதுவும் ஆட்டி வையாது. அதன் வசிய சக்தி அளவிறந்தது. அது செய்யும் காரியங்கள் அபூர்வம்; லீலைகள் அனந்தம். அது நவ நாகரிகத்தின் மூலவேர்; ஜனநாயகத்தின் மூக்கணாங் கயிறு; இலக்கிய உலகின் பொது உடைமைப் புரட்சி.

ஆதியிலே டாக்டர் பாஸ்டஸ் என்ற ஒருவர் பாரிஸில் இருந்தாராம். அவர்தான் முதன் முதலாக அச்செழுத்தைக் கண்டு பிடித்தாராம். (இதைச் சரித்திரமாய் நம்பாதீர்கள்.) அந்த அச்செழுத்துக்களை அவர் ரகசியமாய் வைத்துக் கொண்டார்.

பைபிளைப் பல பிரதிகள் விறு விறு என்று அச்சிட்டார். அதற்கு முன்னே கையால் எழுதி எழுதித்தான், பைபிளை விற்று வந்தார்கள். கையெழுத்துப் பிரதி ஒன்று ஐந்நூறு கிரௌன் காசுகளுக்கு மேல் விற்றபோது, இவர் அறுபது கிரௌன் காசுகளுக்குத் தம்முடைய பிரதிகளை விற்ருர். ஊராருக்குச் சந்தேகம் வந்து விட்டது. சைத்தானேடு சிநேகம் கொண்டவன் இந்த மனிதன் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். இவரை உயிரோடு கொளுத்துவதென்று முடிவும் செய்து விட்டார்கள். டாக்டர் பாஸ்டஸ், உண்மையைப் பிரஞ்சுப் பார்லிமெண்டுக்கு வெளியிட்டு, தம் உயிரைக் காப்பாற்றிக் கொண்டார். இப்படியாக, முதன் முதலிலே பிசாசென்று சந்தேகிக்கப்பட்ட, ஆனல் உண்மையிலே தேவ வாக்கைப் பரப்பிய, ஞானி அச்சு.

அச்சிலே நமது பெயரைக் கண்டாலே, நமக்குப் பரமானந்தம் உண்டாகிறது. அது ஓட்டர் ஜாபிதாவாய் - என், போட்டிப் பந்தயத்தில் மூன்ரும் பரிசு மூன்றே முக்காலணப் பெற்றவர் ஜாபிதாவாய் - இருந்தால் கூடப் பரவாயில்லை. "நமது பெயரையும் கூட, அச்சு அடித்து விட்டதா!" என்று நாம் ஆச்சரியப் படுகிரும். நாம் கதை எழுதி விடலாம். ஆனல், நம்மை அமரனுக்குவது அச்சின் காரியம். ஆஹா! இன்று சிரஞ்சீவிக் கதை எழுதி மார்தட்டும் கதாசிரியர்கள் சிலபேராவது தமிழ் நாட்டிலே இருக்கிருர்கள் என்ருல், அச்சுக்கு அல்லவா நாம் தொப்பியைத் தூக்க வேண்டும்! ஓலைச் சுவடிக்கா?

பற்பல நிதிகளுக்குப் பணம் திரட்டுகிருர்கள். பத்திரிகைகளிலே அந்தப் பத்தியில் தங்கள் பெயரைக் காணவேண்டும் என்பதற்காகவே எத்தனை பேர் பணம் கொடுக்கிருர்கள்! யாராவது எழுதிய கட்டுரையையேனும் தங்கள் பெயரில் அச்சிட, எத்தனை பேருக்கு ஆசை! "ஒருவர் தமது பெயரைப் பத்திரிகையிலே காண்பது நிச்சயமாய் இன்பமாகும். புத்தகம் என்ருல், புத்தகம்தான் - அதிலே ஒரு மண்ணும் இல்லாவிட்டால்கூட" என்று, பைரன் என்ற கவிஞர் சொல்லியிருப்பது முற்றிலும் உண்மையாகும்.

யாரையோ சொல்லப் போவானேன்? நானும் தான் இருபது வருஷத்துக்கு மேலாக, பத்திரிகை புத்தகங்களுக்கு எழுதி அச்சிலே பார்த்து வருகிறேன். என்ருலும், இன்னமும் அந்த ஆனந்தம் இருக்கத்தான் இருக்கிறது. இதோ இந்த கட்டுரையையே எடுத்துக் கொள்ளுங்கள். இதை -அதாவது என் கையெழுத்துப் பிரதியைச் சொல்கிறேன் - இன்னெரு முறை படியென்ருல், என்னல் முடியாது. சனியன்! பிரம்மலிபியை யாராவது படிக்க முயல்வானே! ஆனல், நாளைக்கு அச்சிலேவரும். அப்புறம், ஆஹா, என்ன அருமையா யிருக்கிறது! 'நாமா எழுதினேம்!' என்ற உணர்ச்சி ஏற்படுகிறது. பல முறை எனக்கு நானே படித்துப் பார்த்துக் கொள்கிறேன். உண்மையிலே, அச்செழுத்து மகா மகிமை யுள்ளது. அது மண்ணைப் பொன்னுக்கும் ரசவாதி; பொய்யை மெய்யாக்கும் பீதாம்பரன்; அநித்தியத்தை நித்தியமாக்கும் ஆண்டவன். ஆகையால்தான், மனிதர்களுக்கு அச்சுச் சுதந்தரம் மிகமிகத் தேவை.

# பாலஸ்தீன் குமுறல்

எம். இஸ்மத் பாஷா

பாலஸ்தீனம் பழமையான தேசம். பைபிள், குரான் முதலிய வேத நூல்களில் இடம் பெற்ற பூமி. இங்கே நடந்த தாகச் சொல்லப் படும் புராதனக் கதைகள் பல உண்டு.

பாலஸ்தீனம் இன்றைக்கு உலக ஏகாதிபத்திய நாடுகளின் கேந்திரமான பிரதேசத்தில் இருக்கிறது. கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் போக்கு வரத்துப் பாதையின் மத்தியில் அமைந்திருக்கிறது. தற்கால சக்திகளுக்குச் சக்தி யூட்டும் எண்ணெய்க் கிணறுகள் மலிந்திருக்கும் பிரதேசத்தில் இருக்கிறது. ஏகாதிபத்தியங்களின் ஆதிக்க வேட்டை நடக்கும் வட்டாரத்தில் அமைந்திருக்கிறது. இங்கே இன்றுள்ள அரசியல் நிலைமை, நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருகிறது. தம் தம் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள, யூதர்களும் அரேபியர்களும் ஆயுதங்களைத் தாங்கி ஒருவரை யொருவர் அடித்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு, நிலைமை முற்றி விட்டது.

'யூதர் சதி ஒழிக' என்று உலக முஸ்லிம்கள் கோஷிக்கிறார்கள். ஜின்னுவும் யூதர்களைக் கண்டிக்கிறார்; ஆஜாதும் கண்டிக்கிறார். இந்த விஷயத்திலாவது இவர்கள் இருவருக்குள்ளும் அபிப்பிராய ஒற்றுமை வற்பட்டதே என்று நாம் சந்தோஷிக்க வேண்டி யிருக்கிறது! இந்தப் பாலஸ்தீனத்தின் விஷயம் என்ன?

**பாலஸ்தீனத்தில்** அரேபிய முஸ்லிம்களும் வாழ்கிறார்கள்; யூதர்களும் வாழ்கிறார்கள். பொதுவாக, அது அரேபியர்களின் தாயகம். அதன் பெரும்பாலான மக்கள் அரேபியர்கள். கிராமப் புறங்களில் ஏழை விவசாயிகளாக, அவர்கள் வாழ்கிறார்கள். யூதர்களில் பெரும்பாலோர் நகரங்களில் வசிக்கிறார்கள். அவர்கள் கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் வளர்ச்சியடைந்தவர்கள்; தொழிற்சாலைகளையும், வியாபாரங்களையும் நடத்து கிறவர்கள். ஏழை யூதர்களும் சிலர் இருக்கிறார்கள். அவர்களும் பெரும்பாலும் கிராமங்களில் விவசாயிக ளாகத்தான் இருக்கிறார்கள்.

உலகிலுள்ள யூதர்களுக்குச் சொந்தமான தாயகம் எதுவும் கிடையாது. ஐரோப்பாவில் அவர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்குக் கணக்கு வழக்கே யில்லை. பாஸிஸ்டுகள் அவர்களைப் போட்டு மிதித்தார்கள்; வீட்டை விட்டு, நாட்டை விட்டு விரட்டினர்கள்; சொத்தைச் சூறையாடினர்கள்; மானபங்கப் படுத்தி

*பாலஸ்தீன யூதர்கள் மூஸ்லிம்பாகிறார்கள் என்று ஒரு நாள் செய்தி வருகிறது. அரேபியர்களின் ஆத்திரம் வலுக்கிறது என்று இனெருநாள் செய்தி வருகிறது. இந்தப் பாலஸ்தீன விஷயம் என்ன? யூதர்களுக்கும் அரேபியர்களுக்கும் என்ன தகராறு? 'ஜன சக்தி'யின் துணையாசிரியரது இந்தக் கட்டுரை அதை விளக்குகிறது.*

ஞர்கள்; கொன்று குவித்தார்கள்.

சொல்லொணுத் துயரங்களை அடைந்த இந்த மக்களுக்குச் சொந்தமாக ஒரு தாயகத்தை ஏற்படுத்துவதற்காக, ஓர் இயக்கம் நடக்கிறது. அந்த இயக்கத்துக்கு ஜுயோனிஸம் என்று பெயர். பாலஸ்தீனத்தில் எதோ ஒரு காலத்தில் யூதர்களின் ஆட்சி நடைபெற்றிருப்பதால், அதுவே யூதர்களின் தாயகம் ஆகவேண்டும் என்று, இந்த இயக்கம் கூறுகிறது. இந்த இயக்கத்துக்கு உலகெங்குமுள்ள யூத முதலாளிகள், பணக்காரர்களின் பரிபூரண ஆதரவு உண்டு.

இந்த இயக்கத்தின் பிரதானக் கோரிக்கை என்ன என்ருல், எவ்வளவு யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேற முடியுமோ அவ்வளவு யூதர்களையும் அங்கே அனுமதிக்க வேண்டும் என்பதுதான். இந்த இயக்கத்திலே உள்ள வலது சாரிக் காரர்கள் (*Revisionists*), இன்னொரு படி மேலே செல்கிருர்கள்: பாலஸ்தீனத்துக்கு அப்பாலுள்ள டிரான்ஸ்-ஜோர்டனிலும், யூதர்கள் இவ்விதமே குடியேற அனுமதிக்க வேண்டுமென்று அவர்கள் கிளர்ச்சி செய்கிருர்கள்.

இதில் ஒரு விசேஷமான அம்சத்தை நாம் கவனிக்க வேண்டும். இந்த 'ஜுயோனிஸ்ட்' கோரிக்கைகளுக்குப் பிரதான ஆதரவு, வெளி நாடுகளிலுள்ள யூதர்களிடமிருந்துதான் கிடைக்கிறது. பாலஸ்தீனத்திலேயே வசிக்கும் யூதர்களெல்லோரும், இந்த இயக்கத்தின் கோரிக்கைகள் எல்லாவற்றையும் அப்படியே ஆதரிக்கவில்லை.

ஹிஸ்டாடுருத் என்ற இடத்தில் 1944-ஆம ஆண்டு ஒரு மகாநாடு நடந்தது. அதில் 'உடனடியாக யூத அரசாங்கம் ஒன்றைப் பாலஸ்தீனத்தில் ஏற்படுத்த வேண்டும்' என்று ஒரு தீர்மானம் நிறைவேறறப் பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு சாதகமாகக் கிடைத்த ஓட்டுகள் 24; பாதகமாகக் கிடைத்த ஓட்டுகள் 22. இரண்டே யிரண்டு ஓட்டு மெஜாரிட்டி!

ஆகவே, இந்தத் தீர்மானத்திஞல், மாபாய் என்ற யூத ஸ்தாபனத்திலேயே பிளவேற்பட்டது. இந்தத் தீர்மானத்தை எதிர்த்த கோஷ்டிக்கு மாபாய் குரூப்'பி' (*Mapai Group 'B'*) என்று பெயர். இந்தக் கோஷ்டி துவா-லீகூட்-ஹாவோடா என்ற பெயரில் தனி அரசியல் கோஷ்டியாக அன்று முதல் வேலை செய்து வருகிறது. ஹஷோமேர் ஹட்ஜர், அலியா சடாஷா, மாஸ்கனஸ் ஆகிய வேறு சில கோஷ்டிகளும், இந்தக் கோஷ்டியுடன் சேர்ந்து 'ஜுயோனிஸ்ட்' இயக்கத்தின் கோரிக்கைகளை எதிர்க்கின்றன.

இந்தப் பிளவிஞல் ஒரு விசித்திர நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நகரங்களில் வசிக்கும் யூதர்கள், யூத அரசாங்கத்தை அமைப்பதற்கு முழு ஆதரவும் தருகிருர்கள். கிராமப்புறங்களில் வசிக்கும் யூதர்களோ, இதை எதிர்க்கிருர்கள்.

என்ருலும், எல்லோரும் ஒரு விஷயத்தில் ஒன்றுபட்டிருக்கிருர்கள். வெளி நாடுகளில் அவதியுறும் யூதர்கள் இங்கே வந்து குடியேறுவதை மட்டும், எல்லோரும் விரும்புகிருர்கள்.

அரேபியர்கள் இதை முழுச் சக்தியும் கொண்டு எதிர்க்கிருர்கள். அரேபியரின் தேசிய

இயக்கம், இன்று சக்திமிக்கதாய் வளர்ந்திருக்கிறது. யூதர்கள் குடியேறுவதைக் கண்டு, அரேபியர் பயப்படுகிறார்கள்.

பாலஸ்தீனம் சம்பந்தமாக 1939-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்ட வெள்ளை அறிக்கையில், யூதர் குடியேற்றம் பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதை மீறக்கூடாது என்பதே, அரேபியரின் கோரிக்கை. அந்த அறிக்கையின்படி. அன்றிருந்து ஐந்து வருஷங்கள் வரையில் தான், யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேறலாம்; அதோடு, ஒரு குறிப்பிட்ட சிறிய பிரதேசத்துக்கு வெளியே, யூதர்கள் நிலங்களை வாங்கவும் கூடாது.

யூதர்களைப் பாலஸ்தீனத்தில் அளவில்லாமல் குடியேற விட்டு விட்டால், ஏற்கெனவே பொருளாதாரத் துறையில் வலுவுள்ளவர்களாக இருக்கும் அவர்கள், தங்களை அடிமைபடுத்தி விடுவார்களே என்று அரேபியர்கள் பயப்படுகிறார்கள்.

அக்கம் பக்கத்திலுள்ள அரேபிய நாடுகளெல்லாம், பாலஸ்தீன அரேபியரின் இயக்கத்தை ஆதரித்து நிற்கின்றன. உலக அரேபியர்களுக்கெல்லாம் பொதுவாகச் சமீபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் **அரப் லீகில்,** பாலஸ்தீன அரேபியரின் பிரதிநிதியாக ஒருவர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

இந்த நிலைமையில், ஏகாதியத்தியங்கள், தங்கள் ஆதிக்க வேட்டையை நடத்த முயற்சிக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழே இருக்கும் ஒரு மாண்டேட் நாடு பாலஸ்தீனம். ஜனங்களிடையே பிளவும் வேற்றுமையும் வளர்த்திருப்பதைத் தான், ஏகாதிபத்தியம் விரும்புகிறது. ஆனால், இப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு ஒரு விபரீத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி ஒரு கோஷ்டியை ஆதரிப்பதும் மற்றொன்றை எதிர்ப்பதும், பிரிட்டிஷாரின் பரம்பரை வழக்கம். இன்றைக்கு அதிகாரத்தில் இருக்கும் **ஆட்லி** கோஷ்டியார், முன்னெல்லாம் யூதர்களின் குடியேற்றத்தைப் பகிரங்கமாக ஆதரித்து வந்தார்கள். 'பாலஸ்தீனக் கதவுகளை யூதர்களுக்குத் திறந்துவிட வேண்டும்' என்று பார்லிமெண்டில் கூச்சலிட்டு வந்தார்கள். ஆனால், இன்று அதை நிறைவேற்ற முடியாமல் அவர்கள் தத்தளிக்கிறார்கள். ஏனென்றால், சோவியத் யூனியன் இந்த யுத்தத்தில் நாஜிகளை ஓட ஓட விரட்டித் தோற்கடித்ததாலும், ஜாதித் துவேஷமற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதாலும், பிற நாட்டு மண்ணில் ஆசை வைக்காததாலும், ருமேனியா, போலந்து, பல்கேரியா முதலிய நாடுகளில் பொதுஜன சர்க்கார்கள் ஏற்பட உதவி இருப்பதாலும், அந்த சோவியத் யூனியனின் செல்வாக்கு, மத்தியக் கிழக்கு மக்களிடையே பெருகி யிருக்கிறது. இந்தச் செல்வாக்குப் பரவாமல் தடுத்து, கிழக்கேயுள்ள தன் அடிமை நாடுகளைப் பாதுகாத்துக் கொள்வது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதான நோக்கமாகிவிட்டது. அதனாலேயே, கிரீஸில் ஸ்கோபி ஆட்சி நடக்கிறது; லெபனானில் பிரஞ்சுக்காரர்களுடன் பிரிட்டிஷார் மோதிக்கொண்டார்கள்; இதே நோக்கத்தினால்தான், அவர்கள் அரேபிய மன்னர்களுக்கும் சுல்

தான்களுக்கும் தூபம் போட்டு, அரப்லீகை அமைத்திருக்கிறார்கள். மதத்தின் பெயரால் சோவியத் யூனியனை எதிர்க்க இந்த அரப்லீகை உபயோகித்துக் கொள்ள, பிரிட்டிஷார் விரும்புகிறார்கள்.

இந்த அரப் லீக், பாலஸ்தீன விஷயத்தில் அங்கேயுள்ள அரேபியர்களையே ஆதரிக்கிறது; யூதர் குடியேற்றத்தை எதிர்க்கிறது. இதற்கு எதிராக, யூதர் குடியேற்றத்துக்குப் பாலஸ்தீனத்துக் கதவுகளைத் திறந்து விட்டால், சோவியத் யூனியனின் செல்வாக்கைத் தடுக்க வேண்டும் என்ற தன் நோக்கம் ஈடேறாதே என்று, ஆட்லி கோஷ்டி அஞ்சுகிறது.

இதே சமயத்தில், அமெரிக்காவிலுள்ள யூத முதலாளிகள்; ட்ருமன் சர்க்காருக்கு ஓர் ஆசை காட்டி வருகிறார்கள். பாலஸ்தீனத்தில் யூதர்களின் சர்க்கார் ஏற்பட்டால், அந்த யூத சர்க்கார், ஆங்கிலோ - அமெரிக்க நாடுகளுடன் தோளோடு தோள் நின்று, ஏகாதிபத்தியப் போக்குவரத்துப் பாதையைப் பாதுகாக்கும் என்று கூறிவருகிறார்கள். ஐரோப்பாவில் துன்பக் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் யூத ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டிய பிரச்னையும் மிகப் பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது. அதோடு, சாதி - அரேபியாவில் அமெரிக்கர்களுக்குச் சொந்தமான எண்ணெய்க் கிணறுகள் ஏராளமாய் இருக்கின்றன. இவற்றைப் பாதுகாப்பதற்கு ஒரு கேந்திரமான ஸ்தலம் வேண்டும். எனவே, யூதர்களுக்குப் பாலஸ்தீனத்தைத் திறந்து விடவேண்டும் என்று அமெரிக்க சர்க்கார் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

இந்த நிலையில், 'ஜுயோனிஸ்ட்' ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள், பலாத்கார பயங்கரச் செய்கைகளால், தங்கள் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள முயற்சிக்கிறார்கள். திருட்டுத் தனமாகக் குடியேறுவது, அரேபியர்களைத் தாக்கிப் பயமுறுத்துவது போன்ற செயல்களில், அவர்கள் இறங்கி யிருக்கிறார்கள். அரேபியர்களும் விடவில்லை; அவர்களும் யூதர்களை எதிர்த்துத் தாக்குகிறார்கள்.

பரஸ்பர விரோத உணர்ச்சி, பாலஸ்தீனத்தில் வளர்ந்து வருகிறது. ஐரோப்பாவில் மட்டும பாஸிஸ்ட் கொடியின் கீழ் இருந்து வந்த யூத எதிர்ப்புக் கொள்கை, ஆசியாவிலும் ஏற்றுமதி செய்யப் படுகிறது.

இந்தப் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்படுவது அத்தியாவசியமாகும். உலக சமாதானத்தை ஸ்தாபிதம் செய்வதறகாகப் பரிகாரம் காணவேண்டிய முக்கியப் பிரச்னைகளில் இதுவும் ஒன்றாகும்.

❋

**சட்டப்படி எச்சரிக்கை**

ஸான் பிரான்ஸிஸ்கோ நகரில் ராணுவ தம்பதிகளுக்கே ரயிலில் முதலில் இடம் கொடுத்து வந்தார்கள். இதனால், தனியாய்ப் பிரயாணம் செய்த பல பெண்கள், தனியாய்ப் பிரயாணம செய்த பல ஸோல்ஜர்களை ஒட்டிக் கொண்டார்கள். ரயில்வே கேட்டைத் திறந்து விட்ட காவலர்களுக் இந்த விஷயம் தெரிந்து விட்டது. "தாய் மார்களே! தயவு பண்ணி, ஒரு சோல்ஜருக்கு ஒரு மனைவி விகிதம் வாருங்கள். அதற்குமேல் வந்துவிடாதீர்கள்" என்று அவர்கள் எச்சரித்தார்கள்.

நமது
ஆடைகளை
அணியும் அன்பர்கள்
அனைவருக்கும் எமது

# தீபாவலி



# வாழ்த்துக்கள்

## A. R. P. சாரதி

274, ராமநாதபுரம் ரோட்
மதுரை

SARATHI
HAND-LOOM TEXTILES
MADURA



# இரு இலைகளும் ஒரு மொட்டும் . . .

'இரு இலைகளும் ஒரு மொட்டு'மாகப் பறிப்பதுதான் உயர்ந்த ரகமான தேயிலையைப் பறிக்கும் சரியான முறை. இப்படிச் செய்வதனால், இளம் கொழுந்தான தளிர்கள் தான் பறிக்கப்படுகின்றன என்ற நிச்சயம் ஏற்படுகிறது.

ப்ரூக் பாண்ட் கையாளும் முறைப்படி விற்பனைச் சிப்பந்திகளால் வியாபாரிகளுக்குப் புத்தப் புதிதான சரக்குகள் அடிக்கடி விநியோகிக்கப் படுகின்றன. 'இரு இலை ஒரு மொட்டு' அதன் உன்னதமான மணத்தோடே உங்களிடம் வந்து சேர்வதற்கு இந்த முறை தான் காரணம்.

இந்தியாவின் முக்கியமான இடங்களிலெல்லாம் உள்ள டெப்போக்களிலிருந்து எங்கள் விற்பனைச் சிப்பந்திகளால் தேயிலை சதா எடுத்துக் கொண்டு போகப்படுகின்றன. டெப்போவில் காலி ஆக ஆக அந்த இடத்தைத் தொழில் ஆலைகளிலிருந்து கொண்டு வரப்பட்ட தேயிலை நிரப்புகிறது.

பூரணமான மணத்தோடு கூடின, புத்தப் புதிதான குணம், திருப்தியளிக்குந்தன்மை, இவற்றை ரஸிக்க விரும்புபவர்களுக்கு 'டார்ஜீலிங் ப்ளெண்ட்' தான் சரியான தேயிலை.




# ப்ரூக் பாண்ட்

# மலை வாழ்க்கை

ஜாவாக் கதை

அவன் பெயர் ஜஸ்டஸ். அவனைப் பார்த்தால், கனவுலகில் சஞ்சரிப்பவன் போல் தோன்றும். பரம சாது. முதலில் சுமத்ராவில், கரும்பு, ரப்பர் மரம் பயிர் செய்து பணம் கிளப்ப முயன்ருன். பிறகு, என்னென்னவோ காரியங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்ருய்ச் செய்து பார்த்தான். 'இதுதான் நமக்குத் தொழில்' என்று ஒன்றிலாவது ஸ்திரமாய் நிலைத்துவிட, அவனுல் முடியவில்லை. அவன் ஒரு பித்துக்கொள்ளி என்று அவனுடைய நண்பர்கள் நினைத்தார்கள். புத்தக உலகில் உலாவுவதற்கே தகுதியானவன், மெய்யான வாழ்க்கை உலகில் பழகத் தெரியாதவன் என்று அவர்கள் கருதினர்கள். இவனைத் திருத்தவே முடியாதென்று அவர்களின் நினைப்பு. என்ருலும், கடைசியில் நடந்ததைக் கண்டு அவர்கள் ஆச்சரியப்படவில்லை. அது என்ன தெரியுமா? ஜஸ்டஸ் ஒரு வேலையில் ஸ்திரமாக அமர்ந்துவிட்டான்! பொருத்தமான ஆளுக்காக மாதக் கணக்காய்த் தேடுதேடென்று தேடி, கடைசியில் அந்த ஜனங்கள் ஜஸ்டஸைக் கண்டு பிடித்தார்கள். வயது முதிர்ந்த சினர்கள் தங்கி வாழ்வதற்காக உள்ள ஓர் இல்லத்தை மேற் பார்த்துக்கொண்டு வருவதே ஜஸ்டஸின் வேலை. மேற்பார்வை அதிகாரி! எவ்வளவு பெரிய உத்தியோகம்! ஜஸ்டஸுக்குத் தகுந்த வேலை.

அவன் ஒரு விசித்திரமான மனிதன். வாழ்க்கையிலே சாதலைக் கண்டிருக்கிருன். சாதலைப்பற்றி நினைத்ததில்லை. நினையாதவன் அதிலே வந்து சிக்கினுல், முடிவு என்ன? ஜாவா நாட்டைப் பகைப் புலமாய்க் கொண்ட இந்தக் கதையை எழுதியவர் ஜோஹான் பேப்ரிஷியஸ் என்ற ஆசிரியர். மொழிபெயர்த்தவர் சுப. நாராயணன்.

இந்த இல்லம், ஜாவாவில் எங்கேயோ ஒரு மலைப் பிரதேசத்தில் இருந்தது. இல்லத்தை ஒட்டிப் பன்றிப் பண்ணை ஒன்றும் உண்டு. பன்றிகளின் மூலம் வந்த வருமானத்தைக் கொண்டு, இல்லம் நடந்து வந்தது. மேற்பார்வை அதிகாரியின் சம்பளம் போக, ஏதோ சொற்ப லாபம் சம்பாதிப்பது கூடச் சாத்தியம்தான். ஆனுல், அதற்கு வருமானத்தைப் பெருக்கியாக வேண்டும். இப்போதுள்ள நிலையில், செலவுக்குக் கட்டி வந்ததோடு சரி. இந்த உத்தியோகத்திலே இன்னெரு சௌகரியம். படிக்கவும் சிந்தனை செய்யவும் நிறைய ஓய்விருந்தது. ஜஸ்டஸ் மகிழ்ச்சியோடு வேலையை ஒப்புக்கொண்டான். ஏதோ, குருட்டதிர்ஷ்டவசமாய், மிருக வைத்தியக் கல்லூரி ஒன்றில் கொஞ்ச காலம் படித்திருந்தான். எதற்காக அங்கே படிக்கப் போனுன் என்பது அவனுக்கே-வெகு நாட்களுக்கு முன்பே-மறந்துபோய் விட்டது. அது எப்படியாவது போகட்டும். இப்போது அந்தப் படிப்பு மிகவும் உபயோகமாயிருந்தது. ஏற்கெனவே, கொஞ்சம் நஞ்சம் தெரிந்துள்ளதோடு, பன்றி வளர்ப்பதைப்பற்றி மேலும் பல விஷ

யங்களைத் தெரிந்து கொள்வதற்காக, சில துண்டுப் பிரசுரங்களை விலைக்கு வாங்கினான்.

அவனுக்கு மேஜை, நாற்காலி முதலிய சாமான்கள் அதிகமில்லை. ஒரு படுக்கை, இரண்டொரு நாற்காலி இவ்வளவு தான் இருந்தன. புத்தகங்களை மட்டும் தன்கூடவே மலைப் பிரதேசத்துக்கு எடுத்துக்கொண்டு போய்விட்டான். ஜனங்கள் வசிக்கும் பகுதியிலிருந்து சற்று எட்டவே, இல்லம் இருந்தது. இல்லா விட்டால் முகம்மதிய மலைவாசிகளுக்கு மனவருத்தம் உண்டாயிருக்கும். பளுவான பெட்டிகளை யெல்லாம் கூலிகள் வியர்க்க விறுவிறுக்க ஓட்டமாய் ஓடிக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். இவ்வளவு புத்தகங்களையும் ஒரே மனிதன் எப்படிப் படிக்க முடிகிற தென்று, இந்தக் கூலிகளுக்கு விளங்கவே யில்லை. துவானு(துரை)க்கு மூளை சரியில்லை யென்று அவர்கள் ஏற்கெனவே தீர்மானித்து விட்டார்கள். இல்லா விட்டால், சீனப் 'படை'களிடையிலும், பன்றிகள் போன்ற அசுத்தப் பிராணிகளிடையிலும் எவனாவது வாழ விரும்புவானா? கூடியவரையில் இந்த இடத்தை நெருங்காமலே இருந்து வர, அவர்கள் முயன்றார்கள். அப்படி வந்துதான் தீர வேண்டு மென்றாலும், வேலை முடிந்ததும் கையில் கூலியை வாங்கிக் கொண்டு, செத்தோம் பிழைத்தோ மென்று வேகமாய் அகன்று போய் விடுவார்கள்.

இருளும் ஒளியும் மாறி மாறி வருகிற இந்த உலகத்தை, ஜஸ்டஸ் கூர்ந்து நோக்கினான். இங்கே தன்னால் நிம்மதியாய் வாழ முடியு மென்று உணர்ந்தான். புகைக் குழாயைப் பற்ற வைத்துக் கொண்டான். பன்றித் தொழுவத்தைக் கவனிக்கு முன்பு, சீன வேலையாட்களின் பரிசயத்தைப் பெறுவதற்காக, முதலில் அவர்களிடம் போனான். சுமத்திராவில் இருந்தபோது, சீனாவில் மக்காப் பிராந்தியங்களில் பேசுகிற சீனப் பேச்சில் சில சொற்கள் கற்றுக் கொண் டிருந்தான். இப்போது அந்தச் சொற்களை உபயோகித் தான். இடுங்கல் கண்ணும், உணர்ச்சியற்றுச் சதைப் பிடிப்பில்லாமல் வழ வழ என்று பதனிட்ட தோல் போர்த்த மாதிரி காணப்பட்ட முகமும் படைத்து, தூங்கி விழுந்து கொண்டிருந்தகுள்ளக் கிழவர்களுக்கு, இது ஆச்சரியம்ஆச்சரியமா யிருந்தது.

இவர்கள் அத்தனை பேரும், ஒருவர் பாக்கி யில்லாமல், கஞ்சாப் புகை பிடிப்பார்கள். முந்தியெல்லாம் இதை ஒளிவு மறைவாகச் செய்து வந்தார்கள். பகிரங்கமாய்ச் செய்தவர்களுக்குச் சர்க்கார் அனுமதிச் சீட்டு உண்டு. இப்போது இவர்களால் அனுமதிச் சீட்டுக்குரிய கட்டணம் செலுத்தப் பண வசதி யில்லை. அதனால், தரும எண்ணத்தோடு சர்க்காரே இவர்களுக்கு வேண்டிய அளவு கஞ்சாவை வழங்கி வந்தார்கள். இன்றைக்கெல்லாம் வாழ்ந்தாலும், இன்னும் சில வருஷமோ, சில மாதமோதான் இவர்களின் வாழ்வு. அதைத் திருப்தியோடு வாழ்ந்து விட்டுப் போகட்டுமே. கடைசிக் காலத்தில், நிம்மதியற்றுக் கவலை அரித்துப் பிடுங்கித் தின்ன விட்டுவிடுவது நல்லதா, என்ன? வைத்தியமொன்றும் இவர்களுக்கு இனிச் சரிப்பட்டு வராது. வாழ்க்கையிலே இவர்களுக்கு, இனி இந்தக் கஞ்சாவைத் தவிர வேறு ஒன்றிலும் ருசி கிடையாது. இதையும்

இவர்களுக்கு அளிக்க மறுத்து விடலாமா?

இவர்களை வேலை வாங்குவ தென்பது எளிதல்ல. கனவுலகில் மிதப்பவர்கள் போல், இவர்கள் ஊர்ந்து திரிவார்கள். சிறிய உரு வம். அழுக்குப் படிந்த பெரிய கால் சராய் அணிந்திருப்பார்கள். குச்சி மாதிரி உள்ள முழங்காலு க்கு மேல், சராயைச் சுருட்டி விட்டுக்கொண் டிருப்பார்கள். எல்லாரும் சேர்ந்து முந்நூறு நானூறு பேர் இருப்பார்கள். செய்கிற வேலை மட்டும், சாதா ரணமாய் நாலுபேர் செய்யக் கூடியதுதான். பன்றிகளை வெளியே விரட்டி விட்டு, மெலிந்து நடுங்கும் கையில் துடைப்பத்தைப் பிடித்த படி, தொழுவத்தைக் கூட் டிப் பெருக்குவார்கள். இது அன்றாட வேலை. ஓய்வு வேளை வந்ததும், படுக்கப் போய்விடு வார்கள். பக்கவாட்டில் சாய்ந்து படுத்துக் கொண்டு, கொஞ்ச நஞ்சமிருக்கும் பலத்தைப் பூரா வும் முடுக்கிவிட்டு, தடித்த குழாய்களைக் கையில் பற்றிக் கொள்வார்கள். நெருப்புத் தணல் உள்ள சிறு பாத்திரத்தின் மேல் குழாயை வைத்துக் கொண்டு, நெடுநேரம் காத்திருப் பார்கள். கடைசியில், சிறு கோலிக் காய்போல் இருக்கும் கஞ்சா உருண்டை தீப்பற்றிக் கொள்ளும்.

அப்புறம் உறங்கி விடுவார்கள். புகைப் படலம் சூழ்ந்த ஜாவா மலை வாழ்வில், தங்களுடைய இளம் பருவ காலத்து நினைவு களைப் பற்றி எல்லாம் பிரகாச மான இன்பக் கனவுகள் கண்டு மகிழ்ந்து வருவார்கள். சில வேளை, வேலைக்கு ஆள் பற்ருமல் போய் விடும். அப்போது, கப்பல்களில் இருப்பதுபோல், அடுக்கடுக்காய் ஒன்றன் மேல் ஒன்ருக அமைந் துள்ள படுக்கை வரிசைகளை நெடுகலும் பார்த்துக் கொண்டே வந்து, யாராவது தூங்காமல் இருக்கிருனு என்று ஜஸ்டஸ் கவ னிப்பான். பெரும்பாலோர் தூங்கிக் கொண்டுதான் இருப் பார்கள். ஒரு சிலர் கண்ணைத் திறந்தபடியே வெட்ட வெளியை வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டு, கனவு கண்டுகொண் டிருப்பார்கள். தங்களைச் சுற்றி லும் நடப்பது இவர்களுக்குத் தெரிவதில்லை. இந்த ஆழ்ந்த உறக்க நிலையிலிருந்து இவர்களைத் தட்டி எழுப்புவது எளிதான காரிய மல்ல. கூப்பிட்டதும், பணிவாக எழுந்து, ஜஸ்டஸோடு கூடத் தொழுவத்துக்குப் போவார்கள் வாரா வாரம், இவர் களில் இரண் டொருவராவது வெறும் கஞ்சா மயக்கத்தில் ஆழ்ந்து விடுவதோடு நில்லாமல், என்றும் மீளாத நிரந்தர மயக் கத்திலும் ஆழ்ந்து விடுவதுண்டு. சில வேளை, ஒருவன் தன் படுக் கையில் கிடந்தபடியே செத்துப் போயிருப்பான். பல மணி நேரங் கழித்துத்தான் அடுத்த படுக்கை யில் இருப்பவனுக்கு விஷயம் தெரியவரும். செத்தவனை, எவ் விதச் சடங்கோ, ஆரவாரமோ இல்லாமல், இல்லத்தின் பின்புற முள்ள இடுகாட்டில் புதைத்து விடுவார்கள். ஏற்கெனவே, எத் தனையோ பேரைப் புதைத்த சிறு சிறு மேடுகள் அதிலே ஆங் காங்கு தென்பட்டன. மறு உல கத்துக்குச் செல்லும் தங்க ளுடைய நெடுந்தூரப் பயணத் திலும் கஞ்சாக் குழாயை விடா மல் தங்களுடனேயே அவர்கள் எடுத்துச் செல்வார்கள்.

அந்த மலைப் பிரதேசம், விரக் தியும் கனவும் கலந்த அமைதி

யான ஒரு தனி உலகம். தூய காற்றில் அமைதியாக நடமாடித் திரிந்து, துன்பமில்லாமல் சாகிற உலகம் அது. அங்கே பன்றிகள் நன்ருய்க் கொழுத்து வளர்ந்தன. மலையின் கீழுள்ள நகரங்களுக்கு அவைகளைக் கொண்டு போய் அங்கே நல்ல விலைக்கு விற்று வந்தார்கள். இந்த விஷயத்தில், இல்லத்தின் தர்ம கர்த்தர்களான கருணையுள்ள சீமான்கள், சீமாட்டிகளுக்கெல்லாம், இந்த வியாபாரத்தில் நிரம்பவும் திருப்தி.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கிழவர்களின் பெயர்களையெல்லாம் நன்ருய் மனத்தில் பதிய வைத்துக்கொள்ள, தன்னுல் ஆனவரைக்கும ஜஸ்டஸ் முயன்று பார்த்தான். ஆனல், அது முடியவில்லை. ஒருவனை இன்னன் என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுமுன்பே, அவன் திடுதிப்பென்று இறந்து விடுவான். அதோடு, டான், பியோங், வாங் என்ற குடும்பப் பெயருடையவர்களும், சென், லஓ என்ற குடும்பப் பெயருடையவர்களும், நிரம்ப அதிகமாயிருந்தார்கள். இவை, நினைவில் தரிக்க மாட்டோமென்றன. கடைசியில், யார் யார் எவன் எவன் என்ற வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ளும் முயற்சியை, அவன் கைவிட்டு விட்டான். எல்லாரிடத்திலும் ஒரே விதமான தாய்மை உணர்ச்சிதான் அவனுக்கு இருந்து வந்தது. அவன் சொன்ன எதையும் அவர்கள் முழு மனத்தோடு செய்வார்கள். அவர்களது பக்தி மயமான இன்பத் துயிலை, அவன் மரியாதையோடு கௌரவித்து வந்தான்.

மாலை நேரங்களில் திடீரென்று உண்டாகும் நீர்ச்சத்துள்ள வாடைக் காற்று உடம்புக்கு ஆகவில்லை. அதனுல், ஒரு நாள் அவனுக்குச் சளி பிடித்து, காய்ச்சல் வந்துவிட்டது. படுக்கையில் படுத்துக் கிடக்காமல், கடுமையான காய்ச்சலோடு அங்கு மிங்கும் சுற்றிக் கொண்டே திரிந்தான். கடைசியில், மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விட்டான். கிழவர்களுக்குக் கிலிபிடித்து விட்டது. எப்படியோ ஒருவன் உதவிக்கு ஓடி வந்தான். ஜஸ்டஸைக் கீழே நகரத்துக்கு எடுத்துச் சென்ருர்கள். ஆஸ்பத்திரியில் சேர்ந்ததும், ஜஸ்டஸ் கண் விழித்தான். ஆஸ்பத்திரியில் பல வார காலம் கிடந்தான். அப்புறம், டாக்டர் சொன்னதன் மேல், ஆறு மாத விடுமுறை பெற்று ஐரோப்பா போய்ச் சேர்ந்தான். இவன் இல்லாத காலத்தில் பன்றிப் பண்ணையைக் கவனித்துக் கொள்ள, வேறு யாரோ ஓர் ஆளை அமர்த்திக்கொண்டார்கள். ஆகையால், தன்னுடைய சீன ஆட்களைப் பற்றியோ, பன்றிகளைப் பற்றியோ, இவன் எவ்விதக் கவலையும் கொள்ளத் தேவையில்லையென்று இவனுக்கு ஆறுதல் சொன்னர்கள்.

கிட்டத் தட்ட இருபது வருஷங்களாய் டச்சு இந்தியத் தீவுகளில் வாழ்ந்துவிட்டு, இப்போதுதான் ஜஸ்டஸ் முதன் முதலாய் ஐரோப்பாவுக்கு விடுமுறையில் போயிருந்தான். விடுமுறை முடிந்ததும், இரண்டு பெட்டி நிறையப் புத்தகங்களையும் ஒரு மனைவியையும் ஐரோப்பாவிலிருந்து தன்னுடன் கொண்டு வந்தான். மணம் புரிய வேண்டுமென்று அவன் நினைத்ததே இல்லை. தானே ஸ்திரமான ஆளல்ல; உலகத்தோடு ஒத்து

வாழத் தெரியாது. விவாகம் தனக்குப் பொருத்தமல்ல என்றே அவன் எண்ணினன். ஆனல், தான் தங்கியிருந்த விடுதியிலேயே தங்கி வந்தவளும் முப்பது வயதை அப்போது தான் எட்டியவளுமான பள்ளி ஆசிரியை ஒருத்தியுடன் சில நாள் உலாவித் திரிந்து பழகிய பிறகு, அவனுடைய பழைய எண்ணமெல்லாம் பறந்து போயிற்று. காரியம் இப்படித் தான் எதிர்பாராதபடி ஒரு மாதிரியாய் நடந்து முடிந்தது. ஜாவாவில் தன்னேடு அவள் வாழ்வதானல், அவளுக்கு மகா சங்கடமாயும் மந்தமாயும் இருக்கும், வேறே வழி யில்லை என்றெல்லாம், அவளிடம் அவன் திறந்து சொல்லி விட்டான். அவள் இதை யெல்லாம் கேட்டு அஞ்சி விடவில்லை. அச்சமா? சேச்சே! அவன் சொன்னது பூராவும் அவளுக்குப் பரம சந்தோஷமாய் இருந்தது. அவளது ஆசையையே அது தூண்டி விட்டது. ஜாவாவைப் பற்றி அவள் தெரிந்து கொண்டதெல்லாம், புத்தகங்களைப் படித்துத் தெரிந்து கொண்டதே. ஜாவாவி லுள்ள மலைகள்! சீனக் கிழவர்களிடையே இவன் புரிந்து வரும் பரோபகாரசேவை! இவைபற்றி யெல்லாம் அவள் கேட்டாள். ஆஹா! இவனுடன் எங்கே வேண்டுமானலும் அவள் போகத் தயார். இவனுக்குத் தான் என்ன சாந்தம், என்ன பெருமிதமான லட்சியம்! உயிர் கருகிப் போன தன் உள்ளத்துக்கு நீர் வார்த்து அதைச் செழிக்க வைக்க வந்த பூமான் அல்லவா இவன்! இவனுக்கு அவள் உற்ற துணையா யிருப்பாள். வீட்டில் இவன் சுகமாய் வாழச் சகல ஏற்பாடுகளும் செய்வாள். காய் கறி பயிரிட, இவனுக்கு ஒத்தாசையா யிருப்பாள். இப்படி யெல்லாம் அவள் நினைத்துக் கொண்டாள். சமையல், வீட்டு வைத்தியம் இவைகளையும் கொஞ்சம் கற்றுக் கொண்டாள்.

இப்படியாக, ஒரு நாள் மாலை, இருட்டுவதற்குச் சற்று முன்பு, மலைப் பிராந்தியப் பண்ணைக்கு இவர்கள் இருவரும் வந்து சேர்ந்தார்கள். தப்பிப் பிழைத்திருந்த சீனர்களில், ஜஸ்டஸை அடையாளங் கண்டு கொண்ட ஒரு சிலருக்கு, 'துவான்' தம்மோடு தொலை தூரமான குளிர் தேசத்திலிருந்து ஒரு துரைசாணியையும் கூட்டி வந்திருப்பது ஆச்சரியமாயிருந்தது. உலர்ந்து போன அவர்களுடைய உதடுகளில் புன்சிரிப்பு அரும்பியது.

மூன்று வாரம் வரையில், அவள் எப்படியோ சகித்துக் கொண்டிருந்தாள். அப்புறம், கீழே நகரத்துக்குப் போகாமல் மலைமீதே இருக்க, அவளால் முடியவில்லை. அவளுக்குத் தூக்கம் கெட்டுப் போய் விட்டது. இரவு வந்து விட்டால், ஒரே பயமாய்ப் பயந்தாள். ஓசைப் படாமல் வீடெங்கும் புகுந்து கொண்ட மூடுபனி, அவளைப் பய முறுத்தியது. நலிவுற்றுச் செத்துக் கொண்டிருக்கும் கிழட்டுச் சீனர்களின் உருவங்களே அவளது கற்பனை பூராவையும் ஆக்ரமித்துக் கொண்டன. அப்புறம் மாரிக் காலம் வந்தது. ஒவ்வொரு நாளும், சாயந்திர வேளையில், இடி முழங்கி மலைகளெங்கணும் எதிரொலி எழுப்பிக் கொண்டே இருந்தது. பன்றிகள் இருப்புக் கொள்ளாமல் கத்திக் கொண்டே இருந்தன. மூச்சைத் திணறடிக்கிற இனிய கஞ்சாவின் மணமும், சாவின் மணமும் நிரம்பிய சீனர்களின் வாசஸ்தலத்தில்

மட்டும், நடமாட்டமின்றி நிம்மதியாயிருந்தது. இங்கே ஆண்டவனின் கோபத்தைக் கண்டு அஞ்சுவோர் யாருமில்லை. அதைப் பற்றிய பேச்சுக் கூடக் கிடையாது.

தன்னுடன் வந்து விடும்படி, அவள் ஜஸ்டஸைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். இவனுக்குள்ள அறிவுக்கும் திறமைக்கும், நகரத்தில் எத்தனையோ தொழில் துறை இருக்கும். வேலை மாறி வேலை பெறுகிற வரைக்கும் உள்ள இடைக் காலத்தில் கஷ்டம் தோன்றுமவிருக்க, இவனுக்கு அவள் பிரஞ்சு மொழி கற்றுக் கொடுப்பாள். தன்னை மட்டும் மெய்யாகக் காதலிப்பதானல்...

அவன் பெருமூச்செறிந்தான். ஆனல், இணங்கி வரவில்லை. இங்கே உள்ள தொல்லைகளை அவளால் பொறுக்க முடியாதென்பது அவனுக்குத் தெரியாமலில்லை. அது, பெண்களுக்கு உகந்த வாழ்க்கையல்ல. எல்லாம் அவனல் நேர்ந்த தப்பு. ஜாவாவைப் பற்றி அவளிடம் சொன்ன போது, தான் அவளுக்கு உண்மையைச் சரியாய் எடுத்துச் சொல்லத் தவறி விட்டதாக, இப்போது தான் அவன் கண்டான். அவள் உடனே போய் விட வேண்டியதுதான். மறுபடியும் நிம்மதியாய்த் தூங்க முடிகிற வரைக்கும், எல்லாவற்றையும் தீர ஆலோசித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வரும் வரைக்கும், அவள் இங்கே வருவது சரியல்ல தான் என்று அவன் எண்ணினன். அப்புறம் இவன் சொல்லுகிறபடி, அவள் கட்டாயம் நடப்பாள். அவள் இஷ்டத்துக்குக் குறுக்கே நிற்க, இவன் விரும்பவில்லை. ஆனல், தான் இதை விட்டுப் போவது என்பது மட்டில் முடியவே முடியாது. அவன் இங்கே இல்லாமல் விடுமுறை பெற்றிருந்த போது, அவனுக்குப் பதிலாக வேலை பார்த்த ஆள் சரியாய் நடந்து கொண்டதாகத் தெரியவில்லை. பாவம்! கதியற்ற கிழவர்களுக்கு வசதியாகக் காரியங்களை எப்படிச் செய்து வருவதென்று, அந்த ஆளுக்குப் பிடிபடவில்லை. கிழவர்களைக் கஷ்டப் படுத்தி வேலை வாங்கியிருக்கிறன். இவர்களைத் தண்டிக்கிற நினைப்பில், கஞ்சாக் குடிக்காமல் இருக்கும்படி கூட, அந்த ஆள் இவர்களை நிர்ப்பந்தம் செய்திருக்கிறன். ஒரு குட்டிக் கலகம் கூட நடந்திருக்கிறது. ஒரு சீனன் கோடரியால் அந்த ஆளைத் தாக்க முயன்றிருக்கிறன். இல்லை, ஜஸ்டஸ் போக முடியாது. ஆனல், அவள் அவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பார்க்கப் போனல், அவள் வருமுன்பு, எத்தனையோ வருஷம் தன்னந் தனியாக அவன் அங்கே வாழ்ந்து வந்திருக்கிறன். அவனுக்கு அவனுடைய புத்தகங்கள் இருக்கவே இருக்கின்றன.

ஆகவே, அவள் புறப்பட்டு விட்டாள். கண்ணில் கண்ணீர் வழிகிறது. தன்னிடமும், தான் தேர்ந்தெடுத்துக் கொண்ட மனிதனிடமும் ஏற்பட்ட ஏமாற்றம், அவள் நெஞ்சை உறுத்துகிறது.

பேசாமல், வெளிறிட்ட முகத்தோடு, அவன் தன் அலுவல்களைப் பார்த்து வந்தான். அவனுடைய புத்தகங்கள் அவனுக்கு ஆறுதலளிக்கவில்லை. இப்போது, அவன் படிப்பவையெல்லாம், நகரத்திலிருந்து அவனுடைய மனைவி விடாமல் எழுதி வந்த

கடிதங்கள்தான். சுருக்கமாகப் பதில் எழுதி விடுவான். தான் சௌக்கியமா யிருப்பதாய்ப் பொய் எழுதுவான். அவளுக்கு நிறைய ஓய்வு வேண்டுமாகையால், மனத்தை அலட்டிக் கொள்ள வேண்டா மென்று யோசனை சொல்லுவான். தன் நண்பர்களுக்கு எழுதி, அவளைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளக் கேட்டிருந்தான்.

மலை மேலே உள்ள தபால்காரன் - குதிரை மீதேறி வரும் வயதான ஒரு சுதேசி - ஒருநாள் வழக்கம்போல் தபால் கொண்டு வர வில்லை. பின்னல், வெகு நாள் கழித்து ஒரு கடிதம் வந்தது. கடிதத்தை உடைக்கு முன்னே, அதில் இன்னதுதான் எழுதியிருக்கு மென்று, அவனுக்குத் தெரிந்து விட்டதுபோல் இருக்கிறது. அதில் அவள் தன்னுடைய பரபரப்பு அடங்கி விட்ட தாகவும், நெடு நாள் யோசித்துப் பார்த்ததில் இருவரும் தனித்தனியே பிரிந்து போவதே நல்லதாய்த்தோன்றுவதாகவும் தான், எழுதியிருந்தாள். இவனுடைய லாயர் நண்பனை கீஸ்லெர் ஹோரவன் என்பவனே, இந்தக் கஷ்ட காலத்தில் அவளுக்கு நிரம்ப ஒத்தாசையாயிருந்து வந்தானும்; இதை அவள் மறைக்க விரும்ப வில்லை. அதே தபாலில், அந்த நண்பனிடமிருந்தும் ஒரு கடிதம் ஜஸ்டஸுக்கு வந்திருந்தது.

ஜஸ்டஸ் அந்தக் கடிதத்தைப் படிகக வில்லை. அதைக் கொண்டு தன் புகைக் குழாய்க்கு நெருப்புப் பற்ற வைத்துக் கொண்டான். மேஜை மேல் இருந்த தன் மனைவியின் உருவப் படத்தைப் பார்த்தான். அதை வேறே எங்கேயாவது எடுத்து வைத்து விட வேண்டுமோ, வேண்டாமோ என்று யோசித்துப் பார்த்தான். நன்றாய் யோசித்து ஒரு முடிவுக்கு வரும் வரையில், அது அங்கேயே இருந்து விட்டுப் போகட்டுமே என்று தீர்மானித்தான்.

வெகு தூரம் உலாத்தி விட்டு வீடு திரும்பியதும், தன் மனைவியின் படத்தைப் புன்முறுவலோடு பார்க்க, அவனால் முடிந்தது. மனத்தில் எரிச்சல் உணர்ச்சி இல்லை. அன்று மாலையே மனைவிக்குக் கடிதம் எழுதினன். அவளுடைய இஷ்டப்படி செய்யலாம். தன் நண்பன் கீஸ்லெர் ஹோரவன் போன்ற நேர்த்தியான மனிதனுடன் கூட, அவள் சர்வ மங்களமும் பெற்று வாழ்வதில் இவனுக்கு மகிழ்ச்சிதான். இவனுடைய வாழ்த்து அவர்களுக்கு உரிய தாகும். இப்படியெல்லாம் எழுதிக் கடிதத்தை அனுப்பிய பிறகு, இவ்வளவு நாளைக் கப்புறம், முதல் முதலாக ஒரு புத்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டான்.

மெல்ல மெல்ல அவனது இதயத்தில் சாந்தி நிலவத் தொடங்கியது. தனக்குக் குடும்ப வாழ்க்கை ஒத்துவராது என்பது அவனுக்கு ஏற்கெனவே தெரிந்த விஷயம் தானே! முட்டாள் தனமாய்க் கலியாணம் பண்ணிக் கொண்டிரா விட்டால், அவளைப் பிரிந்ததால் ஏற்பட்ட துயரம் இல்லாம லிருந்திருக்குமல்லவா, அது தப்புத் தான்.

அப்புறம், மீண்டும் அடைமழைக் காலம் வந்து விட்டது. இரவில் புயலடித்தது. அதன் ஆரவாரம் தாங்காமல், பன்றிகள் பயந்து நடுகிக் கூச்சலிட்டன.

இது அவனுக்குப் பழக்கிவிட்ட சங்கடிதான். இதனுல் மனதுக்குக் கஷ்டமில்லை. உலாந்தாவிலிருந்து கொண்டுவந்திருந்த புத்தகங்களை, அவன் அமைதியாகவும் சந்தோஷமாகவும் படித்தான்.

சீனக் கிழவர்கள், தங்கள் பாட்டுக்கு இனிமையான நஞ்சைப் புகைக் குழாயில் இட்டுப் புகைத்த வண்ணமும், வாரா வாரம் இரண்டொருவர் அமைதியாக மடிந்த வண்ணமு மிருந்தார்கள். மலைப் பண்ணையைச் சுற்றிலும் பழுப்பு நிறமான மூடுபனியும் மழைத் திரையும் ஆகாயத்தில் மிதந்து திரிந்தன. மெல்லிய, நீல நிறக் கஞ்சாப் புகையால் உண்டான அநித்தியமான நுண்ணிய இன்பக் கனவுகளும், அவற்ருேடு இழை இழையாய்ப் பின்னிக் கலந்தன.

*

## கல்லோரல் குழவி கடவுளாகிறது!

கல்கத்தா நண்பர் ஆர். எம். சோமசுந்தரம் பின்வரும் ரசமான சம்பவத்தை நமக்கு எழுதி யிருக்கிருர்:

கல்கத்தாவில் குண்டுமாரி பெய்யத் தொடங்கியது. நாங்கள் வெளியேறினேம். தாடகேசுவரம் என்ற பக்கத்தூரில் போய்க் குடியேறினேம். அங்கே நாங்கள் பிடித்த வீடு மிகவும் சிறியது. ஆகையால், ஆட்டுகல்லேயும் குழவியையும் வாசலில் போட்டிருந்தோம்.

குடிபோன மறுநாட் காலையில் வெளியே வந்து பார்க்கிருேம். ஆட்டு கல் குழியில், குழவி ஜோராய் நிமிர்த்தி நிற்க வைக்கப் பட்டிருக்கிறது. அதன் தலையில் ஏராளமான குங்குமம் அப்பப்பட் டிருக்கிறது. செவ்வரளி மாலை ஒன்று குழவியைச் சூடி யிருக்கிறது! ஆட்டு கல்லுககு முன்னே, அடுத்த வீட்டு வங்காள அம்மாமி மண்டியிட்டுக் கண்குவித்து, பக்தி பரவசமாகி யிருக்கிருள்.

எங்களைக் கண்டதும், அவள் கோபத்தோடு, "என்ன ஐயா! நீங்கள் இப்படி அநியாயம் செய்யலாமா? சிவலிங்கத்தை இப்படியா வாசலில் அலட்சியமாய்ப் போடுவது!" என்ருள்!

மாவரைக்கும் ஆட்டுகல்லும் குழவியும் இப்படிச் சிவலிங்கமாய் மாறிக்கொண் டிருந்தால், தோசை சுட்டுச் சாப்பிடுவது எப்படி என்று நாங்கள் திகிலடைந்து விட்டோம்!

## தும்மாதே!

சீனவில் சில அமெரிக்க விமான சோல்ஜர்களிடம், மூன்று சீனக் கூலிகள் வேலை பார்த்தார்கள். அவர்களுடைய பெயர்களை உச்சரிப்பது, அமெரிக்க சோல்ஜர்களுக்குக் கஷ்டமா யிருந்தது. சீனப் பெயர்களுக்கு ஏதோ மொழிபெயர்ப்புச் செய்து, தாங்களாக மூன்று பெயர்களைச் சூட்டினர்கள். ஒருவனுக்கு ஹூ பீ என்றும், மற்ருெருவனுக்கு ஸோ லாங் என்றும், மூன்ருமவனுக்குத் 'தும்மல்' என்ற பொருள் கொண்ட ஸ்நீஸ் என்றும் பெயரிட்டார்கள்.

அந்தத் 'தும்மல்' என்ற சீனனுக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் தெரியும். அவன் வருத்தம் கொண்டான். கர்னலிடம் போனன். "என்னைத் 'தும்மல், தும்மல்' என்று கேலியாய் அழைக்கிருர்கள். இதை நிறுத்த வேண்டும், எஜமான்" என்று புகார் செய்தான்.

"அப்படியே உத்தரவு போடுகிறேன். உன் உண்மைப் பெயர் என்ன?" என்று கேட்டார் கர்னல்.

"அ சுக்" என்று, தன் பெயரைத் தெரிவித்தான் சீனன்!

மேலே: ஜப்பானிய சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோ
கீழே இடது பக்கம்: சக்கரவர்த்தியுடைய தம்பி. சிச்சிபு. யுத்தம் நடந்த போது சிறையில் இருந்தார்



கீழே வலது பக்கம்: ஜப்பானியப் பட்டத்து இளவரசன் ஆக்கிஹிட்டோ. 13 வயசு. மன்னர் பட்டம் துறந்து விட்டுப் போனால், சிம்மாசனத்திலே இந்தக் குழந்தை தான்.









மேலே: பாலஸ்தீன் நாட்டுபுறம் இன்னமும் புராதன வாழ்வே நடத்துகிறது. பக்கம்: மண் ஜாடிகளில் பெண்கள் நீர் கொணரும் காட்சி. கீழே: இன்னமும் கிராம மக்களில் பலர் மீன் பிடித்து ஜீவிக்கிறார்கள்.







மேலே: ஆஜாது தலைமையில் பஞ்சாப் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம். பக்கம்: லாகூரில் ராஷ்டிரபதி வரவேற்புக்குப் பதில் அளிக்கிறார்.



மேலே: டில்லி காங்கிரஸ் சேவகிகள் கேட்கும் கேள்விகளுக்கு ஆஸாப் அலி பதில் அளிக்கிறார். கீழே: ஆசார்ய கிருபலானி, சரத்சந்திர போஸைத் தழுவிக் கொள்கிறார்.





மேலே: கமலா நேரு ஆஸ்பத்திரி நிதிக்காக சரோஜினி தேவி, காந்தி - நேரு படங்களை ஏலம் போடுகிறார். கீழே: அ. இ. க. கமிட்டியில் ராஷ்டிரபதி பிரசங்கம்.





பக்கம்: அ. இ. கா. கமிட்டிக்குப் பிரகாசம் முதலியவர்கள் விஜயம். கீழே: அப்துல் கபார்க்கானைச் சூழ்ந்த பெருங் கூட்டம்.





பக்கம்: மெஹ்தாப், பார்டலாய் முதலிய தலைவர்கள் அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்துக்குப் பம்பாயில் விஜயம் செய்தார்கள்.



பக்கம்: இந்தோ-சீனவில் பௌத்த குருவை, பெண்கள் வணங்குகிறார்கள்.





பக்கம்: அன்னமியர் அருமையான லாந்தர்கள், கண்ணாடிகள், விசித்திரப் பொம்மைகள் செய்வார்கள்.



பக்கம்: கட்டிடம் கட்டக்கால்வாயில் படகிலே மணல்மூட்டைகள் கொண்டு செல்கிறார்கள்.



பக்கம் :
ஜாவாவில் ஒரு மசூதியில் அமக்களமாய்ப் பாட்டு முழங்கியும் குழந்தை கும்பகர்ணக் குஞ்சாக இருக்கிறது.

பக்கம் :
ஜாவாச் சிமாட்டி எத்தனை தலையணை போட்டுக் கொண்டு சவாரி செய்கிருளோ அத்தனைக் கத்தனை அந்தஸ்திலே உயர்ந்தவள்.



# ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை : திருச்சிராப்பள்ளி

## எங்கள் அரிய இனிய இலக்கிய வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| கீதாஞ்சலி - ரவீந்திரநாத் தாகூர் | 2 | 8* |
| தமிழ்க்குமரி பாடல்கள் - ஸ்ரீ யோகியார் | 2 | 8* |
| கட்டுரைக் கரும்பு - வி. ஆர். எம். செட்டியார் | 2 | 0 |
| கவிதை கலை விமர்சனம் - சுப. நாராயணன் | 2 | 0* |
| குமரியின் சபதம் - (நாடகம்) சபரிராஜன் | 1 | 0 |
| நட்சத்திரக் குழந்தை - (கதைகள்) T. R. சர்மா | 1 | 4 |
| அசோகவனம் - ஆ. முத்துசிவன் | 2 | 8 |
| புயல் - (நாவல்) ரங்கநாதன் | 2 | 8* |
| கண்ணனும் காந்தாரியும் - (மூன்று விசேஷ நாடகங்கள்) பேராசிரியர் சுந்தரேசன் | 1 | 4* |
| விஜயன் - (சிறந்த நாடகம்) ரா. அ. பத்மநாபன் | 0 | 12* |
| சிறை அனுபவம் - ஆஸ்கார் ஒயில்ட் | 1 | 4 |
| உமர்கயாம் பாடல்கள் - ஸ்ரீ யோகியார் | 1 | 0 |
| சிறந்த சிறு கதைகள் - ஆஸ்கார் ஒயில்ட் | 1 | 4 |
| இந்திரா முதலிய நாடகங்கள் - கே. ஸ்ரீ. | 2 | 0* |
| சிந்தனைக் கதிர்கள் - (பாடல்கள்) பண்டித ரத்நம் | 0 | 8 |
| பல்லிகை - (மூன்று சிறந்த காதல் கதைகள்) | 2 | 8* |

**STAR PUBLICATIONS : PALAKARAI, TRICHINOPOLY**


88854




# IODISAL

## அயோடிசால்

-:(ரத்த சுத்தி மருந்து):-

இது தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனால் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மேகம், முடக்கு, கண்ட சூலைகள், வாதம், வாயு, மேக ரோகங்களையும் தோலைப்பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொறி, சிரங்கு, தேக அரிப்பு முதலியவைகளையும் குணப்படுத்தி தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தை சுத்தி செய்து மலப்ரவிர்த்தியை ஒழுங்காக்கி ரத்தவிருத்தியை உண்டாக்கும்.

**எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்**

தயாரிப்பவர்கள் :

**THE SOUTH INDIAN Mfg. Co., MADURA**

சென்னை & ஆந்திர ஏஜண்டுகள் :

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ் 155, நைனியப்ப நாயக்கன் தெரு, பி.டி. மதராஸ்

மைசூர் சமஸ்தானம் :— சேஷ மஹால் பார்மஸி, பெங்களூர் ஸிடி

நைஜாம் சமஸ்தானம் :— சீதாராயா ஜெனரல் ஸ்டோர்ஸ் ஸிகந்திராபாத்

# வைத்தியர் திண்டாட்டம்

கே. ராம ராவ்

[காலம்: 1944. டிசம்பர். காட்சி: ஓர் இந்தியரின் வீடு. ஒரு பாயில் ஒரு பெண்மணி படுத்திருக்கிறாள். வைத்தியர் மோ. க. காந்தி, ரணவைத்தியர் முகம்மது அலி ஜின்னா, டாக்டர் தே. ப. சப்ரூ, ராஜா மாதிரி தோன்றும் ஒரு கனவான், டாக்டர் ஆர்ச்சிபால்ட் வேவல் ஆகியவர்கள் வருகிறார்கள்.]

இந்தியா: எனக்கு என்னதான் வந்து விட்டது? இப்படி நீங்கள் இத்தனை பேரும் சேர்ந்து என்னைச் சூழ்ந்து கொண்டு, எனக்குப் புத்திமதி சொல்லக் கிளப்பிவிட்டீர்களே! சிலரை நான் வேண்டியது உண்மை; வேண்டாதவரும் ஏன் வந்திருக்கிறீர்கள்? வேண்டுமானால், நீங்கள் ஒவ்வொருவராய் வாருங்கள். நோயைப் பரிசோதித்துப் பாருங்கள். உங்களுக்குத் தெரிந்த மருந்தைக் கொடுத்துவிட்டுப் போங்கள். உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு; என்னைச் சுப்பா நச்சுப் படுத்திக் கொண்டே இருக்காதீர்கள்.

வைத்தியர் காந்தி: (பொக்கை வாய்ச் சிரிப்போடு) உனக்கு எவ்வளவு காலமாய் நான் வைத்தியம் பார்த்து வருகிறேன்; உனக்கே தெரியுமே. உனக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னார்கள். மறுபடியும் ஒரு தரம் உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். தன்வந்தரி ஒரு சட்டம் வகுத்திருக்கிறார். அது என்ன தெரியுமா? ஒரு வைத்தியன் யாருக்காவது வைத்தியம் செய்ய ஆரம்பித்து விட்டால், தான் குணமடைவதில் நோயாளிக்கு எவ்வளவு சிரத்தை இருக்குமோ அதைவிட அதிகமான சிரத்தை, நோயாளியைக் குணப்படுத்துவதில் வைத்தியனுக்கு இருக்கவேண்டுமாம். உன்னுடைய நோய் நாள்பட்ட நோய். நாள்பட்ட நோயைக் குணப்படுத்துவதிலேதான் வைத்தியனுடைய சாமர்த்தியம் இருக்கிறது. உன் விஷயத்தில் எனக்கு இரண்டு வகையில் அக்கறை. பழைய சுலோகம் ஒன்று உண்டு. அது உனக்குத் தெரிந்திருக்கும். 'பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும், நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்பதுதான் அந்தச் சுலோகத்தின் கருத்து (ஜனனி ஜன்ம பூமிஸ்ச்ச ஸ்வர்க்க தபி கரீயசி). என் வைத்தியத்தால், நீ எவ்வளவோ குணமடைந்திருக்கிறாய். நீ அப்படி ஒன்றும் அபாயமான நிலைமையில் இல்லை. உணவுப் பஞ்சத்தால்தான், நீ நிரம்பக் கஷ்டப்படுகிறாய். அநியாய விலை கொடுத்துக் கள்ளச் சந்தையில் வாங்கிய மருந்துகளை நீ சிலவேளை அதிகமாகச் சாப்பிட்டு விடுகிறாய். அதுவும் உனக்கு உபத்திரவம் தந்து கொண்டே இருக்

நோயுற்ற பாரதமாதாவுக்குப் பலரும் வைத்தியம் செய்ய வருகிறார்கள். ஆனால், எந்த வைத்தியரை அவள் விரும்புகிறாள் என்று கூறுகிறார். ஸ்ரீ ராமராவ் அவர் பண்டித ஜவஹரின் தினசரிப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தவர்; ஆசிரியராய் வரப்போகிறவர். 'சக்தி காரியாலய'ப் பிரசுரமான 'இந்தியானாவில்'வில் அவர் எழுதிய தன் மொழிபெயர்ப்பு இந்தக் கற்பனை.

கிறது. இதெல்லாம் உதவாது; விட்டுவிடு. உபமான பாஷை யில் சொல்லட்டுமா? அது உனக்கு நன்ருய்ப் புரியும். வர்ணுசிரம தர்மம் நிறைந்த இந்த நாட்டிலே, அது வெகு பிர சித்தமானது. உன் முகமும் மூளேயும் (அறிவாளிகளும் படித்த வகுப்பினருப்) செய்து வருகிற காரியங்கள் விசித்திரமா யிருக் கின்றன. அவை அடிக்கடி உன் உடம்பு பூராவையுமே காட்டிக் கொடுத்துத் துரோகம் செய்து விடுகின்றன. உன் கைகள் (இளே ஞரும் பலசாலிகளும்) செயல் புரிய மறந்து விட்டனபோல் தோன்றுகிறது. உன் ஜீர் ணக் கருவி (வியாபார வகுப்பார் கள்) அளவுக்குமேல் பட்டினி கிடக்கிறது. இதை நான் முன்பே சொல்லிவிட்டேன். ஆனுல், உடம்பில் உள்ள மற்ற உறுப்பு களுக்கே நஷ்ட முண்டாக்கிவிட் டுக் கள்ளச் சந்தையில் கொள்ளே லாபம் அடிக்கிற சந்தர்ப்பங் களில் மட்டும், அது கொழுக்கத் தின்று விடுகிறது. உன் கால் களே (ஹரிஜனங்கள், உழவர், தொழிற்சாலேக் கூலியாட்கள்) நீ வெகு நாட்களாய்க் கவனிக்கா மல் விட்டுவிட்டாய். எல்லாவற் றையும் விட மோசமானது, உன் உடம்பில் இருக்கும் அன்னிய வஸ்துச் சேர்க்கைதான். உடனே பேதிக்குக் கொடுத்து, அதை வெளியேற்றித் தீரவேண்டும். சாதாரணமான, எளிய வைத்தி யம்தான் என்னுல் செய்ய முடி யும். நான் எப்போதும் இப் படித்தான் செய்வேன். பழைய வைத்திய சிகிச்சைகளே யெல் லாம் (காங்கிரஸ் பிரதிக்ஞையும் சுதந்தரப் பிரதிக்ஞையுப்) தொடர்ந்து கடைப்பிடித்துவா. பழைய சத்தியாக்கிரக மாத்திரை களேயும், 'இந்தியாவை விட்டு வெளியேறு' மருந்தையுமே சாப் பிட்டுவா. சர்வரோக நிவாரணி யாகிய என் பழைய மருந்தை இன்றும் நான் கைவிடவில்லே. என்னுடைய அந்த மருந்தும் நானும் சதா உன் அருகில் இருந்து வருவோம். உலகத்தில் எங்கேயானுலும் சரி, தீமையைப் போக்கி நன்மைபுரிய யார் முயன்ருலும், அவர்களுக்கு என் மருந்தும் நானும் ஒத்தாசை செய்யத் தயார். உன் விஷயத் தில், நோயின் போக்கை அனு சரித்து அவ்வப்போது புதிதாகச் சில மூலிகைகளேச் சேர்த்துக் கொள்வேன். பத்தியத்தைப் பற் றிச் சொல்லவா? எளிய உணவை நிறையச் சாப்பிடு. நாட்டின் புண்ணிய தினங்களான விரத நாட்களில் இடைக்கொருகால், நோன்பிருந்து வருவது நல்லது. உடல் பயிற்சி வேண்டும். அதற் குச் சர்க்கா சுற்று. உடுத்துவ தற்குக் கதரை உபயோகி. கத ரானது வீட்டில் நெய்த துணி என்பது மட்டு மல்ல; மனத்திலே சுதந்தரம் பெறச் செய்யும் ஒரு கருவியு மாகும். மனம்போல் தானே வாழ்வு? உன் உயிருக்கு அபாய மில்லே. வாழ வேண்டு மென்ற எண்ணம் உனக்கிருக் கிறது. உன் உடம்பை ஆள்கிற ஓர் ஆத்மாவும் உனக்கிருக்கிறது. ஆகையால், நீ வாழ்வாய்.

**ரண வைத்தியர் ஜின்னு:** (ஒற் றைக் கண்ணுடி அணிந்திருக்கி ருர். ரண சிகிச்சைக்கான சகல தளவாட சாமான்களும் வைத் துக்கொண் டிருக்கிருர். அறுக் கும் மேஜை மட்டும் இல்லே.) மீண்டும் உன்னிடம் வந்திருக்கி றேன். நீ என்னேத் தேடவு மில்லே; எனக்கு அழைப்பு அனுப்பவு மில்லே. உனக்குள்ள நோய் இன்னதென்று முந்தியே

நான் சொல்லி யிருக்கிறேன். மறுபடியும் அதையே சொல்லு கிறேன். உன் இடது கையும, வலது கையும் கொஞ்சம் கூடச் சரியா யில்லை. எந்த ரண வைத்தியனை வேண்டுமானாலும் கேட்டுப் பார். கெட்டுப் போன சதையை உடம்பிலே வைத்திருப்பது தப்பு. அதை வெட்டி எறிந்துவிட வேண்டும். புதுமாதிரியான ரண சிகிச்சை முறை ஒன்றை, நான் கண்டு பிடித்திருக்கிறேன். பாகிஸ்தான் சிகிச்சை என்று அதற்குப் பெயர். உனக்கு இந்தச் சிகிச்சையை இலவசமாகச் செய்கிறேன். வெறும் வைத்திய முறையால் உனக்கு ஒரு பயனு மில்லை. என் சிகிச்சை சரியில்லை யென்று சொன்னாலும் சொல்லுவாய். ஆனல், அந்தக் கிழட்டுப் பயல் ஜார்ஜ் பெர்னர்ட் ஷா என்ன சொல்லுகிறுன் தெரியுமா? வைத்தியர்கள் அடிக்கடி தப்பான மருந்து கொடுத்து விடுவார்களாம்; எதிர்பாராமல் நோய் தீர்ந்து விடுமாம். என்ன யோசிக்கிருய்? வந்தது வரட்டு மென்று, நான் சொல்லுகிறபடி தான் செய்து பாரேன்.

டாக்டர் தே. ப. சப்ரூ: எந்த ஒரு தனிப்பட்ட வைத்திய முறையிலும் எனக்கு நம்பிக்கை யில்லை. நோயாளி பேரில்தான் எனக்கு நம்பிக்கை. அவர் என்னை அழைக்காவிட்டால் கூடக் குற்றமில்லை. இந்த நாட்டுக்குப் பொருத்தமான வைத்தியம் ஹோமியோபதி முறைதான் என்றே நான் நம்புகிறேன். நோயாளியின் குணங் குறியைக் கொண்டு சிகிச்சை செய்வது ஹோமியோபதி வைத்திய முறை. இந்த வைத்தியம் நான் செய்வேன். முக்கியமாக, நாள் பட்ட வியாதிகளில் எனக்கு நிரம்பச் சாமர்த்திய முண்டு. சமாதான மாத்திரை, ஐக்கியச் சூரணம், ராஜிக் கஷாயம் இவைக ளெல்லாம் கொடுத்து, நான் சொஸ்தப்படுத்தி விடுவேன்.

ராஜா மாதிரி உள்ள கனவான்: நான் டாக்டரே இல்லை. ஆனாலும், நான் சொல்வதைக் கேள். உன் பல்லைப் பிடுங்கிவிட வேண்டும். உன் தொல்லைக்கு முக்கியமான காரணம் உன் பல்தான். யாரைப் பார்த்தாலும், நீ கண்டபடி கடித்துத் தொலைக்கிருய். மற்றவர்களின் விஷயம் எப்படிப் போனலும் சரி, என்னை நீ கடித்துக் கொண்டே இருப்பது என்னமோ முழு உண்மை. உன் பிரஜா மண்டலம் (மூச்சுப் பைகள்) என்னை உள்ளிட்டு எல்லார் தூக்கத்தையும் கலைத்து விடுகிறது. உனக்கு ஆக்கமுள்ள சட்டரீதியான அரசாங்கம் வேண்டுமா? நான் சொல்வது சாஸ்திரீய அரசியல் ஆட்சியைப் பற்றியல்ல; மக்களை ஆளும் ஆட்சியைப் பற்றியே. இதற்குச் சரியான மருந்து எண் 93 தான் (இந்திய சர்க்கார் சட்டப் பிரிவு 93). இதை வைத்துக் கொண்டு திருப்தியடை. என்ன இருட்டாயிருந்தாலும், இந்த அறையை விட்டு வெளிக் கிளம்பாதே. எனக்குக்கூட இருட்டறைதான் நிரம்பப் பிடிக்கும். இப்போதெல்லாம், இது எனக்குப் பழகிப் போய் விட்டது.

டாக்டர் ஆர்ச்சிபால்ட் வேவல்: (இடது கையில் தூய தண்ணீர் அடைத்த ஒரு போத்தல். வலது கையில் வேப்பங் குழைக் கொத்து. அப்பட்டமான மந்திரவாதி போன்ற தோற்றம்.) என்னை நம்பு. இந்த வைத்தியர்

களை எல்லாம் தூரப் போய்விடச் செய்தாலொழிய, உன் வியாதி தீராது. நம்பிக்கையாலேயே உனக்குக் குணம் வரும். உனக்கு வேண்டியது என்ன தெரியுமா? சுதந்தரம். நினைத்த படி நடமாடித் திரிய, உனக்குச் சுதந்தரம் இருக்க வேண்டும். நான் ஒரு சோல்ஜர்தான். இன்னும் கிறிஸ்தவனுகவே இருந்து வருகிறேன். கிறிஸ்தவக் கோட்பாட்டில், எனக்கு நம்பிக்கை உண்டு. அது நோயைத் தடுக்கிற தென்ற விஷயம் யாரும் அறிந்ததே. நான் மேல் நாட்டான். ஜபத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு நாளும், காலையில் எழுந்ததும், "இந்தியப் பாது காப்புச் சட்டத்தின் கீழ், நான் நாளுக்கு நாள் குணமடைந்து வருகிறேன்" என்று தனக்குத் தானே ஜபம் செய்துகொண்டு வா. கட்டாயம் உனக்குக் குணம் ஏற்படும். மனோசிகிச்சை வளர்ச்சியடைந்துள்ள காலமாக்கும் இந்தக் காலம். ஆகையால், பழங் காலத்து மந்திர தந்திரங்களைக் கடைப்பிடித்துவா என்றுதான் நான் யோசனை சொல்லுவேன். என்னதான் இருந்தாலும், மந்திர தந்திரங்கள் இன்னும் இந்த நாட்டில் மறந்து போய்விட வில்லை. பாம்புக் கடி, தேள் கடிக்கெல்லாம் இவை உபயோக மாகியே வருகின்றன. விரல் சுளுக்கானுல் என்ன, பேயை ஓட்டுவதானுல் என்ன? எல்லாவற்றுக்கும் மந்திரந்தான். முந்தியெல்லாம், மந்திரங்களும் அற்புதங்களுந் தான் உன்னைப் போஷித்து வளர்த்து வந்தன. இவை நம்பிக்கையின் சாரம். கடுகளவு நம்பிக்கை யிருந்தால் மலையையே நகர்த்தி விடலாம் என்று எங்கள் வேத நூல்கள் ஓதுகின்றன. அது எவ்வளவு தூரம் உண்மையோ எனக்குத்தெரியாது. ஆனுல், நம்பிக்கை ஜனங்களைக் கட்டாயம் அமைதியாய் இருக்கச் செய்து விடும். இது நிச்சயம். உனக்குத் தாமத மின்றி அமைதி கிடைத்தாக வேண்டும்.

**இந்தியா:** நீங்கள் அனைவர் சொன்னதையும் கேட்டு விட்டேன். மொத்தத்தில், வைத்தியர் ஐயா சொன்னதுதான் எனக்குப் பிடிக்கிறது. ராஜா மாதிரி நிற்கும் கனவான் எனக்கு ஒன்றும் செய்ய வேண்டிய தில்லை. அவரை நான் அறிந்த வரையில், அவர் என்னவோ பெரிய சுய நலக்கார விதூஷகன் மாதிரியே தோன்றுகிருர். ஹோமியோ பதிக்காரருக்கு, வேண்டிய போது ஆளனுப்புவேன். அவரும், நான் கூப்பிடும் போதெல்லாம் வருவதாகத்தான் சொல்லுகிருர். டாக்டர் வேவலுக்கு இங்கே வேலை இல்லை. இதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆள்வார் அடக்குவார் இன்றி அகப்பட்டதையெல்லாம் வாரிச் சுருட்டிக்கொண்டு போகும் ஒரு கூட்டம் இருக்கிறது. அதை இந்திய மருத்துவ சேவகர் சங்கம் என்பார்கள். அதில் சேர்ந்திருக்கும் உரிமைகூட, டாக்டர் வேவலுக்கு இல்லை. அப்படி இருக்க, அவர் இங்கே ஏன் வந்தார்? எனக்குச் சிகிச்சை செய்வதிருக்கட்டும். முதலில், அவருடைய உடம்பிலே ரத்தம் பாய்ச்சியாக வேண்டும். 'வைத்தியரே, முதலில் உம்மைக் குணப்படுத்திக் கொள்ளும்' என்று அவருடைய வேத நூலே சொல்லுகிறது. இதை அவர் நினைவில் வைத்துக் கொள்ளட்டும். நம்பிக்கையின் மூலம்

என்னைக் குணப்படுத்துவதாக, டாக்டர் வேவல் பேசுகிறார். சில நாளைக்கு முன்பு தானே, ஏகப் பட்ட மருந்துகளும் ரண சிகிச்சைகளும் நிரம்பிய, பிர மாதமான, நவீன வசதியுள்ள ஒரு மருத்துவ சாலையை, அவர் கான்பூரில் திறந்து வைத்தார். அவர் எனக்குச் சொன்னாரே அந்த யோசனை மனப்பூர்வமாய்ச் சொன்னதுதானா? அவரிடத்தில் கறுப்பு, வெள்ளை என்று இரண்டு வகையான மருந்துகள் இருக்கும் போலிருக்கிறது. மற்றவருக்குக் கிடைக்க வேண்டிய புகழை வேண்டுமானால், அவர் பறித்துக் கொள்ளலாம்; மற்றவர்களின் சிகிச்சை முறைகளை ஓட்டிப் போகக்கூட அவரால் முடியாது. பிரசித்தி யடைந்திருக்கும் டாக் டர்கள் மாதிரி இவரும் எத்தனை பேருக்குத் தப்பு மருந்து கொடுத் துக் கொன்றிருக்கிறாரோ, எனக் குத் தெரியாது. இவர் தொழில் நடத்துவது பிரிட்டிஷ் வர்த்தக சங்கத்திலேதான். இவர் அங்கே பிய்த்துப் பிடுங்கி எறிந்த சரித்திர இழைகள், தாறுமாறாகச் சிதறிக் கிடக்கின்றன. மந்திர தந்திரங் களைக் கையாளும்படி எனக்கு இவர் யோசனை சொல்லுகிற போது, இந்தச் சிகிச்சை 'தேசி ய'ச் சிகிச்சை என்கிறார். அபாய கரமான ஆத்மதிருப்தி அவருக்கு ஏற்பட்டு, ஒரு நோய்போல் அவ ரைப் பீடித்திருக்கிறது. சொல் லப்போனால், அவர் டாக்டரே அல்ல. அறைகள் என்றால், சிறைக் கூடத்திலுள்ள காவல் அறைகளைத்தான் அவருக்குத் தெரியும். அதிர்ஷ்டக் கட்டை யான ஜனங்களை அவைகளிலே தான் அடைத்து வைப்பார்கள். நிலம் என்றால், செத்தவர்களும், செத்துக் கொண் டிருப்பவர் களும் நிரம்பிய போர்க்களம் தான் அவருக்குத் தெரியும். நம்பி நம்பியும், பித்தலாட்டங் களுக்கு ஆளாகியும், நான் என்ன பாடுபட் டிருக்கிறேன் என்பதை டாக்டர் வேவல் அறிய மாட்டார். எனக்கு வேண்டியது மதபோதனை யல்ல; மனோதத்துவப் பிரசங்கமு மல்ல. சுதந்தரமான காற்று, சுதந்தரமான வயல் புறங்களைப் பற்றி அவர் பேசுகிறார். அது எனக்கும் சம்மதமே. அவை கிடைப்பது எப்படி? பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்ற இந்தக் கிடங்கிலிருந்து முதலிலே என்னை வெளியேற்ற வேண்டாமா? இங்கே சரியாய் மூச்சு விட முடியாமல் திணறல் எடுக் கிறதே. நாளுக்கு நாள் உடம்பு நலிந்து மெலிந்து கறங்கி வருகிறதே. ரண வைத்தியர் ஜின்னா சொன்னது ஒன்று கூட எனக்குச் சம்மத மில்லை. ஆனா லும், புரை ஓடிய அங்கங்களைக் கொஞ்சம் அறுக்கத்தான் வேண் டும். இதை நான் ஒப்புக்கொள்ளு கிறேன். என்மேல் அபிமான முள்ள வைத்தியர் ஐயா அவர் கள் தருகிற மாத்திரை, மருந்து, ரத்த விருத்தி பானம் எதையும் நான் எப்போதும் பிரியமாய்ச் உட்கொள்ளுவேன். இடையில் நீங்கள் (டாக்டர் வேவல் தவிர மற்றவர்) எல்லாரும் சேர்ந்து, இப்போது என் ரத்தத்திலே மித மிஞ்சிப் பெருகிப் போய்விட்ட வெள்ளை அணுக்களை (நோய் வரா மல் காப்பதற்காக உள்ளவை) வெளியே விரட்டிவிட, உங்க ளால் முடிந்த முயற்சியை யெல் லாம் செய்யுங்கள். அந்த அணுக் கள் தான் எனக்கு நிஜமாக உள்ள சங்கடம். அவற்றை என் னால் சகிக்க முடிய வில்லை.

# செய்கையிலே பக்குவம்

கே. எம். முன்ஷி

நான் இதை எழுதுகிறேன். இதை நன்றாய் எழுதுவதே எனது முதல் வேலை. ஆனால், நான் அசட்டையாக எழுதுகிறேன். எழுத்துப் பிழைகள் விடுகிறேன். சந்தர்ப்பத்துக்குப் பொருத்த மில்லாத சொற்களை உபயோகிக்கிறேன். ஏன்? ஒன்று, நான் சரியாய்ப் படித்திருக்க மாட்டேன்; அல்லது, அரையுங் குறையுமாகக் காரியங்களைச் செய்வதே என் பழக்கமாகி யிருக்க வேண்டும்; அல்லது, நான் ஒரு சோம்பேறியாயிருக்க வேண்டும்; அல்லது, என் மனது வேறு விஷயங்களிலே திரிந்துகொண் டிருக்க வேண்டும். என்னிடம் பலவிதப் பழக்கங்கள் ஒட்டிக்கொண் டிருக்கின்றன. சோம்பேறித்தனம், அஜாக்கிரதை, அந்நிய விஷயங்களில் ஈடுபாடு - இவை யெல்லாம் என்னை ஒட்டிக் கொண்ட பழக்கங்கள். எழுத்து வேலையிலே என் மனம் ஒருமுனைப் பட்டிருக்க வில்லை; என் வேலையை அன்றி, அந்நிய விஷயங்களிலே அது ஈடு பட்டிருக்கிறது. இதனால் தான், என் வேலை சுத்தமாயில்லை. ஆனால், என் எழுத்து வேலையில், என் முழுக் கவனமும் ஒருமுனைப் பட்டிருக்குமானால், இப்படிப் பல பழக்கங்களிலே எனக்கு உள்ள பசை அற்று விடும்.

ஸ்ரீமதி பெஸண்ட் ஒரு முறை கூட்டத்தில் பேசிக்கொண்டே யிருக்கையில், ஒரு துண்டுக் காகிதத்தைக் கிழித்துவிட்டதை, நான் பார்த்தேன். அந்தத் துண்டுக் காகிதத்தை, நான்கு சம பாகங்களாக, அவர் கிழித்தார். கிழித்து அவைகளைக் கச்சிதமாய் மேஜை மீது வைத்தார். இது ஒரு சின்னக் காரியம் தான்; எங்கேயோ ஞாபகமாய்ச் செய்த காரியம். என்றாலும், எவ்வளவு சுத்தமாய்ச் செய்தார்! ஏதோ அகஸ்மாத்தாய்ச் செய்தது போல், அதை அவர் செய்ய வில்லை. இதிலே ஒருவன் கவனத்தைச் செலவிடுவானா என்று நாம் நினைக்கக் கூடிய ஒரு காரியத்தில், அவர் இப்படி ஒருமுனைப்பட்ட கவனம் செலுத்தி வந்திருக்கிறார். அதனால், அவருக்கு ஒரு பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பழக்கத்தினால் விளைந்த பலனே இது - அவர் எங்கேயோ ஞாபகமாய்க் காகிதம் கிழித்த காரியத்தைத் தான் குறிப்பிடுகிறேன்.

காந்திஜி ஒரு காகிதத்தில் மூன்றே மூன்று வரிகள் எழுதுகிறார். வார்த்தைகள் தெளிவா யிருக்கின்றன. எழுத்துப் பிழையே கிடையாது. பொருள் தெளிவா யிருக்கிறது. வார்த்தைகள், வாசகனின் உள்ளத்தை உருக்கி விடுகின்றன. ஏன்?

1934-ஆம் வருஷம் ஒரு நாள் ராத்திரி 2-மணி இருக்கும். காங்

செய்கையிலே பக்குவம் உண்டாக உண்டாக, கர்ம பலனில் ஆசை போய்விடும் என்ற உண்மையை, எளிய, ரஸமான உதாரணங்களால் முன்ஷி விளக்குகிறார். இது அவருடைய 'ஸோஷல் வெல்பேர்' கட்டுரை யொன்றின் சுருக்கம்.

கிரஸ் அமைப்பு விதிகளின் நகலை, அவர் கட்டளைப்படி, நான் தயாரித் திருந்தேன். இந்த நகலை, அவர் பரிசீலனை செய்து திருத்திக் கொண் டிருந்தார். 'ஸெஷன்' என்று குறிப்பதா, ஸெஷன்ஸ்' என்று குறிப்பதா, எது பொருத்தம் என்று ஒரு வார்த்தையில் சந்தேகம் வந்தது. அவர் பரிசீலனையை நிறுத்தினர். நானும் அவரும் அது பற்றிச் சர்ச்சை செய்தோம். அந்த அர்த்த ராத்திரி நேரத்தில், நான் என் ஜாகைக்குப் போய், ஓர் அகராதியை எடுத்துக் கொண்டுவர வேண்டிய தாயிற்று. சரியான வார்த்தை எது என்று கண்டு, அதை உபயோகித்தோம். ஒரு சின்ன வாக்கியம்; அதிலே ஒரு சிறு வார்த்தை - அதைப் பொருத்தமானதாகக் கண்டு பிடித்துப் போடுவதில், காந்திஜி பூரண கவனமும் செலுத்தினர். இது தான், செய்கையிலே பக்குவம் என்பது.

வாழ்க்கையின் எந்தத் துறையிலாயினும் சரி; ஒருவன் பக்குவம் அடையவேண்டுமானல், அவன் கர்மயோக மார்கத்தைக் கடைபிடித்தே யாக வேண்டும். ஒரு வாலிப வக்கீல், ஆரம்ப காலத்தில் என்ன செய்கிருர்? தம் கட்சிக்காரனைத் திருப்தி செய்து, எப்படியாவது குடும்ப காலட்சேபத்தை நடத்தப் பார்க்கிருர். கர்மத்தின் பலனிலேதான் அப்போது அவருக்குப் பற்றுதல்.

அவர் இரண்டாவது படியை எட்டுகிருர். அப்போது அவர் விரும்பும கர்மபலன் இவ்வளவு கேவலமா யில்லை. 'தன் சகாக்களை யெல்லாம் மிஞ்சிவிட வேண்டும், கீர்த்தி பெற வேண்டும்' என்ற ஆசையாய் மாறிவிடுகிறது அவர் விரும்பும் கர்ம பலன். மற்றவர்களைவிட அவர் உயர்ந் தெழுந்து விட்டால், இந்தக் 'கர்ம பலன்' களில் அவருக்கு உள்ள ஆசை குறைந்து விடுகிறது. கைக் கொண்ட வழக்கை, தம்மால் முடிந்த மட்டில் திறமையாய் நடத்திவிட வேண்டும் என்ற ஒரே ஆசைதான் அவருக்கு இருக்கிறது.

1920-ஆம் வருஷம் ஜலியன் வாலா பாக் படுகொலைபற்றி, லாகூரில் ஹண்டர் கமிட்டி விசாரணை புரிந்தது. அந்தக் கமிட்டியின் முன்பு சாட்சிகள் விட, பம்பாய் ராஜதானிச் சங்கத்தார் என்னை அனுப்பினர்கள். அதற்காக எனக்குப் பணம் கொடுப்பதாகவும் ஏற்பாடு. பம்பாயை விட்டுப் பலநாள் வெளியே போய் விட்டால், என் தொழில் நாசமாகி விடும்.

ஆகையால், இதில் பணம் வாங்குவது நியாயம் என்றே நான் நினைத்தேன். பணத்தைப் பற்றிய எண்ணத்தால், வேலையிலே ஊக்கம் குன்றி விட்டது. வேலைக்குக் கிடைக்கப் போகும் பலன், என் மனதை அமுக்கிக் கொண்டே யிருந்தது.

இப்போதோ, பொதுஜன சேவையாக, சில சமயம் நான் மேற்கொள்ளும் வழக்குகளில், 'கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும், நியாயத்தை நிலை நிறுத்த வேண்டும், நிரபராதிகளைக் காப்பாற்ற வேண்டும்' என்ற எண்ணமே, எனக்கு முக்கியத் தூண்டுகோலா யிருந்து வருகிறது. என்னிடம் உள்ள ஏதோ சொற்பத் திறமை முழுவதையும் ஒரு முனைப் படுத்தி வழக்கிலே ஈடுபடுத்த, நான் முயற்சிக்கிறேன். சொந்த

லாப நஷ்டங்களைப் பற்றிப் பொருட்படுத்துவதே யில்லை.

ஒரு சட்ட அறிஞன், இதையும் விட உயர்ந்து எழலாம். ஒரு ஞானேசுவரரும் ஒரு யாஞ்ஞியவல்கியும், வெளி விஷயங்களால் கொஞ்சமும் பாதிக்கப் படாமல், ஆலமரத்தடியிலே உட்கார்ந்து விட்டார்கள். அவர்களுக்குச் சட்டம் என்பது தர்மமாய்க் காட்சியளித்தது. மனிதர்கள் ஒருவருக் கொருவர் கொள்ளும் தொடர்புகளிலே இருக்கவேண்டிய இசை பற்றிய ஒரு தெய்வீக நியமமாய் அது சாட்சியளித்தது. அந்தத் தர்மத்தை, தர்மத்துக்காகவே விளக்க வேண்டுமென்று அவர்கள் பதித்தார்கள். எவ்வளவு உயர்ந்த நிலையைப் பெற இயலுமோ அவ்வளவு உயர்ந்த நிலையைப் பெற்ற கர்ம யோகத்துக்கு இது தான் உதாரணமாகும்.

செய்கை பக்குவம் பெற்று உயர உயர, பலனில் உள்ள பற்றுதல், தன்னை யறியாமலே குறைந்து கொண்டுபோகும் என்பதற்கு, மற்றோர் உதாரணமும் காட்டலாம். பங்கு மார்க்கட்டில், ஒரு மனிதன் பிரவேசிக்கிறான். பணம் சம்பாதிக்க, அவன் விருப்புகிறான். பணத்தை இழக்க, அவனுக்குப் பயம். தன் சகாக்களை யெல்லாம் மிஞ்சிவிடுவதிலே அவனுக்கு ஆசை. வரக் கூடிய லாப நஷ்டங்களைப் பற்றிய எண்ணத்தால், அவன் முயற்சி சிதறுகிறது.

அவன் இன்னம் கொஞ்சம் மேலே ஏறுகிறான். வெற்றியால் பணம் கிடைத்துவிட்டது. சகாக்களைப்பற்றி, இனிமேல் அவன் பயப்பட வேண்டியதில்லை. பண மார்க்கட்டின் ஏற்ற இறக்க நிலவரங்களை, முன்போல் இல்லாமல் கவலையற்ற முறையில் ஊகிக்கும் சக்தி, அவனுக்கு இயற்கையாகவே உண்டாகி விடுகிறது. இப்போது, அவனுடைய வியாபாரங்கள் மிகத் திறமையாகவும் குறிபிசகாமலும் நடைபெறுகின்றன. இவ்வாறாக, அவன் பக்குவத்தை நெருங்குகிறான்.

ஆனால், நடக்காத ஆச்சரியம் நடந்துவிடுவதாக வைத்துக் கொள்ளுங்கள். பண ஆசையையும், நஷ்ட பயத்தையும், அடியோடு அவன் உதறி விட்டதாக, எண்ணிக் கொள்ளுங்கள். அவனுடைய வியாபாரங்கள் இன்னமும் மிகத் திறமையாகவும் குறிபிசகாமலும் நடை பெறும். தன் வேலையில் அவன் பூரண பக்குவம் அடைந்து விடுவான். கர்ம பலன்களில் அவனுக்கு ஆசை போய் விடும். இனி அவை அவனுடைய கவனத்தைச் சிதறடிக்க மாட்டா.

கர்மத்தைப் பலனிலே பிணைக்கும் தளைகள் எவை என்று, பகவத் கீதை பூராவும் திரும்பத்திரும்பக் கூறியிருக்கிறது. பொதுவாய்ப் பார்க்குமிடத்து, விருப்பு, வெறுப்பு, அச்சம், பகைமை இந்த நான்கும் தான் அந்தத் தளைகள். அடிப் படையிலே இவை யாவும் காமத்தால் விளைபவையே. ஒருவன் தன்னைத் தானே கட்டுப்பாடு செய்து கொள்ளுவதன் மூலம், யோக நிலை அடையலாம். அப்போது இந்தக் காமங்களின் சக்தியெல்லாம் ஒன்று திரண்டு, மற்றொரு விதமான ஓர் அரிய சக்தியாகி, அவன் உள்ளத்தினுள்ளே ஓர் அபூர்வமான மாறுதலை உண்டாக்கிவிடும்.

குடிசைத் தொழிலை ஆதரியுங்கள்!

# "SCABIOL"

**Magic Cure for all Skin Diseases**

# ஸ்கேபியால்

சொறி சிரங்கு, முகப்பரு, வேனல்கட்டி, கரப்பான், சேத்துப் புண் முதலியவைகளுக்கு இணையற்ற நிவாரணி

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

**ஏஜண்டுகள் தேவை!**

தயாரிப்பவர்கள் : **THE MADURA COTTAGE INDUSTRIES**

Manufacturers & Representatives

**17, Perumal Tank Street, : MADURA**

---

1872-ல் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 73-ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மக்களால் உபயோகிக்கப்பட்டும், புகழப்பட்டும் வருவதுமான

மதுரை

## M. காதர் சாஹிப் & ஸன்ஸ்

—"யானை மார்க்"—

- சந்தனாதித் தைலம்
- அரைக்கீரை தைலம்
- மிளகாய்த் தைலம்

} குளிர்ச்சி, கூந்தலழகு ஆரோக்கியம் தருபவை

- நாஷனல் பிளவர் டஸ்ட்

(உடுப்பு, ரிக்கார்டு பெட்டிகளில் அந்து, பாச்சை முதலியவைகளை அணுகவொட்டாமல் பரிமள வாசனை தரக்கூடியது)

மற்றும் வாசனைப் பாக்கு, தசாங்கம், ஸ்னான பவுடர், ஊதுவத்திகள், சந்தன பில்லைகள், சந்தன பவுடர், பன்னீர் வகையராக்களும் கிடைக்கும்.

சரக்குகள் வாங்கும்பொழுது எமது 'யானை' டிரேட் மார்க்கை கவனிக்க கோருகிறோம்.

**M. KHADER SAHIB & SONS.,**

**MANUFACTURING PERFUMERS : : MADURA**



ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் கீர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞானமுறைகளும் சேர்ந்து நூற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

# மைசூர்

# சந்தன அத்தர்

MSK 16 TM

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

| சோஜல் | பயோ-சரசா |
|---|---|
| படை, சொறி சிரங்கு, முகப் பரு, சேற்றுப்புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய சர்ம ரோகங்களுக்கும் சிறந்த களிம்பு. | **IODISED SARASAPARILLA**<br>ரத்த சுத்தி திராவகம்<br>துர்நீர் சம்மந்தமான சொறி சிரங்கு, கட்டி, மேகப்பத்து, கரப்பான் முதலியவைகளுக்கும், வெட்டை சம்மந்தத்தால் ஏற்படும் கை, கால், இடுப்பு வலிகள், பிடிப்பு, பக்ஷவாதம், மொழி சூலை முதலிய சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்து.<br>பாட்டில் 1-க்கு விலை 2-8-0 |

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

— ஏஜண்டுகள் —

**T. N. C. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்**

மருந்து ஷாப் : : மதுரை



மேலே : பிடிபட்ட நாஜி தலைவர்கள் : (1) ராணுவ உற்பத்தி மந்திரி டாக்டர் ஸ்பியர் ; (2) கடற்படைத் தலைவர் அட்மிரல் டோனிட்ஜ் ; (3) ராணுவத் தலைவர் கர்னல் ஜெனரல் ஜோல். கீழே : நாஜி புயல் படைத்தலைவர் ஹின்ரிச் ஹிம்ளர் கைது செய்யப்பட்ட பின், விஷம் குடித்து மாண்டுவிட்டார்.





பிரிட்டனின் மிகப் புதிய, மிகப் பெரிய கப்பலான 'குவீன் எலிஜ பெத்.' 16,000 அமெரிக்க ஸோல்ஜர்கள் இதிலே தங்கள் நாட்டுக்குத் திரும்பியபோது, எடுத்தது இந்தப் படம்.



மேலே: ஜெர்மனியில் கள்ள மார்க்கட்டுக்குப் போய்க் கொண்டிருந்த இந்த உருளைக் கிழங்குகளை, ஐக்கிய தேசங்களின் அதிகாரிகள் வழியிலே பறிமுதல் செய்து கொண்டிருக்கிறார்கள். கீழே: ஒரு பிரிட்டிஷ் படைக்கு, ஒரு கூர்க்கப் படை ஒரு குக்ரி பரிசு அளித்தது. பிரிட்டிஷ் படையின் தலைவர் மேஜர் ஆர். ரஸ்ஸல், அந்தக் குக்ரியை வைத்துக்கொண்டு பெருமையோடு நிற்கிறார்.





மேலே: பெல்ஸன் முகாம் சிறையில், ஐக்கிய தேசத்தார்களை நாஜிகள் ஹிம்சித்துக் கொன்று புதைத்த ஒரு கல்லறை. ஜெர்மனியரே அதை வந்து பார்க்கும்படி, அவர்களை ஐக்கிய நேசங்களின் அதிகாரிகள் நேரே அழைத்து வந்து காட்டினர்கள். கீழே: வட துருவத்துக்குப் பறந்து திரும்பிய விங் கமாண்டர் டி. வி. எம். மிக்கின்லீ,



# பிளந்த சுவர்

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

சுவரிலே ஏற்பட்ட பிளவு, மிகவும் அனுகூலமாயிருந்தது.

மாரிகாலத்திலே பெய்த கடுமையான மழை, சுவரின் சில கற்களைக் கலகலக்கச் செய்துவிட்டது. ஏதாவது காற்றடித்தால் போதும்; அவை விழுந்துவிடும். அந்தக் காற்றும் வெகு சீக்கிரத்திலேயே அடித்து விட்டது. ஆனால், சேரியிலிருந்து வந்த கன்னங் கரிய சின்னஞ் சிறு சிறுமிக்கு, இந்தப் பிளவு, ஏதோ ஒரு கருணைக் கடவுள் அன்பு கூர்ந்து அருளிய அனுக்கிரகம் போலாயிற்று. அந்தப் பிளவை, முள்ளுப் பற்றைகளையும் பிய்ந்த தென்னோலைக் கீற்றையும் கொண்டு, என்னவோ தற்காலிகமாய் அடைத்திருந்தார்கள். சிறுமி பயத்தோடு அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டே, அந்த முள்ளையும் கீற்றையும் அகற்றினாள். பின்பு, ஒரு சிறிய கூடையை அந்தத் துவாரத்தின் வழியாய் உள்ளே தள்ளினாள். அதன் பின்னே, மார்பால் ஊர்ந்து வரும் ஒரு நாய்க்குட்டி போல, தானும் நுழைந்து விட்டாள்.

சூரியன் உச்சியிலே காய்ந்து கொண்டிருக்கிறான். என்றாலும், இந்தக் காம்பவுண்டுக்குள்ளே நிழலும் குளிர்ச்சியுமாயிருந்தது.

'தீபாவளிக்குத் தீபாவளிதான் எண்ணெய் காணும் தலை' என்று ஏழை மகளைப் பற்றி இரங்குவதுண்டு. ஆனால், அந்த அதிர்ஷ்டம் கூட இல்லாத சிறுமி சொக்கி. அவளுக்கு அனுகூலம் செய்தது பிளந்த சுவர். அது பலித்ததா?

புளியும் மாவும், சிறுவனம் போல் சுற்றிலும் ஒளியின் உஷ்ணத்தைக் குறைத்தன. இலைகள் அடர்ந்த மரக்கிளைகளின் இடுக்கிலே, சூரிய கிரணங்கள் புகுந்து வந்தன. அந்த ஒளிக்கிரணங்களிலே, பட்டுப் பூச்சிகள் அங்குமிங்கும் பறந்தன. ஒவ்வொரு சமயம் 'கா! கா!' என்று ஒரு காகம் கரையும் சத்தமும், புறாக்கள் கீச்சிடும் முனகலும் கேட்டன. மற்றப்படி நிசப்தமாய்த் தான் இருந்தது.

அந்தக் கறுத்த சிறுமி இடது கையை வளைத்து, இடுப்பிலே கூடையைத் தாங்கிய வண்ணம், சிறிது நேரம் வரையில் பங்களாவையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள். பக்கத்திலுள்ள நுழைவாயிலிலும் பின்புறமுள்ள ஆளோடியிலும் யாரும் இல்லையா என்று நிச்சயம் செய்து கொள்வதற்காகக் கூர்ந்து கவனித்தாள். வீட்டைக் காத்து வரும் வேட்டை நாயைப் பற்றி அவளுக்கு ஞாபகம் வந்தபோது, அவள் இதயம் ஒரு விநாடி 'படக்' கென்று அடித்துக் கொண்டது. நாயைக் கொட்டகையிலே கட்டிப் போட்டிருப்பார்கள்; அது தூங்கிக் கொண்டிருக்கவேண்டும். வீட்டுக்காரர்களும் உள்ளே தூங்கிக் கொண்டுதான் இருப்பார்கள். இவ்விதம் எண்ணிய அவளுக்குத் துணிவு பிறந்தது. சிறுமி கூடையைக் கீழே வைத்தாள். கந்தல் துணியை மார்பிலே இறுக்கிச் சுற்றினாள். இப்படி அவள் முஸ்

தீப்பாய்க் கச்சை கட்டியது எதற்காக? எதிர்பாராத விபத்து ஏதேனும் நிகழ்ந்தால் அதைச் சமாளிக்கவா, அல்லது நம்பி எதிர்பார்த்த இன்பம் எதையேனும் அனுபவிக்கவா? அது நமக்குத் தெரியாது. ஆனால், அவள் ஏன் அப்படிக் கள்ளத்தனமாய் உள்ளே வந்தாள் என்பது மட்டில், சற்று நேரத்தில் அவள் தொடங்கிய வேலையினின்றும், விளக்கமாகி விட்டது. மேலே இருந்த மரஞ் செடிகளினின்றும் விழுந்திருந்த சுள்ளிகளைப் பொறுக்கிப் பொறுக்கி, அவள் தன் கூடையில் போட்டு நிரப்பிக் கொண்டிருந்தாள். குனிந்தபடி அடிமேல் அடிவைத்து நடந்து அவள் சுள்ளி பொறுக்கியபோது, அவளது காலடியிலே பட்ட கற்கள் நற நறத்தன; வாடிய சருகுகள் சலசலத்தன. கூடை கொள்ளாத பெரிய சுள்ளிகளையெல்லாம் முறித்து முறித்துத் துண்டுகளாக்கி, உள்ளே போட்டுக்கொண்டாள். திடுக்கென்று அவள் தன் வேலையை நிறுத்திச் சிறிது தயங்கி நின்றாள். ஏதோ பிசுக்கென்று அவள் தோளிலே விழுந்தாற்போல் இருந்தது. மரக்கிளையிலே உட்கார்ந்திருந்த ஒரு காக்கை, பறக்கத் தொடங்குமுன், எச்சமிட்டு விட்டது. சிறுமி நிமிர்ந்து பார்த்தாள். 'கா' என்று கரைந்துகொண்டே, அது பறந்து செல்வதைக் கண்டாள். "நீ நாசமாய்ப் போக!" என்று முணுமுணுத்து விட்டு, எச்சத்தை விரலால் சுண்டித் தள்ளி, மார்புக் கந்தையிலே துடைத்துக் கொண்டாள்.

இதற்கிடையிலே, பங்களாவின் மாடி ஜன்னல் கதவுகளிலே ஒன்று திறந்ததையும் சந்தடியின்றி மூடியதையும், அவள் கவனிக்கவில்லை. அந்த ஆபாசக் காக்கையால் சிறிது தடைப்பட்ட தன் வேலையிலே, சிறுமி மீண்டும் ஈடுபட்டுவிட்டாள்.

இந்தச் சமயத்தில், எட்டு அல்லது ஒன்பது வயதுள்ள அதி சுந்தரமான ஒரு சிறுமி, காம்பவுண்டுக்குள்ளே ஓடி வந்தாள். சுள்ளி பொறுக்கும் கறுப்புச் சிறுமிக்குச் சில கஜ தூரத்தில் உள்ள ஒரு மருதாணிச் செடிக்குப் பின்னே, அந்த சுந்தரச் சிறுமி ஒளிந்து கொண்டாள்.

"ஏ சொக்கீ! சொக்கீ!" என்று மிக மெதுவாய் ஒரு குரல் கேட்டது. துல்லியமான இலைகள் ஆடும் புளியமரங்களுக்கும் மாமரங்களுக்குமிடையே புகுந்த காற்றின் பெருமூச்சையும் விட, அடக்கமாகவே தோன்றியது அந்தக் குரல்.

சேரிச் சிறுமி திகைத்துப் பயந்து தலையை நிமிர்த்தினாள். ஆனால், அவளுடைய திகைப்போ பயமோ அதிகரிக்கு முன்பே, அந்த சுந்தரச் சிறுமி, தன் ஒளிவிடத்திலிருந்து அம்புபோல் பாய்ந்தோடி வந்தாள்.

"நீ என்ன பயந்துவிட்டையா?" என்று, அவள் புன்சிரிப்புடனே கேட்டாள்.

"ஆமாம். கொஞ்சம் பயந்திட்டேன்" என்று சொன்னாள் சேரிச் சிறுமி. இப்படிச் சொல்லியபடியே, சுள்ளிக் கூடையை இடுப்பிலே கெட்டியாய் அணைத்துக் கொண்டாள்.

"மூணு நாளா ஏன் நீ வரல்லே? உனக்காக நான் எவ்வளவு நாழி காத்துண்டிருந்தேன், தெரியுமா?"

"நான் செம்பியத்துக்குப் போயிருந்தேன், எங்க அம்மான் வீட்டுக்கு.''

"ஒண்டிமாவா? அந்த ஊர் எங்கே இருக்கு?''

"ரொம்பத் தொலே இல்லே; கிட்டணுசு தான். எங்க பாட்டியோடே போனேன். நேத்து மாலேயிலேதான், நாங்க திரும்பி வந்தோம்.''

அந்தச் சின்னஞ் சிறு இதயம் நிறைந்த அன்போடு வசீகரச் சீமாட்டி போல் தன்னுடன் பேசிய சிறுமியின் மீது, சேரிச் சிறுமியின் கண்கள் வியப்புடன் பதிந்திருந்தன. ஒரு மாதத்துக்கு முந்தி ஒரு நாள் நிகழ்ந்த சம்பவம் அவளுக்கு ஞாபகம் வந்தது. அன்றுதான் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்து, பரஸ்பரம் பிரியம் கொண்டுவிட்டார்கள். பணக்காரச் சிறுமி, தான் உயர்ந்தவள் என்ற பெருமையோ, பவிஷோ கொண்டாடவில்லே. தான் அவள் அருகே நெருங்க முடியாமல் அஞ்சியொதுங்க வேண்டியதில்லே என்று, சேரிச் சிறுமி கண்டு கொண்டாள்.

அவள் யாருமற்ற அகதி. அவளுடைய தாய் இறந்து போனுள். தகப்பனேப் பெற்றபாட்டியோடு, அவள் வசித்து வந்தாள். பாட்டி ஒரு பொல்லாத கிழவி. சிறுமியை அவள் எக்காரணமுமில்லாமல், அடிக்கடி அடிப்பாள்; வெகு கேவலமாய்த் திட்டுவாள்; பட்டினி போட்டும் வதைப்பாள்.

அவளுடைய தந்தை, தொடர்ந்து பல நாள் வீட்டுக்கு வரவே மாட்டான். அவன் ஓர் ஆலேத் தொழிலாளி. தன் கூலியையெல்லாம் குடியிலே தொலேத்து விடுவான். ஏதோ ஒவ்வொரு வேளே சிறிது நேரம் வீட்டுக்கு வந்தால், சட்டி பானேகளே யெல்லாம் உடைத்து நொறுக்குவான். மகா ஆபாசமாய்த் திட்டிக் கூச்சல் போடுவான். தன் தாயான கிழவியின் மண்டையைப் பிளக்கவும் ஓடி வருவான்.

சொக்கிக்கு அப்பனிடம் பெரும் பயம். பாட்டியிடமோ அளவற்ற வெறுப்பு. இவர்களே விட்டு எங்கேயாவது ஓடிப் போய்ப் பிச்சை வாங்கிப் பிழைக்கலாமா என்று கூட, அவள் ஆசைப் பட்டாள்- ரயில் வண்டிகளிலும் பஸ் நிற்கும் இடங்களிலும், சோம்பேறிகளும் பரம தரித்திரங்களும் பிச்சை வாங்குவதை அவள் பார்த்ததில்லேயா, அந்த மாதிரி. இல்லாவிட்டால், நாலு வீட்டிலே பிச்சையெடுத்தாலும் போச்சு!

அந்த உயர்குலப் பெண்ணே, தன் உயர் குலப் பெருமையைச் சிறிதும் அறிந்து கொள்ளவில்லே. இந்தக் கன்னங்கரிய ஹரிஜனச் சிறுமியிடம், அவள் மனது வசீகரமாகி விட்டது. அவளே வயசு; அல்லது ஒரே ஒரு வயசு கூடக் குறைய இருக்கலாம். எண்ணெய் கண்டறியாத அவள் தலேமயிர், குறுகுறுத்த அவளுடைய விலங்குக் கண்கள், இடுப்பிலே அவள் உடுத்த கந்தல் துணி இவையெல்லாம், அந்த சுந்தரச் சிறுமியை ஏதோ ஒரு மந்திர சக்திபோல் வசியம் செய்தன. சேரிச் சிறுமியின் வார்த்தைகள் சிலசமயம் இவளுக்குப் புரியவில்லே. அவள் என்னமோ போல் இழுத்து இழுத்துப் பேசினுள். என்றாலும், தன் உற்றார் உறவினரிடம் எப்படியோ அப்படியே, அவளிடமும் இவளுக்

குப் பாசம் ஏற்பட்டு விட்டது.

சுவரிலே விழுந்த பிளவு, அவர்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தது. நாட்கள் செல்லச் செல்ல, அவர்களின் நட்பு வலுவடையவும் அது உதவி செய்தது. சுவரிலே விழுந்த பிளவு, கடவுளின் அனுக்கிரகமாகும்.

அவர்கள் அநேகமாய்த் தினந் தோறும் சந்தித்தார்கள். சேரிச் சிறுமி வந்து சுள்ளி பொறுக்குவாள். அவளுக்கு நிச்சயமாய் ஏதாவது தின்பண்டம் கிடைக்கும். அதை அவள் நன்றியோடு வாங்கித் தின்பாள். எவ்வளவு இனிப்பான மிட்டாய்கள்! என்ன அருமையான அரிசிப் பலகாரங்கள்! சேரியிலே ரஸ்தா ஓரத்திலே ஒருத்தி ஆப்பம் சுட்டு அணுவுக்கு இரண்டு விற்பாளே; அது இந்தப் பலகாரங்களுக்கு ஈடாகுமா?

ஒரு நாள் மாலே, அந்த சுந்தரச் சிறுமி, தத்ரூபமான பெரிய குழந்தைப் பொம்மை ஒன்றைக் கொண்டு வந்து, இவளே விளேயாட அழைத்தாள். "நான் தான் அம்மாவாம்" என்று சொல்லி, அவள் அந்தப் பொம்மைக் குழந்தையைக் கொஞ்சிச் சீராட்டினுள். அதை மடியிலே கிடத்திக்கொண்டு, பால் புகட்டுவது போல் நடித்தாள். அதன் கன்னங்களிலே முத்தமிட்டுக் கொண்டாள். இதையெல்லாம் கண்ட ஹரிஜனச் சிறுமிக்கு மிக்க ஆச்சரியமாயிருந்தது. ஏனென்ருல், இம்மாதிரி அன்பை அவள் வாழ்நாளில் ஒரு காலும் கண்டதேயில்லே. அவளோ 'வா, வா' என்று இவளேயும் விளேயாட்டிலே சேர்ந்து கொள்ளக் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தாள். இவளால் அதற்கு இணங்கமுடியாமல், நின்று பார்த்துக் கொண்டேயிருந்தாள். இவளது ஆச்சரியம் மெல்ல மெல்ல மாறி, ஊக்கமாய் அதைக் கவனிக்கத் தொடங்கினுள். இதுவரையில் அனுதாபத்தையே கண்டறியாததால் அவளேச் சூழ்ந்திருந்த கடினமான அஞ்ஞான இருள் திரையைக் கிழித்தெறியத் தக்க உணர்ச்சிகள், அவள் உள்ளத்திலே உண்டாயின. அதனுல், அவளுடைய விலங்குக் கண்கள் குழைவடையத் தொடங்கின. இந்த வேளேயிலே, சந்தடி செய்யாமல், திடீரென்று, வீட்டுக்காரச் சீமாட்டி அவர்களுக்கு முன்னே வந்து தோன்றினுள். அவர்களுடைய சின்னஞ் சிறு விளேயாட்டுக் கனவுலகத்தை, நொறுக்கிச் சிதைத்து விட்டாள்.

"இங்கே என்ன செஞ்சிண்டிருக்கே?" என்று, பொம்மையை வைத்துக் கொண்டிருந்த சுந்தரச் சிறுமியைப் பார்த்து, கொஞ்சம் கடுமையான குரலில் சீமாட்டி கேட்டாள். ஒன்றிரு நிமிஷங்கள் ஆச்சரியத்தால் திகைத்து நின்றுவிட்டு, "ஏண்டி அமிர்தா, இங்கே என்னடி செஞ்சிண்டிருக்கே? நான் கூப்பிட்டது உன் காதிலே விழலேயா?" என்று மறுபடியும் கேட்டாள்.

சிறுமியின் உடம்பெல்லாம் குன்றிப் போயிற்று. அவள் முகம் ரத்தம்போல் சிவந்தது. வெட்கத்தால், அவள் தலே கவிழ்ந்தாள்.

"இவள் யாருடீ?" என்று கோபத்தோடு கேட்டாள் சீமாட்டி. கறுத்த சிறுமியை நோக்கி, "நீ யாருடீ? இந்தக்

காம்பவுண்டுக்குள்ளே எப்படி வந்தே?'' என்று கேட்டாள்.

சொக்கி ஒரேயடியாய் மிரண்டு போனாள். தன் தோழியைக் கெஞ்சுவதுபோல் பார்த்தாள். அவளோ வெட்கத்தால் குனிந்த தலை இன்னமும் நிமிர வில்லை. சொக்கி ஒரு வார்த்தையும் பேச வில்லை. சுள்ளிக் கூடையை இடுப்பிலே தூக்கிக்கொண்டாள். சுவரின் பிளவை நோக்கி நடக்க முயன்றாள்.

"விளையாடறத்துக்குப் பிடிச்சிருக்கிற தோழியைப் பாரு! ஆஹா, என்ன அழகு! நாற்றமாய் நாறும் நீசப் பறக்குட்டி! போ உள்ளே; இப்பவே போயிடு!'' என்று, சீமாட்டி தன் மகளிடம் கத்தினாள். பின்பு, நடு நடுங்கி நிற்கும் அந்த ஹரிஜனப் பெண்ணை நோக்கி, குரலைக் கொஞ்சம் உயர்த்தி, "இங்கே நிக்காதே; போ வெளியே. இந்தக் காம்பவுண்டுக்குள்ளே மறுபடியும் எப்பவாவது உன்னைக் கண்டேனே, உன் காலை ஒடிச்சுப் போட்டுடுவேன்; தெரிஞ்சதா? அட ஈசுவரா! காலம் எப்படிக் கெட்டுப் போச்சு!''என்று கத்தினாள்.

சுவரின் பிளவை நோக்கி, சொக்கி நடந்தாள். வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்துக் கொண்டு நின்ற சீமாட்டி, இன்னமும் கோபம் தணியாமல், "இந்தா, சுள்ளியைக் கொட்டிட்டுப் போ. இங்கே என்ன வழி? நிலைவாசல்படி வழியாய்ப் போ! ஜல்தி, ஜல்தி'' என்று கத்தினாள்.

''அம்மா, சுள்ளியை அவ எடுத்துண்டு போகட்டும். விட்டுடு'' என்று, கெஞ்சும் குரலில் சொன்னாள் அமிர்தா. அவள் கண்களிலே நீர் தளும்பிப் பிரகாசித்தது.

சீமாட்டிக்குப் பின்னே வந்து நின்ற வேலைக்காரப் பெண், உள்ளுக்குள்ளே களிப்புற்றது போல், தாயையும் பெண்ணையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு, பல்லெல்லாம் தெரிய இளித்துக் கொண்டிருந்தாள். "இவளை 'கேட்'டுக்கு வெளியே கொண்டு போய்த் தள்ளு'' என்று, எஜமானி அவளுக்கு உத்திரவு போடவே, அனுமதியின்றி உள்ளே நுழைந்த அந்தச் சிறுமியை, வேலைக்காரி வெளியே கொண்டுபோய் விட்டாள்.

இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த சம்பவத்துக்குப் பின்பு, ஒரு வார காலத்துக்குமேல், சொக்கி வெளியே தலை நீட்டவில்லை. சுவரின் பிளவைக் கண்டு, அவளுக்குச் சிறிது பயமும் உண்டாயிற்று. அதை மூடியிருந்த முள்ளுப் பற்றைகளெல்லாம் தடித்து நெருங்கிக் கறுத்தது போல், அவளுக்குத் தோன்றியது. அமிர்தாவோ...? தான் ஓர் 'இழிகுல'ப் பெண்ணோடு ரகசியமாய்க் கொண்டிருந்த சிநேகம் அம்பலமாகி விட்டதிலே, அவளுக்குப் பெருந் துக்கம் உண்டாயிற்று. தாய் மகா கோபம் கொண்டு, அவளைக் கண்டித்தாள். தகப்பனிடமும், சீமாட்டி அதைச் சொல்லி விட்டாள். அவர் கொண்ட கோபத்திலே, இவளைக் கண்டிக்கக் கூட மறந்து விட்டார். பெண்ணுக்கு எந்நேரமும் காவல் போட்டார்கள். "காம்பவுண்டுக்கு வெளியே போகாதே'' என்று தடையும் விதித்து விட்டார்கள். இந்த எல்லை நிர்ப்பந்தத்தை விட, அவளுடைய குண வளர்ச்சியின்

ஆரோக்கியத்துக்கு வேறே கேடும் வேண்டுமா?

## 2

சுவரின் பிளவு, முன்னையும்விட மிக்க அனுகூலமாகவேதான் இருந்தது.

"சொக்கி!" என்று அழைத்தாள் அமிர்தா: "அதோ அந்த மருதாணிச் செடிக்குக் கீழே போய் உக்காந்துண்டு, கொஞ்ச நேரம் பேசிண்டிருக்கலாம், வா. நான் உனக்கு ஒரு சேதி சொல்லப் போறேன்."

"ஆமாம், உங்க அம்மா வந்திச்சின்னு, அன்னிக்கு வந்துதே அந்த மாதிரி? எனக்குப் பயமாயிருக்கு ஆத்தா" என்று கூவினுள் சொக்கி. வார்த்தைகள் அவள் வாயிலிருந்து நடுங்கிக் கொண்டே வெளிவந்தன.

"அவ வரமாட்டா. தூங்கிண்டிருக்கா" என்று, ஆனந்தத்தோடு, தன் தோழிக்கு உறுதி கூறினுள் அமிர்தா.

"அது சரி. நாய் கிளம்பிடிச்சின்னு!" என்று குலை நடுக்கத்தோடு கிசு கிசுத்த குரலில் சொன்னுள் சொக்கி.

"அது கொட்டாயிலே சங்கிலியாலெ கட்டிப் படுத்திண்டிருக்கு" என்று, நிஷ்களங்கமான புன்சிரிப்போடு அமிர்தா சொன்னுள்.

இருவரும் மருதாணிச் செடிக்குக் கீழே உலர்ந்த தரையாக ஓரிடத்தைப் பிடித்துக்கொண்டு, உட்கார்ந்தார்கள். தாங்கள் இங்கே ரொம்பவும் பத்திரமாயிருப்பதாக, அவர்களின் எண்ணம்.

ஏதோ ஒரு ரகஸ்யத்தை வெளியிடுபவள் போல, வெகு பக்தி சிரத்தையான குரலில், "நாளைக்கித் தீபாவளிக் கொண்டாட்டம், தெரியுமோல்லியோ?" என்று அமிர்தா கூறினுள்.

"என்ன கொண்டாட்டம்?" என்று, அமிர்தாவின் வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம் என்றே புரியாதவள் மாதிரி, சொக்கி கேட்டாள்.

"தீபாவளி; உனக்குத் தெரியாதா?"

"ஓ! தீவிளியா?"

"உம். போது விடியறத்துக்குள்ளே, ஸ்நாநம் பண்ணுவோம். புதுப் பாவாடை, சட்டையெல்லாம் உடுத்திப்போம். சீனி வெடி சுடுவோம். பட்சணங்கள்ளாம் சாப்பிடுவோம்- அல்வா, ஜிலேபி, பூந்தி..." என்று, அமிர்தா மூச்சு விடாமல் சொன்னுள்.

சொக்கி இது ஒன்றும் புரியாதவளாய்த் தலையை ஆட்டினுள். அவளது பார்வையிலே வியப்பு நிறைந்திருந்தது. "அல்வா, சிலேபி, பூந்தி..." என்று, இயந்திரம்போல் அவளும் திருப்பிச் சொன்னுள். "ஆமாம், அப்படின்னு என்ன?" என்று கேட்டாள்.

"அதுவா? அதெல்லாம் தித்திப்பான பட்சணம். ரொம்ப ரொம்பத் தித்திக்கும்! தீபாவளின்னு, நாங்க என்னெல்லாம் செய்வோம் தெரியுமா?"

சொக்கிக்கு இது ஒரு விடுகதை போல் இருந்தது. மறுபடியும் அவள் தலையை அசைத்தாள். மேலும் அதிக வியப்பு அவள் பார்வையில் நிறைந்தது. அவளுடைய தோழிக்குத்தான் எத்

தனே எத்தனே பண்டங்கள் தெரிந்திருக்கின்றன! ஆச்சரியமும் மதிப்பும் கொண்டவளாய், அமிர்தாவையே உற்று நோக்கிய வண்ணம் இந்தத் 'தீவிளி'யைப் பற்றி அவள் மேலும் என்னவெல்லாம் சொல்லப் போகிருளோ பார்க்கலாம் என்ற ஆவல் மிகுந்திருந்தாள் சொக்கி.

"ரொம்ப நாளேக்கு முன்னே..." என்று, வழக்கமாய்க் கதை சொல்லும் கதாசிரியர்களேப் போன்ற தோரணேயிலே, ஆரம்பித்தாள் அமிர்தா: "ரொம்ப நாளேக்கு முன்னே, நம்ம பூலோகத்திலே ஒரு அசுரன் இருந்தான். அவன் ரொம்ப ரொம்பப் பொல்லாதவன். ஜனங்களே யெல்லாம் கஷ்டப்படுத்துவன். கொல்லுவன். அவன் கொன்னுண்டே யிருந்தான். இந்த அசுரன் இப்படியே பண்ணிண்டிருந்தா, சுவாமிக்குக் குக் கோபம்வராதா? வந்துடுத்து. அவர் மானத்திலே யிருந்து குதிச்சார்..."

"யாரு குதிச்சாங்க?" என்று சந்தேகமாய்க் கேட்டாள் சொக்கி.

"சுவாமி. சுவாமியெத் தெரியாதா உனக்கு?"

"அது என்ன?"

"அடாடா! சுவாமியெ 'அது'ன்னு சொல்லாதேடி. அப்பறம் கணணெக் குத்திப்பிடுவர். சுவாமி ரொம்பப் பெரியவர். கோயிலிலே அவரெத்தானே நாம்ப தரிசனம் பண்ணறோம்? சொக்கீ, நீ சுவாமி தரிசனம் பண்ண, என்னிக்காவது கோயிலுக்குப் போயிருக்கையோ?"

சொக்கி மௌனமாய் நின்ருள்.

சுவாமியையும் கோயிலேயும் பற்றி அவள் அறிந்த அறிவெல்லாம், சேரிக் கோடியிலே உள்ள சின்னக் குடிசைதான். அதன் கீற்றுக் கூரை காற்றிலே பட்சி போல் படபட வென்று அடித்துக்கொண்டிருக்கும்; மேலெங்கும் குங்குமம் அப்பிய ஒரு சிறு கல், அதற்குள்ளே இருக்கும்.

"சாமின்னு, மாரியாத்தா தானே?" என்று கேட்டாள் சொக்கி. அவளுக்கே அதில் கொஞ்சம் சந்தேகம்தான்.

"ஊ ஹ-ம்!" என்ருள் அமிர்தா: "இல்லே, நான் சொல்ற சுவாமி, மாரியாத்தா இல்லே. அவர் மானத்திலே யிருந்து குதிச்சவர். இந்த அசுரனே அவர் கொன்னுட்டார். பூலோகத்திலே எல்லாருக்கும் சந்தோஷமாப் போச்சு. அவா எல்லாரும் பாடிஞ; சுவாமியைப் புகழ்ந்தா. சுவாமி அசுரனேக் கொன்னுரோல்லியோ; அவருக்குக் களேப்பாப் போச்சு. அவர் எண்ணெ தேச்சு, ஸ்நானம் பண்ணிஞர். புதுத் துணி யெல்லாம் கட்டிண்டார். பட்சணமெல்லாம் தின்ஞர். களேப்பாறிஞர். அதுஞலெதான், நாம்பளும் ஸ்நானம் பண்ணறோம்; புதுத் துணி உடுத்தறோம்; சுவாமி மாதிரியே, பட்சணமெல்லாம் தின்னறோம். இது தான் தீபாவளி" என்று, கண்ணிலே ஆனந்தம் பொங்க, அமிர்தா சொல்லி முடித்தாள்.

கதையை மிக்க புத்திசாலித்தனத்துடன் கேட்டுக் கொண்டு வந்த சொக்கி, "சாமி பட்டாசு சுடலேயோ?" என்று கேட்டாள்.

அமிர்தாவின் பிரகாசமான கண்கள், ஒரு நிமிஷம் சந்தேகத்தால் மங்கின. மறுபடியும்,

அதைச் சமாளித்துக்கொண்டு, "அவர் சுட்டுத்தான் இருக்க ணும். அதுனலெதான் நாமும் சுடறேம்" என்ருள்.

சொக்கி திருப்தி யடைந்தாள். தன் தோழியை அதற்கு மேல் எந்தக் கேள்வியும் அவள் கேட்க வில்லே. "ஆன நாங்க ரொம்ப ஏஜை. தீவிளி கொண் டாட மாட்டோம்" என்று மட் டில் சொன்னள்.

"நீங்க எப்பவுமே தீபாவளி கொண்டாடறதில்லேயா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அமிர்தா.

"எப்பவுமேன்னு சொல்ல முடியாது. போன வருசம் எங்க ஆயா உசிரோடே இருந் திச்சு. எனக்கு ஒரு புதுச் சீட்டி வாங்கி வந்திச்சு. அதுதான் இப்ப ஒரே மட்டாய்க் கிளிஞ்சு போச்சே!"

"பாவம்! நீ கவலெப்படாதே. இந்த வருஷம் நீ தீபாவளி கொண்டாடப்போறே, பாரு."

சொக்கிக்கு இதென்னவோ புதிரா யிருந்தது.

அமிர்தா அவள் அருகே நெருங்கி, அவள் காதோடு காது வைத்துச் சொன்னள்: "என் கிட்ட ஒரு பெரிய பொட்டி நிறைய, புதுத் துணி இருக்கு. உனக்கு நல்ல கௌன் தறேன். நாளேக்கி நீ அதை உடுத்திக் கலாம்."

சொக்கி ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தாள். அவள் கண்கள் பிரகாசமடைந்து மினு மினுத்தன. இப்போது அவள் ஒரு விலங்கு போல் பார்க்க வில்லே. நன்றியின் கனிவு, அவளே மாற்றுயர்த்தி விட்டது. அவள் ஒரு புது மலராகிவிட்டாள். மக்கி மண்ணிலே கிடந்த நிஷ்களங்க மான ஒரு குழந்தையின் கை பட்டதும், அது பூரித்துப் பலன் பட்ட பயன் அந்தப் புது மலர்.

"உனக்கு ஒரு சின்னச் சீசா விலே எண்ணெய் தறேன். நீ ஸ்நானம் பண்ணலாம். நல்ல பட் சணமெல்லாம் தறேன். நீயும் என் மாதிரியே ஜோரா தீபாவளி கொண்டாடணும். அப்ப தான் எனக்குச் சந்தோஷமா இருக்கும்" என்று கூறினள் அமிர்தா.

"ஆன..." என்று சொக்கி என்னவோ சொல்ல ஆரம்பித் தாள். அதை முடிக்க முடியா மல், சட்டென்று நிறுத்திவிட் டாள். ஏனென்ருல், பங்களாவுக் குள்ளே கப்பிப்பாதையில் 'பர்ர்' என்று வந்து புகுந்த ஒரு மோட் டாரின் சத்தம் அவர்கள் காதிலே விழுந்தது. பங்களாவின் முன் வாசலிலே அது வந்து நின்றது. அதன் 'பர்ர்' என்ற சத்தம் திடீ ரென்று அடங்கியது.

"எங்க அப்பா வந்துட்டா!" என்று கத்தினள் அமிர்தா: "நான் எங்கேன்னு கேப்பா. நான் போகணும்" என்ருள்.

அவளுடைய ஊகம் சரியாய்ப் போயிற்று. வேலேக்காரி இவளே நோக்கி வேகமாய் நடந்து வந்து, 'சீக்கிரம் வீட்டுக் குள் ஓடிப்போ' என்று ஜாடை செய்தாள்.

"சுவரிலே பிளவு இருக்குப் பாரு; அந்த இடத்திலே, சாயங் காலம் ரெண்டு பொட்டலம் வெக்கிறேன். மறக்காமெ வந்து எடுத்துண்டு போ" என்ருள் அமிர்தா. இவ்வாறு கூறிவிட்டு,

# அது ருசிகரமாகவும், திருப்தி அளிக்கக் கூடியதாகவு மிருக்கவேண்டியது ... ஆனால் அது ஊக்கத்தை அளிக்கவும் வேண்டும்!




நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு சமையல் செய்யும்பொழுது எப்பொழுதாவது இதைப்பற்றி யோசிப்பதுண்டா? உணவிற்கு சுவைமாத்திர மிருந்தால் போதாது—அதை உண்பவருக்கு ஊக்கத்தையும் கொடுக்கக்கூடியதா யிருக்க வேண்டும். சில உணவுகள் மற்றவைகளை விட ஊக்கமளிக்கக் கூடியவை. நாம் வழக்கமாக உட்கொள்ளும் பல ஆகாரங்கள் ஊக்கத்தை யளிக்கக்கூடியவைகளல்ல. அவை நம் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. உண்மையில் அவைகள் முக்கியமாக குழந்தைகளுக்கு கெடுதல் செய்யவும் கூடும். ஆனால் ஆகாரங்களை ஊக்கமுள்ளவையாகச் செய்வது கடினமில்லை. வைடமின் நிறைந்த டால்டாவினால் சமையல் செய்வது ஒரு வழி. டால்டா இயற்கையாய் ஊக்கமளிக்கக் கூடிய சில முக்கிய வஸ்துக்களை அளிக்கிறது. மேலும் டால்டாவைக் காட்டிலும் உணவுகளுக்கு ருசி அளிக்கும் வஸ்து வேறே கிடையாது. நீங்கள் உபயோகித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப் பொருள்களின் தாரதம்யத்தைப் பற்றியும் 150 இந்திய ஆகாரத்திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. உங்களிடம் ஒரு பிரதி இருக்கவேண்டியது அவசியம். Dept. A160 P.O. Box No. 353, Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.




வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

HVM. 32-50-40 TM

# THE TRUTH IN YOUR HOROSCOPE

## Your Real Life Told Free

Would you like to know without any cost what the Stars indicate for you some of your past experiences, your strong and weak points, etc.? Here is your chance to test FREE the skill of Pundit Tabore, India's most famous Astrologer, who by applying the ancient science to useful purposes has built up an enviable reputation? The accuracy of his predictions and the sound practical advice contained in his Horoscopes on Business, Speculation, Finances, Love affairs, Friends, Enemies, Lotteries, Travels, Changes, Litigation, Lucky Times, Sickness etc., have astounded educated people the world over. GEORGE MACKEY of New York believes that Tabore must possess some sort of second sight.




To popularise his system Tabore will send you FREE your Astral-Interpretation if you forward him your full name (Mr. Mrs. or Miss.), address and date of birth (English Calender) **all clearly written** by yourself. No money wanted for Astrological Work, postage etc., but send about 6 annas (Stamps) for stationery, testimonials and other intersting literature. Tabore believes in fair dealings and all work for which he receives any payment is on the basis of satisfaction guaranteed or full money refunded. You will be amazed at the remarkable accuracy of his statement about you and your affairs. Please write and correspond in ENGLISH only. Write now as this offee may not be made again. No personal interviews, all consultations by mail only. Address: PUNDIT TABORE (Dept. 308), Upper Forjett Street, Bombay 26.

# இந்தியன் பாங்க், லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
நார்த் பீச் ரோட், மதராஸ்

●

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுண்ட் ரோட்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான
இடங்களிலும்
பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் - ரூ. 60,00,000

செலுத்தப்பட்ட மூலதனம்
- - - ரூ. 33,66,622

ரிஸர்வ் நிதி
- - - ரூ. 35,00,000

டிபாஸிட்ஸ் ரூ. 12½ கோடிக்குமேல்

●

எல்லாவித பாங்கு அலுவல்
களும் கவனிக்கப்படும்

செக்ரெடரி:
N. கோபால அய்யர்

பரபரப்போடு அவள் ஓடிப் போனாள்.

### 3

தீபாவளியன்று பொழுது புலர்ந்தது. சூரியன் உதிக்கு முன்பே, குடும்பத்தார் அனைவரும் எழுந்து, மங்கள ஸ்நானம் செய்து முடித்தார்கள். புத்தாடை புனைந்தார்கள். அமிர்தாவும் அவள் தம்பியும், ஏராளமான பட்டாசுக் கட்டுகள் சுட்டார்கள். விளையாட்டுத் துப்பாக்கிகளிலே 'கேப்பு' வைத்துச் அடித்தார்கள். விதம் விதமான வர்ண மத்தாப்புகள் கொளுத்தினார்கள். வராந்தாவில் தொட்டிகளில் வைத்த பூஞ்செடிகளெல்லாம், அந்த மத்தாப்பு ஒளியிலே பளபள வென்று மின்னின. அந்தச் செடிகளின் கண்ணீர் போன்ற பனித்துளிகளெல்லாம் காய்ந்து மறைந்தன. அமிர்தா என்றையும்விடக் களிப்பாயிருந்தாள். சொக்கியைப் பற்றியே அவளுக்கு ஞாபகம். தன்னைப் போலவே சொக்கியும் இன்று தீபாவளி கொண்டாடுவாள்; சுவரிலே உள்ள பிளவு, அந்தப் பொட்டணங்களைக் கட்டாயம் அவளிடம் சேர்ப்பித்திருக்கும் என்று அவள் எண்ணினாள்.

குடும்பத்தார் அனைவரும், விமரிசையான தீபாவளி விருந்து உண்ண உட்கார்ந்தார்கள். இந்தச் சமயத்தில் வெளியே ஏதோ கலவரம் கேட்டது. இந்தச் சந்தடியால் எரிச்சல் மூண்டு, வீட்டெஜமான் வெளியே கிளம்பினார். அவரைப் பின்தொடர்ந்து, அவருடைய மனைவியும், அவளுக்குப் பின்னே அவர்களின் இரண்டு குழந்தைகளும் வெளியே வந்தார்கள்.

விகாரமான ஒரு கிழவி, அரை நிர்வாணச் சிறுமி ஒருத்தியை, தலைமயிரைப் பிடித்து இழுத்து வந்து, கப்பிப் பாதையிலே நின்றுகொண்டு, ஏதோ கூச்சலிட்ட வண்ணம், கிழிந்த செருப்பு ஒன்றினால் சிறுமியை மாறி மாறி அடித்துக் கொண்டிருந்தாள். சிறுமி வலிபொறுக்க முடியாமல், "ஐயோ! ஐயோ!" என்று வீறிட்டுக்கொண் டிருந்தாள். கால் தலை தெரியாமல், அவள் உடம்பெங்கும் செருப்படி விழுந்தது.

அந்தக் கோரமான கிழவி, பங்களாவின் முன்வாயிலருகே நின்றபடியே, கூச்சல் போட்டாள்: "ஏமேஞ்சாதி மக்களே! சேரிக் குளந்தைங்களை ஏன் இப்படிக் கெடுக்கிறீங்க? ரொம்ப அன்போடே கொடுத்திட்டீங்களோ! எல்லாம் சும்மாப் பாசாங்கு தானே! அப்புறம் எங்களைத் திருடிண்ணு சொல்லி, தாணாக்காரன் கிட்டே புடிச்சுக் குடுத்துடுவீங்க. எங்களை ஏன் இப்படி வம்புக்கு இளுக்கிறீங்க?"

இப்படிக் கூச்சலிட்ட கிழவி, ஆபாசமாய் ஏதோ முணுமுணுத்தவாறு, சிறிது அழுக்குப் பட்டுக் கசங்கிய புது 'கவுன்' ஒன்றையும், எண்ணெய் கசியும் காகிதப் பொட்டணம் ஒன்றையும் வீசியெறிந்தாள். குடும்பத்தார் நின்றுகொண் டிருந்த வராந்தாவிலே, அவை வந்து விழுந்தன. பின்பு, ஊளையிடும் அந்தச் சிறுமியைப் பிடித்துக் கொண்டு, கிழவி போய்விட்டாள்.

வீட்டெஜமான் பிரமித்துக் கற்சிலை போலானார். அவருடைய மனைவியோ, இறுகிய பனி கட்டி

போல், உறைந்து போனாள். ஏனென்றால், தான் கொஞ்ச நாளைக்கு முன்னே விரட்டி விட்ட அதே சிறுமிதான் இவள் என்று, அவள் வெகு சீக்கிரத்திலே கண்டு கொண்டாள். அவளுக்கு ஸ்மரணை வந்ததும், ஒரு பரதேவதை போல் ஆவேசம் கொண்டாள். "எங்கே அமிர்தா? எங்கே அந்தக் கழுதை?" என்று, அவள் அடித் தொண்டையோடு ஆத்திரமாய்க் கத்தினாள். அவள் கண்கள், தீ கக்கும் கோளங்களைப் போல், வராந்தாவையும் வெளி அறையையும் சுழன்று சுழன்று பார்த்தன.

ஆனால், அமிர்தாவை எங்கேயும் காணோம். அவள் அப்புபட்ட பட்சிபோல் தேம்பித் தேம்பிப் பெருமூச் செறிந்த வண்ணம், படபடத்த இறக்கைப் பந்து போல், மாடியிலே விதானமிட்ட கட்டிலின் கீழே சுருண்டு கிடந்தாள். "இதெல்லாம் என்ன? அதுவும் நல்ல நாளும் பெரிய நாளுமா இன்னிக்கி? அதுகள் பறச்சாதி..." என்று, வார்த்தைகளை விழுங்கினார் வீட்டெஜமான். இந்தப் புதிரை-தாம் கண்ட காட்சியின் மகத்தான பொருளை - விளங்கிக் கொள்ள, அவரால் முடியவில்லை.

"அந்தக் கழுதை எங்கே?" என்று, தன் கணவனையும் மறந்து கத்தினாள் வீட்டெஜமானி.

"இந்தா, கோபத்தை அடக்கிக்கோ. இதெல்லாம் என்ன? கொஞ்சம் விளக்கிச் சொல்லு" என்று ஆவலுடனும், அடக்கமாகவும் கேட்டார் வீட்டெஜமான்.

"எல்லாம் சொல்றேன்; வாங்கோ" என்றாள் மனைவி, அவளது தொண்டையை என்னவோ வந்து அடைத்துக்கொண்டது. அவள் வீட்டுக்குள்ளே புகுந்தாள். அவளுக்குப் பின்னாலேயே, கணவரும் வீட்டினுள் நுழைந்தார்.

விருந்து காத்திருந்தது.

அடுத்த நாள் மாலையில், குரோதம் மிகுந்த கைகள், அந்தச் சுவரின் பிளவை, சாந்தும் செங்கல்லும் கொண்டு மூடி அடைத்து விட்டன.

✱

## பாஷைக்கு ஆபத்து!

சில இலக்கணப் புலவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குற்றம் கண்டுபிடிக்கும் விதமே ஒரு விசித்திரம். இ 'க்' கன்ன, இ 'ச்' சன்ன போடத் தவறினால், "இது தமிழா?" என்று சீறுவார்கள். இந்த மாதிரியே, கால் புள்ளி, அரைப் புள்ளிகள் விட்டுப்போனால், தகராறு செய்யும் புதிய பண்டிதர்களும் உண்டு.

அமெரிக்காவில் இப்படித்தான் ஒரு சம்பவம் நடந்தது. அப்டன் சிங்க்ளேர் என்பவர் உலகப் பிரசித்திபெற்ற ஓர் ஆசிரியர். அவர் ஒரு சமயம் 20 -பக்கம் கொண்ட ஒரு நூல் எழுதினர். கையெழுத்துப் பிரதியை ஒரு பிரசுரகர்த்தருக்கு அனுப்பினார். அதைப் படித்துப் பார்த்த பிரசுரகர்த்தர் "இந்த 00 பக்கத்திலும், ஒரு முற்றுப் புள்ளி, ஒரு கோலன், ஒரு கமா, ஒரு கோடுகூட இல்லையே" என்று, ஆசிரியருக்குக் கடிதம் எழுதினர்.

ஆசிரியர் எழுதிய பதிலாவது: "..... ,,,,, """"" —— ;;;;; ::::: இதோ இருக்கின்றன வேண்டிய புள்ளிகள். இவைகளை உங்கள் இஷ்டப்படி எங்கெங்கே வேண்டுமோ அங்கங்கெல்லாம் அள்ளிப் போட்டுக் கொள்ளுங்கள்."

# விசித்திர வரம்

**தியாகையர்வாள் கதை**

அபூர்வ ராகங்களி லெல்லாம் தியாகையர்வாள் பல அருமை யான கிருதிகள் இயற்றி யிருக்கி ருர்கள். அப்படி யிருக்க, பிரபல ராகமான ஆனந்த பைரவியில் மட்டும் மூன்று கிருதிகளுக்கு மேல், ஏன் அவர்கள் இயற்ற வில்லை? சில சமயம் இந்தக் கேள்வியை, கர்நாடக சங்கீத மாணுக்கர்கள் கேட்ப துண்டு. தியாகையர்வாளின் வாழ்க்கை யில் ஒரு விசேஷமான சம்பவம் நடந்தது. அதிலேதான் இந்தக் கேள்விக்குப் பதில் அடங்கி யிருக்கிறது.

ஐயர்வாளின் காலத்திலே, திரி புவனம் சுவாமிநாதையர் என்ற பிரமாதமான நடிகர் இருந்தார். அவர் மிக்க அற்புதமாய்ப் பாடு வார். அடாணு சுப்பையா, தோடி சீதாராமையா முதலிய வர்களைப்போல, இந்த நடிகரும் தமக் கென்று ஒரு ராகத்தை விசேஷமாய் சாதகம் செய்து வைத்துக்கொண்டு பாடிவந்தார். அது ஆனந்தபைரவியே யாகும். இந்த ராகத்தை அவர் பாடிய அபூர்வமான பாணியைக் கண்டு, வித்வான்க ளெல்லாம் அவரைப் பாராட்டத் தொடங்கினர்கள். அவர் நடித்த நாடகங்களுக்கு, அநேகம் வித்வான்கள் வரத் தொடங்கினர்கள். எல்லாம் அவர் அற்புதமாய் ஆனந்த பைரவி பாடுவதைக் கேட்பதற் காகத்தான்.

அவர் சேர்ந்திருந்த நாடக கோஷ்டியார், ஒரு சமயம் திருவையாற்றுக்கு வந்திருந்தார் கள். ஒவ்வொரு நாள் ராத்திரி யும் தங்களுடைய அநேக நாட கங்களை அவர்கள் நடித்துக் காண்பித்தார்கள். நாளுக்கு நாள் ஏராளமான ஜனக்கூட்டம் வரத் தொடங்கியது. தியாகை யர்வாளின் சிஷ்யர்களும் இந்த நாடகங்களை வந்து பார்த்தார்கள். சுவாமிநாதையர் ஆனந்தபைரவி பாடுவதைக் கேட்டு, அவர்களே பிரமித்துப் போய்விட்டார்கள். நடிகரின் மேதையை, தங்கள் குரு தியாகையர்வாளிடம் தெரிவிக்க, அவர்கள் தீர்மானித்தார்கள். ஸாகித்ய மேதையான தியாகை யர்வாள், உடனே எவ்வித அபிப்பிராயமும் சொல்ல வில்லை. தம் சிஷ்யர்கள் சொல்லுவதில் ஏதோ உண்மை இருக்கத்தான் வேண்டும் என்று தமக்குள்ளே எண்ணிக் கொண்டார். யாரும் தம்மை இன்னு ரென்று அடை யாளங் கண்டு கொள்ளாதபடி, தாமே நேரில் சென்று இந்த நாடகத்தைப் பார்க்க வேண்டு மென்று விரும்பினர். ஒரு நாள் இரவு, அப்படியே சென்ருர். நடிகர் எப்போது தமது விசேஷ ராகத்தைப் பாடப் போகிருர் என்று காத்துக்கொண்டே யிருந் தார்.

கடைசியாக, ஆனந்த பைரவி ராகத்தை, நடிகர் மிக்க அற்புத

*சங்கீத மேதையான தியாகையர்வாள், ஏன் ஆனந்த பைரவியில் மூன்றே பாட்டுக்கு மேல் பாட்வில்லை. இது பற்றிய இந்த ரச மான கதை, 'இந்திய மாதர் சேவைப் படை'யின பத்திரிகையில் காணப்படு கிறது.*

மாய் ஆலாபனம் செய்யலானார். தியாகையர்வாள், ஒரு மகான் அல்லவா? அவர் பரவச மடைந்தார். நடிகரைப் பாராட்டுவதற்காக, தாம் இருந்த இடத்தை விட்டு எழுந்து, ஜனத் திரளைப் பிறிக்கொண்டு, நடிகருக் கருகே செல்ல முயன்றார். மகான் தியாகையர்வாள் வருகிறார் என்று அறிய வந்ததும், ஜனங்கள் பரபரப் படைந்து வழி விலகிக் கொடுத்தார்கள். தியாகையர் வாளும் மேடையைச் சமீபித்தார். உடனே, சபையில் பரம நிசப்தம் நிலவியது. தியாகையர் வாள் என்ன பேசப்போகிறார் என்பதைக் கேட்க, சபையோர் மிக்க ஆவலோ டிருந்தார்கள்.

தியாகையர்வாள் மேடைக்கு அருகே வருவதைக் கண்ட நடிகர், அப்படியே தாண்டிக் கீழே குதித்தார். ஐயர்வாளின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார். மிக்க பயபக்தியோடு. "சுவாமி, தாங்கள் இங்கே வந்திருக்கிற போது. நான் ஒரு ராகத்தை ஆலாபனம் செய்யத் தொடங்கியது சுத்த அதிகப்பிரசங்கித் தனமாகும். அதற்கு என்னை மன்னிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

இதற்குத் தியாகையர்வாள் சொல்லிய பதில் இதுதான்: "நீங்கள் மிக விசேஷமாய் ஆனந்த பைரவி ஆலாபனம் செய்வதாக, என் சிஷ்யர்கள் என்னிடம் சொன்னார்கள். அந்த ஆலாபனத்தை நானே நேரில் கேட்க வேண்டுமென்று வந்தேன். நீங்கள் பாடியதைக் கேட்டு, நான் பேரானந்தம் அடைந்தேன். உங்கள் திறமையைப் பற்றி என் சிஷ்யர்கள் என்னிடம் தெரிவித்ததற்கு, நான் சந்தோஷப் படுகிறேன்."

இதைக் கேட்டதும், இடியிடித்தாற்போல், சபையோர் கரகோஷம் செய்தார்கள். தியாகையர்வாள் தம்மீது சொரிந்த புகழ்மாரியால், நடிகர் பெருமை பூரித்து விட்டார். அவர் சிறிது தயங்கித் தயங்கி, "சுவாமி, எனக்குத் தாங்கள் ஒரு வரம் தர வேண்டும்" என்று கேட்டார்.

"தடையின்றித் தருகிறேன்" என்றார் தியாகையர்வாள்.

"நான் கேட்கும் வரம் இது தான்: இன்று முதல் தாங்கள் ஆனந்தபைரவி ராகத்தில் புதிய ஸாஹித்யங்கள் செய்யாதிருக்க வேண்டும். அப்போது, வருங்கால சந்ததியார், ஆனந்த பைரவியில் ஐயர்வாள் ஏன் அதிக ஸாஹித்யங்கள் செய்ய வில்லை என்று கேட்பார்கள். இந்த நிகழ்ச்சியை அவர்கள் ஞாபகப் படுத்திக் கொள்வார்கள். இவ்விதமாக, என் பெயரும் பிற்காலத்தில் நிலைத்துவிடும்" என்றார் நடிகர்.

இந்தத் துடுக்கான விசித்திர வரத்தைக் கேட்டதும், சகல ஜனங்களும் திகைத்துப்போய் விட்டார்கள். ஆனால், தியாகையர்வாள் மட்டும் புன் சிரிப்புப் பூத்தார். நடிகரின் சாதுர்யத்தை வியந்தார். "அப்படியே ஆகட்டும்" என்று தலையை ஆட்டிவிட்டு அகன்றார்.

இந்த வாக்களித்ததை மீறாமல், ஐயர்வாள் இதற்கப்புறம் ஆனந்த பைரவியில் சாஹித்யம் செய்வதை நிறுத்தி விட்டார். முன்னால் பாடிய மூன்று உருப்படிகளுமே மிஞ்சின.

# பரதேசப் படிப்பு

டாக்டர் தாரகனுத் தாஸ்
கோவிந்தராம் வாட்முல்

இந்திய அதிகாரிகள் கூட்டம் ஒன்றைப் பயிற்றுவித்தால், அவர்கள் சர்க்காரில் சில்லறைப் பதவிகளில் அமர்ந்து விடுகிறார்கள். தங்களுடைய எஜமானர்களாகிய பிரிட்டிஷாரின் நிலைமை வலுப்படுவதற்கு, இந்த அதிகாரிகள் ஒத்தாசை செய்கிறார்கள். நாம் பெறும் ஆங்கிலக் கல்வி இதற்குத் தான் உபயோகப்படுகிறது நம்மிடையே ஆங்கிலக் கல்வியைப் புகுத்தியவர்களின் மெய்யான நோக்கமும் இது தான். தேசியக் கல்வி முறையில் பழக்கமுள்ள எல்லா இந்திய அறிஞர்களும், இன்று இந்த உண்மையை ஒப்புக் கொள்கிறார்கள். ஜாதி, மத வித்தியாசங்கள் எவ்வளவோ இருக்கலாம். என்றாலும், தங்கள் நாட்டைத் தாங்களே ஆளும் பொருட்டுப் பதவிகளை வகிக்க வேண்டுமென்ற ஆசை எல்லாருக்குமே இருப்பது இயற்கையாகும். ஆகையால், மேலே சொன்ன வித்தியாசங்கள் காரணமாக, எந்த இந்தியனும் பதவி வகிக்க லாகாதென்று தடுக்க முடியாது. ஆகவே, தனக்குத் திறமை இருக்கிறதென்று காட்டுகிற எவனும் எந்தப் பதவியையும் வகிக்கலாம் என்று விக்டோரியா மகாராணியின் பிரகடனத்தில் கண்டிருக்கிறது. அப்படியிருந்தும், நம் நாட்டை உண்மையில் ஆண்டு வருபவர்கள் யார்? பிரிட்டிஷ் அதிகாரிகளே. திறமை என்று சொல்லியிருக்கிறதே, இதை எப்படிச் சோதிப்பது? ஆங்கிலப் படிப்புப் படிக்க வேண்டும். சிவில் சர்வீஸ் பரீட்சையில் தேற வேண்டும். இந்தப் பரீட்சைகள் இங்கிலாந்தில் மட்டுந்தான் நடைபெறும். பிரிட்டிஷ் கல்லூரிகளில் படிக்கிற மாணவர்களின் படிப்புத் தரத்துக்குச் சமமாக, அந்தப் பரீட்சைகளில் கேள்விகள் கடுமையாகவே இருக்கும்.

அந்நிய நாடுகளுக்குப்போய்க் கற்கும் நமது பரதேசப் படிப்பால வருஷம் ஒன்றுக்கு 11-கோடி ரூபாய் செலவாகிறதே; தேசத்துக்கு லாபம உண்டா? இதுபற்றி 'பம்பாய்க் கிரானிகி'ளில் உள்ள கட்டுரையின் சுருக்கம இது. ஆசிரியர்கள இருவரும் அமெரிக்காவில் குடியேறிய பிரபல இந்தியர்கள்.

உயர்ந்த பதவிக்கு வரவேண்டுமென்று ஆசைப் படுகிற இந்திய இளைஞர்களெல்லாம், தங்களுடைய ஆசை நிறைவேற வேண்டுமானால், இங்கிலாந்துக்குப் போய்த்தான் படித்துவர வேண்டும். அப்படிப் படிக்காவிட்டால், பெரிய உத்தியோகம் கிடைக்காது. இந்திய இளைஞர்களுக்கு இது தெளிவாகத் தெரிந்துபோய்விட்டது. இதனால் என்ன ஆயிற்றுத் தெரியுமா? சுமார் எழுபத்து ஐந்து வருஷங்களுக்கு முந்தியே, இந்தியாவிலிருந்து ஏராளமான மாணவர்கள் இங்கிலாந்துக்கு மேல்படிப்புக்காகப் போகத் தொடங்கினார்கள். இவர்களில் பலர், மிக உயர்ந்த பண்பாடு வாய்ந்த மேல் வகுப்புக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; அல்லது அதே மாதிரி

மத்திய தரமான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இந்த மாணவர்களுக்கு முதல் முதலில் உண்டான ஆசை என்ன வென்றால், சிவில் சர்வீஸ் உத்தியோகத்துக்குப் படித்து வரவேண்டு மென்பதுதான். படிப்பவர்களில் அநேகர் இந்தப் படிப்பை விருப்பத்தோடு படிக்க முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்பது மெய்தான். காலஞ் சென்ற ரொமேஷ் சந்திர தத நல்லபடிப்பாளி; அரசியல் வாதி; 'இந்திய நாகரிகத்தின் வரலாறு, என்ற நூலை எழுதியவர். காலஞ் சென்ற சுரேந்திரநாத் பானர்ஜி பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிகப் பிரசித்தி பெற்ற இந்தியப் பிரசாரகர்; 'உருவடைந்து வரும் நாடு' என்ற நூலை எழுதியவர்; அகில இந்தியத் தேசியக் காங்கிரஸ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். இவர்களும், இன்னும் பல பிரபல இந்தியர்களும் மட்டில், தங்களுடைய படிப்பில் மனம் வைத்துப் படித்தவர்களே யாவார்கள். பின்னல், இந்தியாவி லிருந்து பெருவாரிப் பேர் இங்கிலாந்துக்குத் தொழில் படிப்புப் படிக்கப் போனர்கள். நிரம்பப் பேர் சட்டப் படிப்புக்காகப் போனர்கள். இப்படிச் சட்டப் படிப்புப் படித்து வந்தவர்களில் பலர், இந்தியத் தேசிய இயக்கத் தலைவர்களாக ஆகியுள்ளார்கள். அரவிந்த கோஷ், மகாத்மா காந்தி, நேரு, தாஸ், போஸ் முதலியவர்கள் சட்டப் படிப்புக்காக மேல் நாடு சென்று வந்தவர்கள். இவர்களுக்குப் பின்னல் எத்தனையோ பேர் இங்கிலாந்துக்குப் போய் வந்திருக்கிருர்கள். அவர்கள் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இங்கிலாந்துக்குப் போனது எதற்காக? இங்கே உள்ளதைவிட அங்கே படிப்பு மேல் என்பதற்காக மட்டுமா? இல்லை, அதற்கு மட்டுமல்ல. பிரிட்டிஷ் கல்லூரிகளில் படித்து, பிரிட்டிஷாரின் பழக்க வழக்கங்களில் அடிபட்டு, பிரிட்டிஷ்காரரின் தொடர்பை நெடுகலும் வைத்துக் கொண்டே வந்தால், அதனல் மகத்தான நன்மைகள் கைமேல் கிடைக்கின்றன என்பதற்காகவும் தான். இப்படிச் செய்பவர்களுக்கு, மற்றவர்களை விட அதிகப்படியான சலுகை உண்டு. சம்பளமும் மிக அதிகம். படிப்பு முடிந்து இந்தியாவுக்குத் திரும்பிய உடனே, உத்யோகம் காத்துக் கொண்டிருக்கும்.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், சில இந்திய மாணவர்கள் ஜெர்மன் கல்லூரிகளில் படிக்கப் போனர்கள். ருஷ்ய-ஜப்பானியப் போர் நடந்த பிறகு, ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இந்திய மாணவர்கள் போனர்கள். ஜப்பானிலோ அமெரிக்காவிலோ, ஜெர்மனியிலோ, படித்து வந்தவர்களுக்கு, இந்திய சர்க்காரில் முக்கியமான எந்தப் பதவியும் கிடைப்பது அரிதா யிருந்தது. உண்மையைச் சொன்னல், இவர்களை அவநம்பிக்கையோடும், பட்சபாதத்தோடுந்தான், இந்திய சர்க்கார் நடத்தி வந்தார்கள். பிரிட்டிஷ் ஆதிக்கம் உள்ள கல்லூரியிலோ, ஸ்தாபனத்திலோ உத்தியோகம் பெறுவதற்கு, அமெரிக்கக் கல்லூரிகளில் படித்து முதல்தரமாய்த் தேர்ந்து டாக்டர் பட்டம் பெற்ற ஒரு நிபுணனைவிட, பிரிட்டிஷ் கல்லூரியில் சாதாரண பி.ஏ. படிப்புப் படித்தவனுக்கே அதிகச் சலுகை உண்டு. இந்தப் பட்ச

பாதம் இன்றும் ஓரளவுக்கு நிலத்தே இருக்கிறது. என்ற லும், அமெரிக்காவில் பயிற்சி பெற்று வந்த இந்தியர்களில் பலர், தாங்களாகச் சொந்த முயற்சி செய்து, இந்தியக் கைத் தொழில் வளர்ச்சிக்கு எவ் வளவோ சாதித் திருக்கிறார்கள் என்பது கவனிக்கத் தக்கது.

"யுத்தத்துக்கு முந்திய சாதா ரண வருஷங்களில், எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திலும், இங்கி லாந்தில் வசித்து வந்த இந்திய மாணவர்களின் எண்ணிக்கை சராசரி 2,000 ஆகும்" என்று, நம்பத் தகுந்தவர்கள் சொல்லு கிறார்கள். இங்கிலாந்தில் படிக் கும் ஒவ்வோர் இந்திய மாணவ னுக்கும், வருஷம் ஒன்றுக்கு, குறைந்த பட்சம் 250 பவுன் செலவு ஆகும் என்றால், அந்த இந்திய மாணவர்கள் அனைவருக்குமாக, வருஷம் ஒன் றுக்கு ஐம்பது லட்சம் பவுன், அதாவது 75 லட்ச ரூபாய், செல வழியவேண்டும். ஒரு வருஷத் தில் இங்கிலாந்திலுள்ள இந்திய மாணவர் செலவு செய்கிற இந் தத் தொகையைக் கட்டுச் செட் டோடு நல்லபடியாய்ச் செலவிட் டால், இதைக் கொண்டு இந்தியா விலேயே மேல் படிப்புச் சொல் லிக் கொடுக்கும் ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தி விடலாம். உதாரணமாய்ப் பாருங்கள்: 75 லட்சத்தில், 25 லட்சம் கட்டிடத் துக்கும் தளவாட சாமான்களுக் கும் போதும். மீதி 50 லட்சத் தைப் பக்காவான இந்தியக் கடன் பத்திரங்களில் போட்டு வைக்கலாம். அதில், வருஷத்துக்கு இரண்டரை லட்ச ரூபாய் வட்டி வரும். இந்த வருமானத்தோடு, கல்லூரிச் சம்பள வசூலையும் சேர்த்தால், பல தரமான பண்டி தர்களையும், போதகர்களையும் 50 பேர் வரைக்கும் கல்லூரியில் சேர்த்துக் கொண்டு, சம்பளம் கொடுத்துவர முடியும். இப்படிப் பட்ட ஸ்தாபனத்தைப் பத்தே வருஷத்தில் நிரம்பப் பிரமாத மாகக் கொண்டு வந்து விடலாம். ஆயிரக் கணக்கான இந்தியர் களுக்கு மேல்படிப்பு வசதியும் கிடைக்கும். இந்தியரின் செல்வம் வெளி நாட்டுக்குக் கொள்ளை போகாதிருக்கும்.

சென்ற 40 வருஷங்களில், குறைந்தது பதினாயிரம் இந்தி யார்களாவது இங்கிலாந்துக்குச் சென்றிருப்பார்கள். எதற்கு? சர்க்காரில் நல்ல உத்தியோகம் பெற வசதியான படிப்பைப் படிப்பதற் காகவும், தொழில் துறையில் வசதி தரக்கூடிய படிப்பைப் படிப்பதற் காகவும் தான். இங்கிலாந்தில் இந்த மாண வர்கள் தங்கள் படிப்பைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு, சுமார் மூன்று வருஷம் பிடிக்கும். இவர் கள் ஒவ்வொருவரும் வருஷம் ஒன்றுக்குச் சராசரி 250 பவுன் செலவு செய்திருக்கிறார்கள் (மாதம் ரூ 480). இப்படி, 20-ஆம் நூற்றாண்டில் இந்திய மாணவர் கள் இங்கிலாந்தில் செலவழித்த தொகை கொஞ்ச நஞ்சம் அல்ல. மொத்தம் 75 லட்சம் பவுன், அதாவது 11 கோடியே 25 லட் சம் ரூபாய் செலவழித்திருக்கிறார் கள். மேலே காட்டியபடி, கல் லூரி ஒன்றுக்கு 75 லட்சம் ரூபாய் விகிதம் செலவழித்தால், இந்திய மாணவரின் 'மேல் படிப்புக்காக' இங்கிலாந்தில் இதுவரை செல வழிந்த தொகையைக் கொண்டு, பதினைந்து கல்லூரிகளை இங்கே யே நிறுவியிருக்கலாம். லட்சக் கணக்கான இந்தியர்களுக்கு உயர்தரப் படிப்புக்கான வசதி

களும் எளிதில் கிட்டி யிருக்கும். இந்திய தேசமக்களின் திறமையும் கொழுகொழு வென்று வளர்ந் திருக்கும்.

இந்தியாவின் தேசியத் திறமையைப் பெருக்கி வளர்ப் பதற்காகவே, நம்மவர்கள் இங்கிலாந்துக்குப் போய்ப் படித்து வந்தார்கள் என்றால், இவ்வளவு கொள்ளைப் பணம் கரியானதற்குத் தகுந்த பிரதி பலன் எதுவும் உண்டாகிவிட வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இந்தியத் தலைவர்கள் இந்த விஷயத்தைச் சரியாய்ப் புரிந்துகொள்ள வில்லை என்றே தோன்றுகிறது. சர்க்காரைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. அது தெரிந்த விஷயந்தானே. ஆனால், நம் தலைவர் களே இன்னமும் பெரு வாரி யாக இந்திய மாணவர்களை வெளி நாட்டுக்கு அனுப்பி வைப்பதிலே முனைந்து நிற்பது சரியா?

தொழில் நுணுக்கக் கல்வியை உடனடியாகப் பயிற்றுவிப்ப தற்கு, சர்க்கார் ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். இதை நிறைவேற்றி வைப்பதற்கு, இந்த வருஷத்தில் 600 க்கு மேற் பட்ட இந்திய மாணவர்களை இங்கிலாந்துக்கும் அமெரிக்கா வுக்கும் அனுப்பிவைக்கப் போவ தாக, இந்திய சர்க்கார் கூறி யிருக்கிறார்கள். மத்திய சர்க்கா ரும் மாகாண சர்க்காரும் மாண வர்களை அனுப்பி வைப்பார்க ளாம். 1945-46 ஆம் வருஷத் திலே, 300-க்கு மேற்பட்ட இந் திய மாணவரை அமெரிக்கக் கல் லூரிகளுக்குப், தொழில் நுணுக் கம் கற்பிக்கும் கலாசாலை களுக்கும், இந்திய சர்க் காரின் ஏஜெண்டுகள் அனுப்பி வைப்பார்கள். இதில் சந்தேக மில்லை.

இந்தத் திட்டத்தின் முழு விவரமும் இப்போது சரியாய்த் தெரிய வில்லை. இப்படி அனுப் பப்படுகிற மாணவர்களுக்கு, பயிற்சிக் கூடங்களில் இடம் பெறுவது சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்வதற்காக, இந்தியக் கல்வி அதிகாரி ஒருவர் அமெரிக்காவுக்குப் போயிருக்கி றார் என்று மட்டும் தெரியவரு கிறது. அதோடு, பொறுப்பு வாய்ந்தவர்கள் இன்னொன்றும் சொல்லுகிறார்கள். வருகிற பத்து வருஷத்தில், அமெரிக்காவில் இந் திய மாணவர்கள் படிப்பதற் காக, வருஷத்துக்குப் பத்து லட் சம் டாலருக்குமேல் இந்திய சர்க் கார் செலவு செய்தாலும் செய் வார்களாம். இதே காரியத்துக் காக, இன்னும் அதிகமான தொகையை இங்கிலாந்திலும் செலவழிப்பார்களாம்.

இப்படியாக, இந்திய சர்க்கார் நம்மவரின் பரதேசப் படிப் புக்காக, சில வருஷங்களில் வரி செலுத்தும் இந்தியருடைய பணத்தில் இரண்டு கோடியே ஐம்பது லட்சம் டாலரை அந்நிய நாட்டிலே செலவு செய்யப் போகிறார்கள். ஆனால், மேல் படிப்பு எதற்காக? நாட்டு மக்க ளின் திறமையை வளர்ப்பதற் காக; அப்படித்தானே? சர்க் கார் உத்தியோகம் பெறுவதற் காக மட்டும் அல்ல. வருஷா வருஷம் நூற்றுக் கணக்காக இந்திய மாணவரை வெளி நாடு களுக்கு அனுப்புவதால் என்ன பலன் விளைந்துவிடப் போகிறது?

T.K.S. சகோதரர்களின்
நாடகம்.

திருச்சி
முனிசிபல்
ஹாலில்

# 3-11-45

# தீபாவளி யன்று

## ஆரம்ப விழா



# பில்ஹணன்

**By A. S. A. சாமி**

ஞாயிறு, புதன் மாலை 6-30
மற்ற நாட்கள் இரவு 9-30

அடுத்த முகாம்........ : கோவை

எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

மோஹன்ராம்

# பெட்ஷீட்டுகள்

# டவல்கள்

•

*Stockists :*

## மனோஹரன் ஸ்டோர்ஸ்

*181, கீழவாசல் : : மதுரை*

தந்தி : 'Harantalky' போன் : நெ. 219



# கதைக் கடல் • மாதம் ஒரு புத்தகம்

*பதிப்பாசிரியர் :* தி. நா. சுப்பிரமணியன்

உயர்தரமான கதைகள், அயல் நாட்டுக் கதைகளின் மொழிபெயர்ப்பு, நாடகங்கள், கவிதைகள் ஒவ்வொரு புத்தகத்திலும் அடங்கியிருக்கும்

சுமார் 80 பக்கம். உயர்ந்த காகிதம்.

தனிப் பிரதி

அணா 12

(தபால் செலவு தனி)

ஒரு வருஷத்தில் வெளிவரும் 12 பிரதிகளுக்கு

ரூபாய் ஒன்பது

(தபால் செலவு கிடையாது)

(விரைவில் வெளிவரும்)

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை : சென்னை

கும்பகோணம்

டி.எஸ்.ஆர். & கம்பெனியின்

கோகுல் கூந்தல் தைலத்தை
கூந்தல் வளர்ச்சிக்கும்

சிரசின் குளிர்ச்சிக்கும்
சந்தனாதி, அரைக்கீரை விதைத் தைலங்களையும்
உபயோகியுங்கள்

மதராஸ் ஸிட்டி ஏஜண்டு :
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி
மதராஸ்

ஸ்டாக்கிஸ்ட் :
B. பால பட்டாபி
வைஸ்யாள் தெரு
கோயம்புத்தூர்

சகல விதமான
வலிகளையும்
10 நிமிஷங்களில்
நிறுத்த







# அவனுடைய வெற்றிக்கு இப்போதே திட்டம் போடப்படுகிறது

**அவனுடைய தகப்பனார் அவனுக்குக் கல்வி நிச்சயமாய்க் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்**

அவன் ஒரு சின்ன பையன் தான். ஆனால், அவனுடைய தகப்பனார் அவன் கல்விக்குப் பணச் செலவு ஆகுமென்று எதிர்பார்த்து, அவன் பள்ளிச் சம்பளத்துக்குப் பிடிக்கும் செலவை புத்திசாலித்தனமாய் வட்டிக்குப் போட்டுவைத்திருக்கிறார். அதே தொகை 12 வருஷத்து வட்டியினால் 50 சத வீதம் அதிகமாகிறது. பையன் பெரியவனாகும்போது அந்தத் தொகையைக் கொண்டு அவன் தனது சர்வ கலாசாலைப் படிப்பை முடித்துவிடுவான். எனவே, பூர்த்தியானதும் பயனுடையதுமான கல்வியை ஆதாரமாகக் கொண்டு, அவன் மனோ திடத்தோடும் நம்பிக்கையோடும் உலகத்தில் காலெடுத்து வைக்கலாம்.

அவன் தனது தகப்பனுக்கு எவ்வளவு கடமைப் பட்டிருக்கவேண்டும்! அதுபோலவே அவனுடைய தகப்பனும் தமது சேமிப்புகளை நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் வட்டிக்குப் போட்டுவைக்கத் தாம் செய்துகொண்ட தீர்மானத்துக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கவேண்டும். அதே மாதிரி நீர் உமது மகனுக்குச் செய்யமுடியுமா? அது உம்மைப் பொறுத்ததாகும்.




அறிவுள்ள தகப்பன்மார்களைப் பின்பற்றி உமது வருமானத்தில் மிச்சம் பிடித்ததை......

## நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் வட்டிக்குப் போட்டுவைக்கவும்.

★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.

★ தனிவட்டி 4½ சத வீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.

★ இரண்டு வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அதுவரையில் சேர்ந்துவந்த வட்டியுடன் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.

AAA 124




Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd.,
(Shanti Press, 115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan

Regd. No. M. 4162 SHAKTI November 1945



| சோனல் | பயோ - சரசா |
|---|---|
| | **IODISED SARASAPARILLA**<br>ரத்த சுத்தி திராவகம் |
| படை, சொறி சிரங்கு, முகப் பரு, சேற்றுப்புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய சர்ம ரோகங் களுக்கும் சிறந்த களிம்பு. | துர்நீர் சம்மந்தமான சொறி சிரங்கு, கட்டி, மேகப்பத்து, கரப்பான் முதலியவைகளுக் கும், வெட்டை சம்மந்தத்தால் ஏற்படும் கை, கால், இடுப்பு வலி கள், பிடிப்பு, பக்ஷவாதம், மொழி சூலை முதலிய சகல வியாதி களுக்கும் சிறந்த மருந்து.<br>பாட்டில் 1-க்கு விலை **2-8-0** |

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

ஏஜண்டுகள்

**T. N. C. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்**

மருந்து ஷாப் : : மதுரை

**சகல விதமான வலிகளையும் 10 நிமிஷங்களில் நிறுத்த**



## சோவியத் ருஷ்யா

வெ. சாமிநாத சர்மா எழுதியது

✱

உலகத்திலேயே ஒரு புதுமையான புரட்சி மூலம், புதுமையான வாழ்வு நடத்தும் சோவியத் ருஷ்யாவின் புரட்சிச் சரித்திரம், புதுமை வாழ்க்கை, யுத்தத் தலையீடு, யுத்தத்தில் வெற்றி முதலிய சகல விவரங்களையும் விரிவாக - அருமையாக நல்ல ஆராய்ச்சியோடு இந்த இரண்டாம் பதிப்பில் ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

✱

சுமார் 320 பக்கம்
12 பக்கம் படங்களுடன்
கலிகோ பைண்டு

ரூபாய் நாலரை

தபால் செலவு தனி

**சக்தி காரியாலயம்**
சென்னை : மதுரை
கோயமுத்தூர் : திருநெல்வேலி

## இந்தியன்
### பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
நார்த் பீச் ரோட், மதராஸ்

●

*மதராஸ் ஆபீஸ்கள்:*

எஸ்பிளனேட், மவுண்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட
- மூலதனம் ரூ. 68,71,800
செலுத்தப்பட்ட மூலதனம்
- - - ரூ. 41,09,478
ரிசர்வ் நிதி ரூ. 56,15,009
டிபாஸிட்ஸ் - ரூ. $12\frac{1}{2}$ -
- - - கோடிக்குமேல்

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்

செக்ரெடரி:
**N. கோபால அய்யர்**